33°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான வானிலை காணப்படும்.

# உதயன்

பக்கம் 24

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்., வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 123 | வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 15, சனி 29.03.2014

29 MAR 2014

உள்ளே...



தி.மு.கவிடம் மன்னிப்புக் கோர காங்கிரஸுக்கு அவசியமில்லை

பக்கம் 06



யூ டியூப் துருக்கியில் தடை

பக்கம் 07



எதிரணியின் தடைகளைத் தகர்த்து கோல் போட்ட கோல் காப்பாளர்

பக்கம் 22

# ஐ.நா. தீர்மானத்துக்கு பெரும் வரவேற்பு வடக்கில்

## இந்தியாவின் செயல்கண்டு மக்கள் கடுங்கொதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கையின் இறுதிப் போரில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சுயாதீனமான விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறைவேற்றி உள்ள தீர்மானத்தை இலங்கை ஜனாதிபதியும் அரசும் நிராகரித்துள்ள நிலையில், வடக்கு மக்கள் அதனை பெருமெடுப்பில் வரவேற்றுள்ளனர். அதே நேரத்தில் இந்தத் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் செம்மையாக நடைமுறைப்படுத்த முடியுமா என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிடுகின்றனர். ஆனால் தீர்மானம் முழுமையாகவும் உறுதியாகவும் நடைமுறைப் படுத்தப்படுவதை அவர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். இதற்கிடையே இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காமல் விட்டமை குறித்து கடும் கோபமடைந்துள்ள வடக்கு மக்கள். போர்க் காலத்தில் இந்தியா செய்தது போன்ற மற்றொரு துரோகம் இது என்றும் கடுமையாகச் சாடியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராக, அமெரிக்காவினால் நேற்றுமுன்தினம் சமர்பிக்கப்பட்ட தீர்மானம் வெற்றி பெற்றுள்ளது. குறித்த தீர்மானம் வெற்றி பெற்றுள்ளமை தொடர்பிலும், தீர்மானத்தின் வாக்கெடுப்பில் இந்தியா பங்கெடுக்காமல் ஒதுங்கிக் கொண்டமை தொடர்பிலும் 'உதயன்' பல தரப்பினரிடம் கருத்துக்களைக் கேட்டது.

சி.சிவரூபன் (வைத்தியர்): நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் வரவேற்கதக்கது. கால இழுத்தடிப்பு இன்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

21ஆம் பக்கம் பார்க்க

# நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு எதிரானதல்ல

## அமெரிக்கா விளக்கம்



கொழும்பு, மார்ச் 29

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்ல என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிசன் "இந்தத் தீர்மானம் இலங்கை மக்களின் நலனுக்காகவே தாக்கல் செய்யப்பட்டது" என்று தெரிவித்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் சபை

21ஆம் பக்கம் பார்க்க

# சிறந்த எதிர்காலத்துக்கு இதுவே சரியான வழி

## இலங்கைக்கு பிரிட்டன் அறிவுரை



டேவிட் கமரூன் - கோப்புப் படம்

லண்டன், மார்ச் 29

இலங்கையின் சிறந்த எதிர்காலத்துக்கு இதுவே சிறந்த வழியாகும். போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் நம்பத் தகுந்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்.

21ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா.சபையின் தீர்மானமே மக்களின் பெரும் நம்பிக்கை

## சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

ஜெனிவா, மார்ச் 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், போரால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசு தனது அதிருப்தியாளர்களைத் தேடி அழிப்பதை விடுத்து, ஐ.நா.

23ஆம் பக்கம் பார்க்க

# வட்டுவில் கைதானவரிடம் ஆவணங்கள், ரவை மீட்பாம்

## பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வட்டுக்கோட்டையில் கடந்தவாரம் இடம்பெற்ற சுற்றி வளைப்பின்போது கைது செய்யப்பட்டவரிடம் இருந்து ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகளும், தேடப்பட்டுவரும் கோபி தொடர்பான முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

21ஆம் பக்கம் பார்க்க



# தீர்மானம் தீர்வாகாது

## - ஆஸ்திரேலியா

கொழும்பு, மார்ச் 29

போர்க்குற்ற விசாரணைகளை நடத்துவது இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த வழியாக அமையாது என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலியா பிஷப்.

23ஆம் பக்கம் பார்க்க

# போலியான துப்பாக்கிகளுடன் சொகுசுக் காரில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 29

போலித்துப்பாக்கிகள், போலியான வாகன இலக்கத் தகடுகள் மற்றும் கையுறைகள் என்பவற்றுடன் சொகுசுக் காரில் பயணித்துக்கொண்டிருந்த 5பேரை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராயில் கடந்த வாரம் சொகுசுக் காரில் சென்றவர்கள் தம்மைச் சி.ஐ.டியினர் என்று கூறி துப்பாக்கிகளைக் காட்டி

21ஆம் பக்கம் பார்க்க

# அமைச்சர் டக்ளஸ் தலைமையிலான குழு நேற்று கதவுடைத்து அடாவடி

## வலி. கிழக்குப் பிரதேச சபையில் அநியாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வலி. கிழக்குப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபக் கதவு பொலிஸார் முன்னிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினரால் அடித்து உடைத்துத் திறக்கப்பட்டது.

இது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டபோதும் நேற்றிரவு வரையில் இந்த சட்டவிரோதக் காரியத்தில் ஈடுபட்ட எவரும் கைது செய்யப்படவோ விசாரிக்கப்படவோ இல்லை.

மாநாட்டு மண்டபத்தின் கதவைத் திறக்கமுடியாது என்று சபையின் செயலாளர் தெரிவித்ததை அடுத்து அமைச்சர் தலைமையிலான குழுவினர் மண்டபக் கதவின் பூட்டை அடித்து உடைத்துத் திறந்தனர்.

21ஆம் பக்கம் பார்க்க

# 44 பேர் இதுவரை கைது

கொழும்பு, மார்ச் 29

யாழ்ப்பாணம் மற்றும் புதுக்குடியிருப்பு உடையார்கட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளவர்களுடன் சேர்த்து, வடக்கில் இது வரையில் 44 பேர் பயங்

23ஆம் பக்கம் பார்க்க

# பொலிஸாரின் பற்றாக்குறையே இராணுவத்துக்கு காரணம்

## யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.குடாநாட்டில் உள்ள பொலிஸாரின் எண்ணிக்கை போதாமலுள்ளது. அவ்வாறே அவர்களுக்கான வாகன வசதியும் பற்றாக்குறையாகவுள்ளது. [illegible] அதனாலேயே இங்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இரவு ரோந்து மற்றும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர் - இவ்வாறு தெரிவித்துள்ளார்

21ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதியின் விசேட பணிப்பில் தமிழக மீனவர்கள் திடீர் விடுதலை

## நன்றிக்கடன் தீர்க்கிறதா இலங்கை அரசு?

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்பின் பேரில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்து இந்திய மீனவர்களும் (98 பேர்) நேற்று விடுதலை செய்யப்பட்டனர். அவர்களுடைய 21 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

[illegible] விடுவிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விரைவில் தமிழகம் திரும்பவுள்ளனர்.

21ஆம் பக்கம் பார்க்க

# தமிழக மீனவர்களின் 24 படகுகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லைதாண்டி மீன்பிடித்தமைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர்களது 24 படகுகள் நேற்று இந்திய மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்தப் படகுகளை மீட்டுச் செல்வதற்காக தமிழகத்தில் இருந்து 72 மீனவர்கள் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் இரவு இலங்கைக் கடற்பரப்பை வந்தடைந்திருந்தனர்.

23ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெரும் கவலையளிக்கிறது ஐ.நா. சபையின் தீர்மானம்

## கரு ஜெயசூரியா கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 29
இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா ஐ.நா.சபையில் சமர்ப்பித்திருந்த தீர்மானம் வெற்றி பெற்றுள்ளமை பெரும் கவலையளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய. இவ்வாறான சந்தர்ப்பங்களில் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கருத்திற்கொள்ளாது அரசுக்கு ஆதரவு வழங்குவது தான் சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை தொடர்பான அமெரிக்க பிரேரணை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் வெற்றி பெற்றமை உண்மையில் கவலையளிக்கின்றது. இதற்கு முன்னரும் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது நாட்டில் ஜனநாயகம் நீதியை நிலைநாட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் கோரிக்கை விடுத்தது. ஆனால் அரசு அதனை கண்டுகொள்ளவில்லை.

17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை விடுத்து 18ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து நாட்டில் சுயாதீன நிறுவனங்களை அரச இயந்திரமாக்கியதுடன் ஜனநாயகத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தியது.

அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் இலங்கையை அண்மித்துள்ள மற்றும் ஜனநாயக நாடுகள் விலகிச் செல்லும் நிலை உருவாகும் - என்று தெரிவித்தார். (ற-10)

# பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## வட்டு. கொலையின் எதிரொலி

யாழ்ப்பாணம், மார்ச் 29
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடந்த கிரிக்கெட் ஆட்டத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தின் போது அசிரத்தையாக இருந்தனர் என்று கூறப்படும் பொலிஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் அவர்கள் குற்றவாளிகளாக இனங்காணும் பட்சத்தில் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அதன் போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் அங்கு கூறும்போது,

"குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற வேளையில் இரண்டு கல்லூரிகளின் அதிபர்களும் மைதானத்தில் நின்றுள்ளார்கள். அவர்கள்கூட கைகலப்பை நிறுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது கவலைதரும் விடயம்.

குறிப்பிட்ட கொலையைக் கண்ணால் கண்ட சாட்சிகளாக ஐந்து பேர் பொலிஸ் நிலையம் வந்திருந்தார்கள். அவர்களில் மூவர் சம்பவத்தைத் தாம் பார்க்கவில்லை, அடுத்தவர்கள் கூறியே தெரியும் எனக் கூறியுள்ளனர். அதனால் குற்றவாளிகள் சுலபமாகத் பிச்செல்லக் கூடிய நிலைமை எற்பட்டுள்ளது. வலுவான சாட்சிகள் இருந்தாலே குற்றவாளியை இனங்காணவும், தண்டனை பெற்றுக் கொடுக்கவும் முடியும்" - என்று தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே 'பொன் அணிகளின் போர்' எனப்படும் துடுப்பாட்டப் போட்டி இடம்பெற்றது. அதன்போது குரு நகரைச் சேர்ந்த தர்சன் அமல்ராஜ் (வயது - 23) என்பவர் மைதானத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அதன்போது பொலிஸார் கைகலப்பைத் தடுக்க தவறிவிட்டனர் என்று அங்கிருந்தவர்களால் குற்றஞ் சாட்டப்பட்டது. (ற-4-86)

## சிறுமிகள் துஷ்பிரயோகம் இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ். புறநகர் மற்றும் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுகளில் இரண்டு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார். நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.புறநகர்ப் பகுதியில் 14 வயதுடைய சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார். அவ்வாறே பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் 11 வயதுடைய சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார். இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ற-4)



ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்த பிரிட்டனின் மூத்த அரசியல்வாதி ரொனி பெனின் இறுதி வணக்க நிகழ்வு பிரிட்டனின் வெஸ்ட் மின்ஸ்டர் செயின்ட் மார்கரெட் தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஈழத் தமிழர்களுக்காக, பிரிட்டனில் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த அரசியல்வாதிகளில் மிக முக்கியமானவர் ரொனி பெனின். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு, புலம் பெயர் தமிழர்கள் பிரிட்டனில் நடத்திய போராட்டங்களிலும் அவர் பங்கெடுத்திருந்தார்.
88 வயதான அவர் இருவாரங்களுக்கு முன்னர் லண்டனில் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில், ஏராளமான தமிழர்கள் கலந்து கொண்டனர். (ற)

# பாதுகாப்புக் கருதியே விபூசிகா கைதாம்

யாழ்பாணம், மார்ச் 29
தருமபுரத்தில் ஜெயக்குமாரியையும் அவரது மகளான விபூசிகாவையும் பொலிஸார் கைது செய்து அவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரமும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், விபூசிகாவை அவரது பாதுகாப்புக் கருதியே கைது செய்ததாகக் கூறுகின்றார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் கூறும்போது:-

"விபூசிகா அவரது பாதுகாப்புக் கருதியே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்தவுடன் அவரை வைத்துப் பாதுகாக்க அவரது உறவினர்கள் யாராவது உள்ளனரா என்று அங்கு அயலில் உள்ளவர்களிடம் பொலிஸாரால் கேட்கப்பட்டது. ஆனால் அங்கு யாரும் இருக்கவில்லை. அதனால் அவரைத் தாயாருடன் பொலிஸார் கைது செய்தனர். அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, தற்போது சிறுவர் இல்லத்தில் விடப்பட்டுள்ளார்.

விபூசிகாவை அவரது உறவினர்கள் யாராவது பாதுகாப்பதாக உறுதியளித்தால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அவர்களிடம் சிறுமியான விபூசிகாவை ஒப்படைப்பதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பர் - என்று தெரிவித்தார்.

பொலிஸாரால் தேடப்பட்டு வருபவரான கோபி என்பவர் ஜெயக்குமாரியின் வீட்டில் தங்கியிருந்தார் என்றும் அவரைக் கைது செய்யச் சென்ற பொலிஸார் மீது சந்தேக நபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்று தெரிவித்துமே அவர்கள் இருவரையும் பயங்கரவாதப் பொலிஸார் கைது செய்திருந்தனர். (ற-4-86)

# குற்றங்களைத் தடுப்பதற்கு சிவில் பாதுகாப்பு குழு தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்.குடாநாட்டில் கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் துஷ்பிரயோகம் என்பன மீண்டும் மோசமாக அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த கிராமங்கள் தோறும் உள்ள விழிப்புக் குழுக்கள் சிறப்பாக இயங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

"யாழ்.குடாநாட்டில் பரவலாக இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. அவ்வாறு குற்றச் செயல்களைத் தடுக்க அவற்றில் ஈடுபடுபவர்களைக் கண்டறிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் கட்டாயமாக இருக்க வேண்டும். அவர்கள் சமூகத்துக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.

அதிகரித்துள்ள குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பங்கு பெரிய பங்குவகிக்கிறது" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-4)

# சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்.மார்ச்.29
சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் சண்முகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். சிங்கப்பூர் அரசின் அனுசரணையுடன் குடாநாட்டில் செய்யப்படுகின்ற வேலைத்திட்டங்களை பார்வையிடுவதற்காக சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவ்ரது குழுவினர் வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாண பொது நூலகம் மற்றும் பாடசாலைகளை நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளனர். (ற-14)

# யுவதி வன்புணர்வு சம்பவம் மோட்டார் சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம்இ மார்ச் 29
வடமராட்சி துன்னாலையில் யுவதி ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தியவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைவிடப்பட்ட வீடு ஒன்றிலிருந்து நெல்லியடிப் பொலிஸார் மீட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று இது தொடர்பான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விளக்கமறியலில் உள்ள சந்தேக நபருக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த போது யுவதி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமைக்கு உரிய குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோரி மகளிர் அமைப்பினர் நீதிமன்றத்தின் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வன்புணர்வுச் சம்பவம் தொடர்பில் பாலேந்திரன் பிரபாகரன் என்பவரே கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவர் தேடப்பட்டு வருகின்றனர். (ற-4)

# பண்டாரவன்னியன் நாடகத்தை பிரபாகரனின் நாடகம் என்றனர்

## அதனாலேயே விசாரணை என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 29
ஊர்காவற்றுறையில் அண்மையில் இடம்பெற்ற பண்டாரவன்னியன் நாடக விழாவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தொடர்பான நாடகம் என்று இனந்தெரியாத சிலர் கொழும்பு தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய தவறான தகவல் வழங்கியுள்ளனர். அதன் காரணமாகவே பொலிஸார் அங்கு சென்று விசாரணை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது என்று சம்பவம் நடந்து சுமார் ஒருமாதம் கடந்து விட்ட நிலையில் விளக்கமளித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதுகுறித்துக் கூறுகையில்:-

"அங்கு குறித்த விழாவை நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் அங்குள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது. அதனை அங்குள்ள நான்கு இளைஞர்கள் அதனைப் பார்வையிடச் சென்று அதில் நடிக்கும் பெண்கள் சிலருடன் பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை பாடசாலை நிர்வாகத்தினர் வெளியேற்றியுள்ளனர். அதனால் அவர்கள் அந்த இடத்துக்கு கல் எறிந்துள்ளனர். அதனால் அவர்கள் அந்தப் பகுதியிருந்து தூர அனுப்பப்பட்டுள்ளனர்.

அதனால் அவர்களே கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவித்திருக்கல்லாம் என்று நாம் கருதுகிறோம். அந்த நாடகவிழா தொடாபில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கொழும்பு தலைமையகத்திலிருந்து எமக்கு உத்தரவு வந்தது.

அதனாலேயே ஊர்காவற்றுறைப் பொலிஸார் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். குறித்த பாடசாலை அதிபரிடம் சென்று பொலிஸார் விசாரணை மேற்கொண்ட போது அது பிரபாகரன் பற்றியதல்ல என்று அதிபர் கூறியுள்ளார். அது தொடர்பில் எழுத்தில் தர அவர் மறுத்து விட்டார். அதனால் பொலிஸார் அது தொடர்பில் அங்கிருந்து அவற்றை அவதானித்துச் சென்றிருந்தனர்" - என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவ்வாறான சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று பொலிஸார் கூறியிருந்தனர். (ற-4-86)

## பிறரை தாக்கிய குற்றச்சாட்டில் 15 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 29
பிறருக்கு அடித்துக் காயப் படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

"மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 8 பேரும், மது போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 6 பேரும், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 9 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும், கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும், பண மோசடி தொடர்பாக ஒருவரும், அத்துமீறி வீடுபுகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும், திருடப்பட்ட பொருள்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும், சூழல் மாசடையும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார். (வ-4-86)

## நெல்லியடியில் சைக்கிள் திருட்டு

நெல்லியடி, மார்ச் 29
நெல்லியடியில் உள்ள நிறுவனம் ஒன்றில் கடமைபுரியும் பெண் ஒருவரின் சைக்கிள் கடந்த புதன்கிழமை திருட்டுப் போய் விட்டதாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகத்துக்கு வெளியே விடப்பட்டிருந்த நிலையிலேயே சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஓ-35)

# வலி.வடக்கு பிரதேச சபையினர் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

### சுகாதாரப் பரிசோதகரை சபைக்கு வழங்குமாறு கோரி

யாழ்ப்பாணம், மார்ச் 29
வலி.வடக்கு பிரதேசசபைக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரை வழங்குமாறு கோரி வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில்; ஈடுபட்டனர். வலிகாமம் வடக்கு, நல்லூர், வலி.தென் மேற்கு, கரைச்சி ஆகிய பிரதேசசபைகளில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் உள்வாங்கப்பட்டமைக்கு அவர்கள் எதிர்ப்பும் தெரிவித்தனர்.

ஆளுநரே! உள்ளூராட்சி அதிகாரங்களில் தலையிடாதே, உள்ளூராட்சி அதிகாரங்களைப் பறிக்காதே!, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மீண்டும் எமது பிரதேசசபைகளுக்கு வழங்கு, சபைகளைச் சுயாதீனமாக இயங்கவிடு! போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அவர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் அங்கு உரையாற்றுகையில்;
இலங்கையில் மூன்று ஆட்சி பீடங்கள் உள்ளன. நாட்டை ஆள்வது நாடாளுமன்றம், மாகாணத்தை ஆள்வது மாகாணசபை, பிரதேசத்தை ஆள்வது பிரதேசசபை. ஒரு பிரதேசத்தில் அதன் ஆட்சிப் பொறுப்பு முற்றுமுழுதாக பிரதேச சபைக்கே உண்டு. அரச அதிகாரிகள் அந்த நிர் வாகத்தின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும். மாநகர சபையில் சுகா தார வைத்திய அதிகாரி முதல்வருக்குக் கீழே செயற்படுகின்றார். உணவு கையாளும் நிலையங்கள், கழிவகற்றல், புதிய கட்டட அனுமதி போன்ற செயற்பாடுகள் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படுவன.

அவற்றைச் சரிவர ஆற்றுவதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரது சேவை கட்டாயம்தேவை. சுகாதார வைத்திய அதிகாரிக்கு அதிகாரக் கையளிப்பை மேற்கொள்பவர் தவிசாளரே! இங்கு தவிசாளரின் அனுமதியின்றி சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதேச சபைகளில் அதன் அதிகாரங்கள் பிடுங்கியெடுக்கப்படுவதை சுகாதார அமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சரும் பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் வெட்கக்கேடான விடயம்;.

பொலிஸார் மூலம் உத்தரவுகளைப் பிறப்பித்து நிர்வாகத்துக்கு முரணான வகையில் முடிவுகளை மேற்கொண்டமை ஏன்? நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொதுச்சுகாதாரப் பரிசோதகருக் கும் - சுகாதார வைத்திய அதிகாரிக்கும் இடையிலான பிரச்சினையை நீதிமன்றம் கொண்டு சென்றமை நிர்வாக நடவடிக்கையா? நீதிமன்றில் வழக்கு நிலுவையில் உள்ள போது இவ்வாறான செயற்பாடுகள் நீதிமன்றை அவமதிப்பதாகும். அவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் மாகாண சபைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகும். - என்றார்.

இதேவேளை சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் அங்கு உரையாற்றுகையில்;
சுகாதார அமைச்சர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்களுடனான கலந்துரையாடலில் பிரதேச சபைகளுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆளணியை வழங்குவதற்கு 6 மாத கால அவகாசம் விதிக்கப்பட்டது. ஆனால் ஆளுநரின் உத்தரவின்போரில் பொலிஸாரின் உதவியுடன் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணி மனைகளின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன.

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க 4 ஆம் பாகத்தின் 78:1, 78:2 பிரதேசசபைச் சட்டம், உள்ளூராட்சி சுகாதார நிர்வாக அதிகாரங்கள் பிரதேச சபைத் தவிசாளர்களுக்கே உரியது என்று குறிப்பிடுகின்றது. வீடமைப்பு வருமான நகர அபிவிருத்திச் சட்டமும் பொதுச் சுகாதாரம், உணவு கையாளும் நிலையங்கள் என்பன பிரதேச சபையின் கீழே உள்ளன என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு பிரதேச சபைகளுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள நிலையில் அதிகாரங்கள் ஒவ்வொன்றாக பிடுங்கியெடுக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் எமது கட்டுப் பாட்டிலிருந்த மின் விநியோகம், முன்பள்ளி போன்றன பிடுங்கியெடுக்கப்பட்டன. தற் போது சுகாதார நடவடிக்கைகள் பிடுங்கி எடுக்கப்படுகின்றன. அவர்களின் இவ்வாறான செயற்பாட்டால் மக்கள் பணியை எம்மால் ஆற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது அதிகாரங்களை மீள ஒப்படைக்காவிட்டால் வடக்கிலுள்ள சகல சபைகளும் இணைந்து காலவரையறையின்றி சுகாதாரச் செயற்பாடுகளை முடக்குவதற்குத் தயங்கமாட் டோம் - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த உறுப்பினர் வ.முருகேசு:
மக்களுக்குச் சேவையாற்றவென உருவாக்கப்பட்ட சபைக்கோ தவிசாளருக்கோ சுகாதார வைத்திய அதிகாரி மதிப்பளிப்பதில்லை. அவர் தவறான செயற்பாடுகளை மேற்கொள்வாராயின் சபையில் அவருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டிவரும்-என்றார்.
(வ-4)

புதிய.. அதிரடியான...
அபூர்வமான.. அரிய...
பொன்னான... வாய்ப்புக்ககள் !!

• கனடா மிகப்புதிய வரவு
1. வைத்திய உத்தியோகத்தர், தாதிகள், இயனமருத்துவர், மருந்தாளர் தனியார்துறை/ அரசதுறை 2 வருட அனுபவம். IELTS தேவையில்லை. 2 வருடத்தில் PR பெறலாம் 50 வயதிற்குக் கீழ்.
2. மின்னிணைப்பாளர், பிளம்பர், தச்சர், வெல்டர் IELTS தேவையில்லை. 50 வயதிற்குள்
3. சமையலாளர் IELTS தேவையில்லை 50 வயதிற்குள்

★ இத்தாலி இலகுவில் போகலாம்.
★ தனி, குடும்பமாகச்செல்ல பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டிய தேவையில்லை.
★ Student Visa, Visit Visa, நம்பகரமான கை தேர்ந்தவர்கள் நாங்கள் மட்டுமே!

7 நாள்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 790 4941 (46188)(45.6.3)



## பாலின் விலை ஏப்ரல் முதல் அதிகரிப்பு

அச்சுவேலி, மார்ச் 29
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், (யாழ் கோ) பாலின் விலையை ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 10 ரூபாவால் அதிகரித்துள்ளது. சங்கம் ஒரு லீற்றர் பாலை 70 ரூபாவுக்கு விற்பனை செய்யவுள்ளதாகவும், பாலின் கொள்வனவு விலை 58 ரூபா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பால் கொள்வனவு விற்பனையில் நிறுவன மயப்பட்ட நிலையில் செயற்பட்டு வரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், இதுவரை காலமும் ஒரு லீற்றர் பாலை 49 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 50 ரூபாவுக்கு விற்பனை செய்து வந்தது. ஏப்ரல் முதலாம் திகதி முதல் பாலின் விலையை அதிகரிப்பது என்று சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 'நெஸ்லே' நிறுவனமும், கார்லிக்ஸ் நிறுவனமும் பால்கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றின் பால் கொள்வனவு விலையிலும் பார்க்க யாழ். கோவின் கொள்வனவு விலை மேல் நிலையில் உள்ளது.

கால்நடைகளுக்கான தீவன விலை அதிகரிப்பு மற்றும் கள நிலையை கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பண்ணையாளர்கள் பாதிப்பு அடையாத வகையில் பாலின் விலையில் அதிகரிப்புச் செய்யப்பட்டமை பலரும் வர வேற்றுள்ளனர். தேசிய ரீதியில் பாலின் கொள்வனவு விலை 48-50 ரூபாவாக இருக்கும்போது, யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பாலின் கொள்வனவு விலையை 58 ரூபாவாக அதிகரித்து கொள்வனவு செய்யத் தீர்மானித்திருப்பது பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் என்று கூறப்படுகின்றது. (வ-11)


## மனிதநேய ஆண்டாக 2014 ஆம் ஆண்டு

### *யாழ்.மாநகரசபையால் பிரகடனம்*

யாழ்ப்பாணம், மார்ச் 29
2014 ஆம் ஆண்டை பொது மக்களின் மனித நேய ஆண்டாக யாழ்.மாநகர சபை பிரகடனப்படுத்தியுள்ளது. பொது மக்களுக்கான சேவையை குறையின்றியும் சிரமமின்றியும் விரைவாக நிறைவேற்றிக்கொடுப்பதற்கு ஏதுவாக 2014 ஆம் ஆண்டை மனித நேய ஆண்டாக யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. இதற்கமைவாக மக்களுக்கான சேவை இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன். கர்ப்பிணிப் பெண்கள். விசேட தேவைக்குடையவர்கள், நோயாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (வ-14)

# தாய் குழந்தையைக் கொல்வது போன்றது இந்தியாவின் செயல்

## கொதிக்கின்றார் கருணாநிதி



கருணாநிதி

சென்னை, மார்ச் 29
தமிழர்களின் தாயகமான இந்தியா, இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தைப் புறக்கணித்திருப்பது, தான் பெற்ற தாயே தன் குழந்தையின் கழுத்தை நெரித்து கொல்வதற்குச் சமம் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"மனித உரிமை மீறல்கள் - போர்க் குற்றங்கள் பற்றி சர்வதேச விசாரணை நடத்தக் கோரி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. தீர்மானம் நிறைவேறியதால் ஈழத் தமிழர் பிரச்சினையில் சர்வதேச சமூகம் கொண்டுள்ள அக்கறையின் காரணமாக அடுத்த நகர்வு ஏற்பட்டுள்ளது என்பதில் நமக்கு ஓரளவுமனநிறைவுதான். ஆனால் அந்தத் தீர்மானத் தின் போது இந்தியா கடைப்பிடித்த அணுகுமுறை, தமிழகத்திலே உள்ள தமிழர்களை மட்டுமல்லா மல், உலகெங்கிலும் உள்ள தமிழ்ச் சமுதாயத்தையும் மீண்டும் ஏமாற்றத்திலும், வருத்தத்திலும் ஆழ்த்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானம் 23 நாடுகளின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 12 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து இருக்கின்றன. 11 நாடுகள் தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பைப் புறக்கணித்திருக்கின்றன. அப்படிப் புறக்கணித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது உலக சமுதாயத்தின் முன் நாம் தலை குனிந்து நிற்க வேண்டிய பரிதாபமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நேரடியாக சம்பந்தமோ, பந்தபாசமோ இல்லாத அமெரிக்கா போன்ற ஒரு நாடு, சர்வ தேச சமூகத்தின் நலன், மனித நேயம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானத்தை மூன்றாவது முறையாக முன்மொழிந்து, அந்தத் தீர்மானத்தை தமிழினத்தின் வேர்களைக் கொண்டிராத 23 நாடுகள் ஆதரிக்கும் நிலையில், தமிழர்களின் தாயகமான இந்தியா அந்தத் தீர்மானத்தைப் புறக்கணித்திருப்பது தான் பெற்ற தாயே தன் குழந்தையின் கழுத்தை நெரித்து கொல்வதற்குச் சமமாகும் என்பதால் நம்முடைய கண்களில் இரத்தக் கண்ணீரை வரவழைக்கின்றது.

இந்திய அரசு தன்னிச்சையாக ஒரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் கொண்டு வராததோடு, அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தையும் ஆதரிக்காமல் புறக்கணித்திருப்பது, குதிரை குப்புறத் தள்ளியதோடு, குழி பறித்த கதையாகவும் ஆகிவிட்டது. சர்வ தேச சமூகத்தின் உணர்வோடு ஒன்றிப் போகாமல், முக்கியமான இந்தப் பிரச்சினையில் மனித நேயமற்ற முடிவினை மேற்கொண்டதற்காக இந்திய அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# உல்லாசப் பயணிகளின் கப்பல் வருகை

கொழும்பு, மார்ச் 29
ஹம்பாந்தோட்டை, மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்துக்கு சுற்றுலா பயணிகள் கப்பலொன்று புதன்கிழமை வருகை தந்துள்ளது.

இந்தக் கப்பல் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்ததோடு கப்பலில் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலா செல்லும் 132 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அவர்கள் இந்தத் துறைமுகத்தில் இறங்கி அங்கிருந்து உட வளவை யானைகள் சரணாலயத்தை பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பஹ்ரெயினில் பண மோசடி தேடப்படுகிறார் இலங்கையர்

லண்டன், மார்ச் 29
பஹ்ரெயில் ஆயிரக்கணக்கான டினார்களை மோசடி செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள இலங்கையர் ஒருவர் தொடர்பில் சர்வதேச பொலிஸார் (இன்ரபோல்) விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

குறித்த நபர் பஹ்ரெனியில் அவர் பணியாற்றிய சுற்றுலா நிறுவனம் ஒன்றின் வாடிக்கையாளர்களிடம் இருந்து இந்த நிதியை மோசடி செய்திருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


அது தொடர்பில் அந்த நிறுவனத்தின் முகாமையாளரே பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் விசாரணைகள் தாமதமடைந்துவரும் நிலையில்,

இது தொடர்பில் இன்டர் போலின் உதவி நாடப்பட்டுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்திருக்க வேண்டும் இந்தியா

## மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கருத்து



ப.சிதம்பரம்

சென்னை, மார்ச் 29
இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணையை இந்தியா ஆதரித்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்.

சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருக்க வேண்டும். அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்க கூடாது என்பது அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவல்ல. தீர்மானம் குறித்து வெளியுறவுத்துறை அதிகாரிகள் முடிவு எடுத்திருக்கக் கூடும். அரசியல் கட்சிகளிடம் ஒற்றுமையில்லாததால் இதுபோன்ற தீர்மானத்தை ஆதரிக்க இயலவில்லை.

காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பதாக கருணாநிதி கூறி இருப்பது ஆச்சரியமளிக்கிறது. மதச் சார்பற்ற அணி அமையும்போது காங்கிரஸை தி.மு.க. ஆதரித்தால் வரவேற்போம். தமிழகத்தில் 5 முனைப்போட்டி நிலவுவதால், யார் வெற்றி பெறுவார்கள் என கணிக்க முடியாதுள்ளது" - என்று தெரிவித்தார். (ற)

# வாக்களிப்பை புறக்கணித்தது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

## சாடுகின்றார் டி.ராஜா

சென்னை, மார்ச் 29
அமெரிக்காவின் தீர்மானம் நடைமுறைக்குச் சாத்தியமில்லாது என்று தெரிவித்து இந்தியா வாக்கெடுப்பைப் புறக்கணித்தமை ஏற்றுக் கொள்ளக் கூடிய செயலல்ல. இது தமிழனத்துக்கு இந்திய மத்திய அரசு செய்யும் மற்றொரு துரோகமே - என்று சாடியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான டி.ராஜா.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நடைபெற்ற வாக்கெடுப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"அமெரிக்காவின் தீர்மானம் நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என்று கூறிய இந்தியா, வாக்கெடுப்பை புறக்கணித்தமை தமிழினத்திற்கு செய்யும் மற்றொரு துரோகம்.

இலங்கையில் நடைபெற்றுவரும்சம்பவங்கள்ஏற்கக்கூடியதல்ல என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவி பிள்ளை கூறிய பின்பும் இந்தியா இவ்வாறு நடந்து கொண்டிருப்பது கண்டித்தக்கது.

இலங்கையில் நடைபெற்ற அனைத்தும் இந்தியாவுக்கு நன்றாக தெரியும். அவை அனைத்திற்கும் இந்தியா துணை நின்றதால் தான் தற்போது தீர்மானத்தை எதிர்க்கிறது. காங்கிரஸ் கட்சியின் இந்த வெட்கக் கேடான முடிவு அவர்களின் துரோகத்தையும், வெளிநாட்டு கொள்கையையும் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

இதற்கான பலனை எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசு எதிர் கொள்ளும்" - என்று தெரிவித்துள்ளார். (ற)




# கைதானவர் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்.ஒட்டுமடம் பகுதியில் ஆள் அடையாள அட்டை இல்லை என்றுகூறி பயங்கர வாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைத்திருந்த நபர் யாழ்.நீதிமன்றினால் நேற்றுப் பிற்பகல் விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த நபர் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என்றுகூறி அவரை விடுவிப்பதாகப் பயங்கர வாத பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்த தையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி தருமபுரத்தைச் சேர்ந்த 35 வயதுடைய அவர் தனது சகோதரி வீட்டில் தங்கியிருந்தபோதே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார். விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். இதன்போதே அவரை விடுதலை செய்தது நீதிமன்று. (ஜ-4)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை வைரவநாதன்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசிப்பவருமாகிய சின்னத்துரை வைரவநாதன் (ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்) நேற்று (28.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக்கணவரும் முரளி, ரமணன், வசந்தன், விபுலன் (கனடா), தர்சினி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை,

தகவல் :
மகள், மருமகன்
(த.தர்சினி)

# மட்டக்களப்பு மாநகர சபை டெங்கு வலயமாக பிரகடனம்

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதி டெங்கு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம்.உதயகுமார் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பொதுச் சுகாதாரப் பகுதியில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அதனால், இந்தப் பிரதேசத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை வீடுகள், சுற்றுப் புறச்சூழல்கள் என்பன பரிசோதனை செய்யப் படவுள்ளன.

இந்த பரிசோதனை நடவடிக்கை மட்டக்களப்பு மாநகர சபை, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், பொது அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ச)

# மூளாயில் வீட்டிலிருந்து துப்பாக்கி, ரவை மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
மூளாய் மத்திப் பகுதியில் வீட்டினுள் இருந்த துப்பாக்கி, ரவைகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளி ஒருவருடைய படம் என்பன நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூளாய் மத்தியிலுள்ள வீடொன்றில் திருத்த வேலைகள் இடம் பெற்று வருகின்றன. இதன் போது வீட்டின் மேலுள்ள லெவல் சீற்றினுள் துப்பரவுப் பணிகள் இடம் பெற்றது. இதன்போது சிமெந்து கட்டினால் மறைக்கப்பட்டிருந்த பகுதியில் மேற்படி பொருள்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் மகஸின்கள் என்பனவும், போராளி ஒருவரின் குடும்ப படம் மற்றும் சீருடையில் அவருடைய படம், தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பன அங்கு காணப்பட்ட தாகவும் அவற்றை பொலிஸார் மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீட்டின் உரிமையாளர்கள் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்திருந்த நிலையில் தற்போதே மீளவும் வந்து, வீட்டைத் துப்புரவு செய்த போதே மேற்படி பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ஜ-5)

# உரிய நேரத்தில் செயற்படாத பாடசாலை பஸ் சேவை

*இதனால் தாமதமாக செல்லும் மாணவர்கள்*



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

புன்னாலைக்கட்டுவனில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாடசாலை மாணவர்களுக்கான பஸ், யாழ்.நகரில் சுண்டுக்குளி பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு சென்றடைவதில் கால தாமதம் ஏற்படுவதால் "மாணவர்கள் பாடசாலைக்கு தாமதமாகச் செல்ல நேர்வதால் காலையிலே தண்டனைக்கு உள்ளாக நேரிடுகிறது. எனவே பிள்ளைகள் தொடர்பான உண்மை நிலையை தெரியப்படுத்துவதற்கு பெற்றோர், பாதுகாவலர்கள் பாடசாலைகளுக்கு அலைய வேண்டிஇருப்பதாகவும்கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் நடத்தப்படும் புன்னாலைக்கட்டுவன் - யாழ்ப்பாணம் பாடசாலை சேவைக்கான பஸ் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சென்றடைவதற்கு தாமதம் அடைவதாக கூறப்படுகின்றது. இதனால் காலையில் உரிய நேரத்துக்கு மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருப்பதால் "பாடசாலைக்கு காலம் தாழ்த்தி வந்தவர்கள்" என்ற வகையில் தண்டிக்கப்படுவதாகவும், அந்த வகையில் பெற்றோர் பாடசாலைக்குச் சென்று வரவு பிந்தியமைக்கான விளக்கமளிக்க வேண்டி இருப்பதாகவும்கவலைதெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில் மாணவர்கள் உரிய நேரத்துக்கு பாடசாலை சென்றடைவதற்கு உரிய ஏற்பாடுகளை போக்குவரத்துச் சபையினர்மேற்கொள்ளவேண்டும் என்று பெற்றோர், பாதுகாவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-11)




## மோட்டார் சைக்கிள் ஹைஏஸ் விபத்து; இருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிளும் இலங்கை வங்கிக்குச் சொந்தமான ஹைஏஸ் வாகனமும் நேரெதிரே மோதி விபத்துக்கு உள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆணொருவரும் பெண்ணொருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஆணின் கால் பெருவிரல் சம்பவ இடத்திலேயே துண்டாடப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று தாவடி சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. சூரியபகவான் (வயது- 34), தர்மிகா (வயது- 27) ஆகிய இருவருமே பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது;- சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் தாவடி சந்தியில் டிரக் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்படும்போது எதிரே வந்த இலங்கை வங்கிக்குச் சொந்தமான ஹைஏஸ் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதுண்டது எனச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். உடனயடியாக சம்பவ இடத்துக்கு வந்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-4- 21-86)

# தகுந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்தாமல் தொழில் முயற்சியை முடக்க கங்கணம்

## புகையிலைச் செய்கையாளர்கள் விசனம்

வலி. வடக்கு, மார்ச் 29

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் புகையிலைச் செய்கையை நிறுத்த வேண்டும் என்று கூறும் உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளும் இது வரையில் விவசாயிகளின் பொருள்களை தகுந்த முறையில் சந்தைப்படுத்துவதற்கான எந்தவொரு வாய்ப்பையும் ஏற்படுத்தித் தராத நிலையில் தொழில் முயற்சிகளை முடக்க கங்கணம் கட்டுவது எந்த வகையில் நியாயம் என்று புகையிலைச் செய்கையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த காலபோர் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் கூட யாழ். மாவட்ட விவசாயிகளைப்பொறுத்தவரையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் உரிய விலையைப் பெற முடியாது பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை தென்னிலங்கையில் இத்தகைய உற்பத்திப் பொருள்கள் சந்தைக்கு வரும் நிலையில் இறக்குமதியை மட்டுப்படுத்தல் மற்றும் வரி அதிகரிப்பு போன்ற நடவடிக்கைகளை அரசு மற்றும் அதிகாரிகள் கவனித்து விழிப்பாக இருந்து செயற்படுவதன் மூலம் நியாயமான உரிய விலையை தென்னிலங்கை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இத்தகைய வசதிகள் எவற்றையும் அரச அதிகாரிகளோ அல்லது அரசியல் வாதிகளோ பெற்றுத்தர முன் வருவதில்லை.

கடந்த மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கைக் கூட உரிய முறையில் சந்தைப்படுத்த முடியாது அரச அதிகாரிகள் உரிய காலத்தில் நடவடிக்கைகளை எடுக்காமை மற்றும் அரசியல் வாதிகளின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டு உற்பத்தியாளர்கள் நட்டம் அடைந்துள்ளனர்.

இத்தகைய நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தின் பணப் பயிராகக் காணப்படுகின்ற புகையிலைச் செய்கையால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றது என்ற கருத்தை முன்வைத்து ஆயிரக் கணக்கான புகையிலைச் செய்கையாளர்களையும் மற்றும் தொழிலாளர்களையும்தொழில் இழக்கச் செய்யும் முயற்சியை குறித்த புகையிலைச் செய்கையாளர்களிடம் இருந்து கடும் விசனம் எழுந்துள்ளது.

இதேவேளை புகையிலைச் செய்கையுடன் எந்தவொரு விவசாயத் திணைக்களமும் இதுவரை தொடர்புகொண்டதில்லை. என்றும் அதிகளவான மருந்துப் பாவனை புகையிலைச் செய்கைக்கு பயன்படுத்துவதாக கூறுவதில் எந்த வகையான உண்மையும் இல்லை என்றும் புகையிலைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ-86)

# ஒட்டுமடம்சந்தியில் அமைந்துள்ள காவலரணை அகற்ற வேண்டும்

## மாநகர சபைக் கூட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் கோரிக்கை

**ஒட்டுமடம் வீதியில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளதால் வீதியின் அகலம் குறைந்து காணப்படுகிறது.**

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம், ஒட்டுமடம் சந்தியில் அமைந்துள்ள இராணுவ காவலரணை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாநகர சபை ஆளும் கட்சி உறுப்பினரான க.இளங்கோ (றீகன்) மாநகர முதல்வரிடம்கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். இதன் போது மேலும் அவர் கூறுகையில்;

ஒட்டுமடம் வீதியில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளதால் வீதியின் அகலம் குறைந்து காணப்படுகிறது. எனவே காவலரணை அகற்றுவதன் மூலம் வீதியைச் சீரமைக்க முடியும்.

அந்தப் பகுதி குப்பை கூளங்கள் நிறைந்து காணப்படுவதால் மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் நிலவுகிறது.

காவலரணை அங்கிருந்து அகற்றிச் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவும் நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

காவலரணை அகற்றுவதன் மூலமே இதனை உரிய முறையில் செயற்படுத்த முடியும் - என்றார். (வ-7)

# யாழ்.பொது நூலகத்தில் இளையோர் பகுதி

## ஏப்.4 இல் திறப்பு

யாழ். பொது நூலகத்தில் சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் இளையோர் பகுதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களது ஆங்கிலக்கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்த இளையோர் பகுதி திறந்து வைக்கப்படவுள்ளது.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் சண்முகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் நடமாடும் நூலக சேவைக்காக பஸ்ஸொன்றும் கையளிக்கப்படவுள்ளது.

அத்துடன் 10 ஆயிரம் நூல்கள் சிங்கப்பூர் தேசிய நூலக சபையினரால் நூலகத்துக்கு வழாங்கப்படவுள்ளன. (வ-14)

## பஸ் மோதி பசு மாடு உயிரிழப்பு

வீதியைக்கடக்க முற்பட்ட பசுமாடு ஒன்றை வேகமாக வந்த பயணிகள் பஸ் ஒன்று மோதி விட்டுதப்பிச் சென்றது. பசு மாடு அந்த இடத்திலேயே உயிரிழந்தது. இந்தச் சம்பவம் பருத்தித்துறை வீதியில் நீர்வேலிசந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (வ-17)

# கைது செய்யப்பட்ட விபூசிகா விடுவிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றில் தான் பிரேரணை சமர்ப்பிக்க வேண்டும்

## மாநகர சபைக் கூட்டத்தில் கூட்டமைப்பு உறுப்பினரின் வேண்டுகோளுக்கு எதிரணி உறுப்பினர்கள் பதில்

**உதவி பெற்றுக் கொள்வது தொடர்பாக மாகாண சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். எனினும் இதுவரை அது குறித்த பதில் கிடைக்கவில்லை என்றார் மாநகர சபை முதல்வர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 29

கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரி மற்றும் அவரது மகள் விபூசிகாவும் விடுவிக்கப்பட வேண்டும் என்று யாழ். மாநகர சபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் என்.சோதிலிங்கம் வேண்டுகோள் விடுத்த போது இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்படவேண்டியதொன்று என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர். கூட்டமைப்பு உறுப்பினர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்;

மாநகரசபையில் தான் பதவியேற்று 4 மாதங்கள் கடந்துள்ளன. எனினும் தனது வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து முதல்வரின் கவனத்துக்குப் பல தடவை எடுத்துக் கூறியும் அவர் மாகாண சபை நிதி உதவி கிடைக்கவில்லை என்று கூறிக் கொண்டிருக்கின்றார்.

இதேவேளை மாகாண சபை இயங்குவதற்கு முன் சபையின் நிதியில் இருந்து பல வேலைத் திட்டங்களைச் செய்துள்ளதாகக் கூறுகின்றார்.

இப்போது மக்களின் வரிப் பணத்தில் அவர்களது தேவைகளை நிறைவேற்ற மறுக்கிறார். மாகாண சபையிடமும் நாம் எமது கோரிக்கைகளை முன் வைப்போம். எல்லாவற்றுக்குமே மாகாண சபையைக் குறை கூறுவது வழமையாகி விட்டது. இவ்வாறான நிலைமை தவிர்க்கப்படவேண்டும். மக்கள் சேவையில் கட்சி நலன், அரசியலைக் கலக்கக் கூடாது" - என்றார்.

இதேவேளை உதவி பெற்றுக் கொள்வது தொடர்பாக மாகாண சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். எனினும் இது வரை அது குறித்த பதில் கிடைக்கப் பெறவில்லை. நிதி உதவி கிடைக்கும் போது உங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படும்" என்று முதல்வர் பதிலளித்தார். (வ-7)

## கடித புயல் கலைஞர் என்றால் கடிதச் சூறாவளி ஜெயலலிதா

### தே.மு.தி.க தலைவர் பேச்சு


சென்னை,மார்ச் 29
கடிதப் புயல் கலைஞர் என்றால் கடிதச் சூறாவளி ஜெயலலிதா தான் என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் விழுப்புரத்தில் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

விழுப்புரம் தொகுதி தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் தே.மு.தி.க வேட்பாளர் சேர்ந்த உமாசங்கரை ஆதரித்து விழுப்புரம் பழைய பஸ் நிலையம் அருகே கடந்த புதன்கிழமை மாலை விஜய்காந்த் பிரசாரம் செய்தார்.

அவர் அங்கு பேசியதாவது:-
நமது ஒரே குறிக்கோள் அ.தி.மு.க, தி.மு.க வெற்றிபெறக் கூடாது என்பது தான். இந்த மாவட்டத்தில் கரும்பு அதிகம். கரும்பு இனிக்கிறது. ஆனால் விவசாயியின் வாழ்க்கை கசக்கிறது. இம்மாவட்டத்தில் பொன்முடியும், சி.வி.சண்முகமும் கல்வி மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால் இம்மாவட்டம் வளர்ச்சி பெறவில்லை. அவர்கள் வளர்ச்சி பெற்று விட்டார்கள்.

கடிதப் புயல் கலைஞர் என்றால் ஜெயலலிதா கடிதச் சூறாவளி என்று வைத்துக்கொள்ளலம். எதற்கு எடுத்தாலும் கடிதம் எழுதுவது. ஏன் ஒருமுறை நேரில் சென்று பிரதமரைச் சந்திக்கலாமே? நானாவது பிரதமரைச் சந்தித்தேன்.

தமிழ் மக்களை வாழவைக்கவே இக்கூட்டணி. 2004 இல் அ.தி.மு.கவுக்கு ஒரு இடம் கூடக் கிடைக்காமல் செய்தது போல இப்போதும் விரட்டி அடிக்க வேண்டும் - என்றார். (கு)



அணு ஆயுதம் தாங்கிச் சென்று இலக்கைத் தாக்கும் சக்தி கொண்ட பிருத்வி-2 ஏவுகணை, ஒடிசா மாநிலம் சந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது. 500 கிலோ எடையிலான அணு ஆயுதத்தைச் சுமந்து சென்று 350 கிலோமீற்றர் வரையிலான தொலைவில் இருக்கும் இலக்கைக் குறி வைத்துத் தாக்கும் சக்தி வாய்ந்தது பிருத்வி-2 ஏவுகணை. நேற்றைய சோதனையின்போது பிருத்வி-2 ஏவுகணை திட்டமிட்டபடி, இலக்கைச் சரியாக தாக்கியதாகச் சந்திப்பூர் ஏவுகணை ஏவுதள மைய இயக்குநர் எம்.வி.கே.வி. பிரசாத் தெரிவித்துள்ளார். (கு)


# தி.மு.கவிடம் மன்னிப்புக் கோர காங்கிரஸுக்கு அவசியமில்லை

### துரோகத்தை பட்டியலிட்டால் பதிலடி என்கிறார் ஞானதேசிகன்

சென்னை,மார்ச் 29
மன்னிப்புக் கேட்கும் நிலையில் காங்கிரஸ் இல்லை என்றும், துரோகத்தைப் பட்டியலிட்டால் விளக்கம் அளிக்கத் தயார் என்றும் தமிழகக் காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூறியுள்ளார்.

மதச்சார்பற்ற நிலைக்குக் காங்கிரஸ் முன்வருமேயானால், பொதுமன்னிப்பு என்ற முறையிலே காங்கிரஸை தி.மு.க ஆதரிக்கும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி, தி.மு.கவின் முதல் பிரசாரக் கூட்டத்தில் கூறினார். அவரது குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து, தமிழகக் காங்கிரஸ் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்துள்ளதாவது:-

காங்கிரஸ் கட்சி மத்தியில் இன்னும் 5 ஆண்டுகள் ஆண்டால், உலகில் வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியாவை் மாற்



ஞானதேசிகன்

றும். காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஏழைகளுக்கு வீட்டுரிமை வழங்கப்படும். சுகாதாரக் கட்டாய உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும் என்று பல்வேறு வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளோம்.

பெற்றோல் விலை உயர்வு குறித்து முதல்வர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டுகிறார். அ.தி.மு.க ஆட்சியில் பஸ் கட்டணம், பால் விலை மற்றும் மின்சார கட்டணம் உயர்ந்தது. இதற்கு நிர்வாகத்துக்கு நிதி தேவையென்று ஜெயலலிதா கூறினார். இது பெற்றோல் விலைக்குப் பொருந்தாதா?

கடந்த 9 ஆண்டுகளாக தி.மு.க எங்களோடு அமைச்சரவையில் இருந்தது. ஆட்சிக்கு வரும்போதே, முதலில் தங்களுக்கு என்னென்ன இலாகாக்கள் வேண்டுமென்று எழுதிக் கொடுத்து, அதைக் கேட்டு வாங்கினார்கள். 33 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்ற ஆந்திராவுக்குக் கூட அமைச்சரவையில் இந்த உரிமை கிடைக்கவில்லை. ஆனால் தி.மு.கவுக்கு 4 அமைச்சரவை மற்றும் 3 இணை அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன. அதுவும் முக்கியமான துறைகள் வழங்கப்பட்டன.

ஆனால், ஒரு ஆண்டுக்கு முன்பு பதவி விலகிவிட்டு, குற்றஞ்சாட்டுகிறார்கள். ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் கூட்டணியிலிருந்து விலகுவது தி.மு.கவுக்கு வாடிக்கையானது. பா.ஜ.கவுடன் கூட்டணிலிருந்தபோதும் இதையேதான் செய்தார்கள். ஆட்சியிலிருந்தபோதே, இந்தக் குற்றச்சாட்டுகளைக் கூறி விலகியிருக்கலாமே. ஆனால் இப்போது இவர்கள் சொல்லும் காரணங்களும் தத்துவங்களும் ஏற்புடையதல்ல.

மன்னிப்புக் கேட்கும் நிலையில் காங்கிரஸ் கட்சி இல்லை. நாங்கள எந்தக் குற்றமும் செய்யவில்லை.

காங்கிரஸின் துரோகம் குறித்து பட்டியலிட்டால் அதற்குக் காங்கிரஸ் பதிலளிக்கும்-என்றார். (கு)

## மதுரை விமான நிலையத்தில் அழகிரி - சிதம்பரம் சந்திப்பு



மதுரை,மார்ச் 29
மதுரை விமான நிலையத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரியும் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரமும் சந்தித்துக் கொண்டனர்.

சென்னையில் இருந்து மதுரை சென்ற விமானத்தில் அழகிரியும், சிதம்பரமும் ஒன்றாகப் பயணித்தனர்.

மதுரை விமான நிலையம் வந்தடைந்தவுடன், விமான நிலையத்தின் வரவேற்பு அறையில் இருவரும் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அழகிரி:-
காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் 9 ஆண்டுகள் அங்கம் வகித்திருக்கிறோம். அந்த வகையில் பொதுவான விடயங்கள் குறித்து பேசினோம் - என்றார். இருப்பினும் பேச்சின் விவரங்களை அழகிரி தெரிவிக்கவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை தி.மு.க வில் இருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டார் மு.க.அழகிரி. அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை அவர் கனிமொழியைச் சந்தித்தார். (கு)

## இந்திய விமானம் விபத்து விமானி உட்பட ஐவர் சாவு

புதுடில்லி,மார்ச் 29
இந்திய விமானப்படைக்கு சொந்தமான சி-130 ஜெ சுப்பர் ஹெர்குலஸ் விமானம் குவாலியர் அருகே விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், விமானி உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

மத்தியப் பிரதேசம் குவாலியர் அருகே இந்த இந்திய விமானப் படை சரக்கு விமானம் விழுந்து நொருங்கி விபத்திக்குள்ளானது.

ராஜஸ்தானின் மத்திய பிரதேச எல்லையில் உள்ள கரோலி என்ற இடத்தில் சி-130 ஜெ விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விமான விபத்தில் சிக்கியோரை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இதில் இருந்த விமானி உட்பட 5 பேரும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு கரோலியின் பொலிஸ் கண்காணிப்பாளர் விரைந்துள்ளார். விபத்து குறித்து விசாரணை நடத்த மத்திய விமான இயக்கம் உத்தரவிட்டுள்ளது.

சமீபத்தில் இந்தியா சி-130 ஜெ ரக சுப்பர் ஹெர்குலஸ் விமானத்தை அமெரிக்காவிடமிருந்து ரூபா 6000 கோடிக்கு வாங்கி அதனை இந்திய விமானப் படையில் இணைத்தது என்பது குறிப்பிடதக்கது. (கு)

## மோடியின் பிரதமர் கனவு பலிக்காது

புதுடில்லி,மார்ச் 29
பிரிவினைவாதியான நரேந்திர மோடியின் பிரதமர் கனவு பலிக்காது என ராஷ்டிரீய ஜனதா தளக் கட்சித் தலைவர் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

மோடி ஒரு பிரிவினைவாதி. அவர் பிரதமர் ஆனால் இந்திய தேசத்தை உடைத்து விடுவார் எனப் பத்திரிகையாளர் சந்திப்பில் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

எனவே, தேச நலனில் அக்கறை கொண்டு, நாட்டு மக்கள் நரேந்திர மோடி பிரதமராக வாய்ப்பு அளிக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

உத்திரப்பிரதேச மாநிலம் வாரணாசி தொகுதியில் இருந்து மோடி போட்டியிட இருப்பதைக் குறிப்பிட்டுப் பேசிய லாலு, பிரிவினையைப் பின்பற்றி நாட்டின் ஒற்றுமைக்கும், கட்டுப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் மோடியை, வாரணாசியின் சிவன் கூட மன்னிக்க மாட்டார் - என்றார். (கு)

## மக்களை ஏமாற்றுகிறது காங்கிரஸ்

### இல. கணேசன் சாடல்

சென்னை,மார்ச் 29
காங்கிரஸ் தேர்தல் அறிக்கை மக்களை ஏமாற்றும் செயல் என பா.ஜ.க. மூத்த தலைவரும், தென் சென்னை தொகுதி பா.ஜ.க. வேட்பாளருமான இல.கணேசன் தெரிவித்தார்.

சென்னை மெரினா கடற்கரையில் கடந்த வியாழக்கிழமை காலை தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-
ஆட்சியில் இல்லாத கட்சி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதுவெல்லாம் செய்வோம் என வாக்குறுதி அளிப்பார்கள். மக்களும் அவர்களைச் சோதித்துப் பார்ப்பதற்காக வாய்ப்பு கொடுக்க நினைப்பார்கள்.

ஆனால், 60 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் எனக் கூறுவது வேடிக்கையாக உள்ளது. கடந்த 10 ஆண்டு கால மன்மோகன் சிங் ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது.

ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 100 நாள்களில் 10 கோடி பேருக்கு வேலைவழங்குவோம் என்பது மக்களை ஏமாற்றும் செயல். இதற்கெல்லாம் மக்கள் மயங்க மாட்டார்கள்.

தேர்தலுக்குப் பிறகு யாருக்கு ஆதரவு என்பது அ.தி.மு.கவும், தி.மு.கவும் தெளிவுப்படுத்த வேண்டும்எனமத்தியநிதிஅமைச்சர் ப. சிதம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார். வரும் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்கு மக்கள் தனிப்பெரும்பான்மையை அளிப்பார்கள்-என்றார். (கு)

# புதுச்சேரிக்குத் தனி மாநில அந்தஸ்து - ஜெயலலிதா உறுதி

புதுச்சேரிக்குத் தனி மாநில அந்தஸ்து பெற்றுத் தரப்படும் என உறுதியளித்துள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. புதுச்சேரியில் கடந்த வியாழக்கிழமை நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் ஓமலிங்கத்தை ஆதரித்து ஜெயலலிதா பேசியதாவது:-
கடந்த 2011 புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க மற்றும் என்.ஆர். காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை மகத்தான வெற்றி பெறச் செய்தீர்கள். என்.ஆர்.காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மை பெறவில்லை. அ.தி.மு.கவைப் புறக்கணித்துவிட்டுச் சுயேச்சை ஆதரவுடன் ஆட்சியமைத்தார் ரங்கசாமி. அவர் அ.தி.மு.கவுக்கு மட்டும் துரோகம் இழைக்கவில்லை, உங்களுக்கும் துரோகம் இழைத்துவிட்டார்.

தமிழகத்தில் மீனவர்கள் சிறை பிடித்துச் செல்லப்படும்போது நான் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டேன். தமிழக மீனவர்கள் விடுதலையாகும் போது காரைக்கால் மீனவர்களும் எனது முயற்சியால் விடுதலையாகி வருகின்றனர். மீனவர்களைச் சிறைபிடிக்கும் இலங்கை அரசுக்கு எதிராக என்.ஆர்.காங்கிரஸ் குரல் கொடுத்துள்ளதா?

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என 1998 இல் பிரதமரை நான் வலியுறுத்தினேன். இதையடுத்து, தனிமாநில அந்தஸ்து வழங்கப்படும் என பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் பின்னர் வந்த ஆட்சி மாற்றத்தால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மத்தியில் அ.தி.மு.க அங்கம் வகிக்கும் ஆட்சி அமைந்தால், புதுச்சேரியில் அனைத்து மக்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் தனி மாநில அந்தஸ்து பெற்றுத்தரப்படும் என உறுதியுடன் தெரிவிக்கிறேன்-என்றார். (கு)

# கிரைமியா கருத்துக் கணிப்பு முற்றிலும் சட்டவிரோதமானது

## அறிவித்தது ஐ.நா. பொதுச் சபை

ஜெனிவா,மார்ச் 29
கிரைமியா பிராந்தியத்தில் ரஷ்யா நடத்திய கருத்துக் கணிப்பு முற்றிலும் சட்டவிரோதமானது என்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.
இது தொடர்பான பிரேரணை ஒன்று நேற்றுமுன்தினம் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இதேவேளை உக்ரைனுக்கு 14 முதல் 18 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை வழங்குவதற்குச் சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது.
அத்துடன் அமெரிக்காவின் செனட் சபையும், உக்ரையினுக்கு ஒரு பில்லியன் டொலர் கடனுக்கான உத்தரவாத்தை வழங்கத் தீர்மானித்துள்ளது.
உக்ரைனில் இருந்து கிரைமியா பிராந்தியத்தை ரஷ்யா பிரித்து தம்முடன் இணைத்துக் கொண்டதன் பின்னர், மேற்குலக நாடுகளுக்கும். ரஷ்யாவுக்கும் இடையிலான ராஜதந்திரப் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்துவருகிறது.
இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு எதிரான புதிய பொருளாதாரத் தடை குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## யூ டியூப் துருக்கியில் தடை




அங்காரா,மார்ச் 29
டுவிட்டர் சமூக வலைத்தளத்துக்குத் தடை விதித்துள்ள துருக்கி அரசு தற்போது யூ டியூப் சமூக வலைத்தளத்துக்கும் தடை விதித்துள்ளது.
துருக்கி அரசியல் தலைவர்களின் இரகசியக் கலந்துரையாடல் ஒன்று யூ டியூப் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்மையைக் கண்டித்தே இந்தத் தடை விதிக்கப் பட்டள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
துருக்கி அரசினால் சிரியாவில் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நாளை துருக்கியில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே தேசிய பாதுகாப்பு மாநாட்டுக் கலந்துரையாடல் குறித்த சமூக வலைத்தளத்தில் வெளியாகியுள்ளது. அந்நாட்டுப் பிரதமர் தொடர்பில் தவறான கருத்துக்கள் வெளியானதாகக் குற்றம் சுமத்தி டுவிட்டர் இணையத்தளத்துக்கு ஏற்கனவே தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)



ஐரோப்பியப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பாப்பரசர் பிரான்சிஸ்ஸைச் சந்தித்துள்ளார். நெதர்லாந்து மற்றும் பிரசல்ஸுக்கான பயணத்தை நிறைவு செய்த அவர் ரோம் சென்று பாப்பரசரைச் சந்தித்து உரையாடியுள்ளார். சுமார் 52 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு நீடித்ததாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## தாய்லாந்துக் கடலில் மிதப்பது மலேசிய விமானப் பாகங்களா?





பாங்கொக்,மார்ச் 29
இந்து சமுத்திரத்தின் தென் பகுதியில் சுமார் 300 பாகங்கள் தமது செயற்கைக் கோளில் பதிவாகியுள்ளதாகத் தாய்லாந்து அரசு அறிவித்துள்ளது.
மலேசிய விமானத்தின் பாகங்கள் எனச் சந்தேகிக்கப்படும் 122 பொருள்கள் இந்து சமுத்திரத்தின் தென் பகுதியில் மிதப்பதாகப் பிரான்ஸ் தகவல் வெளியிட்டிருந்தது. இந்தத் தகவல் வெளியானதன் பின்னரே இந்தத் துகள்கள் கடந்த 24 ஆம் திகதி தமது செயற்கை கோளில் பதிவாகியுள்ளதாகத் தாய்லாந்து அரசு அறிவித்துள்ளது.
2 மீற்றரிலிருந்து 15 மீற்றர் நீளமுள்ள பல்வேறு பாகங்கள் கடலில் மிதப்பதாகவும்,ஆனால் அவை அனைத்தும் விமானத்தின் பாகங்களா என்பது தொடர்பில் உறுதிப்படுத்த முடியாது எனவும் தாய்லாந்து சுட்டிக்காட்டியுள்ளது.
இன்னும் 11 நாள்களுக்குள் விமானத்தின் கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டயாத்தில் நடைபெறும் விமானத்தின் தேடுதல் நடவடிக்கை சீரற்ற காலநிலையினால் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## 50 ஆண்டு சிறை வாசம் அனுபவித்த சாவுத் தண்டனைக் கைதி விடுவிப்பு

ரோக்கியோ,மார்ச் 29
ஜப்பானில் சாவுத் தண்டனையை எதிர்நோக்கியிருந்த நிலையில் சுமார் 50 ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்து வந்த கைதி ஒருவரை விடுவித்து நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.
அவரது வழக்கு மீது மறு விசாரணை நடத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
தற்போது 78 வயதாகும் இவாவோ ஹக்காமாதா ஒரு குத்துச் சண்டை வீரர்.
சாவுத் தண்டனையை எதிர் நோக்கியிருந்த நிலையில் உலகில் நீண்டகாலம் சிறை வாசம் அனுபவித்தவர் இவர் தான் என்று கருதப்படுகின்றது.
தனது எஜமானையும் அவரது மனைவியையும் அவர்களின் இரண்டு பிள்ளைகளையும் கொலை செய்தமை தொடர்பிலேயே அவர் ஆரம்பத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டார்.
ஆனால் ஷிசோகா நகர நீதிமன்றம் அவரது சாவுத் தண்டனையை இடைநிறுத்தியுள்ளது.
கொலைச் சம்பவ இடத்திலிருந்து கிடைத்த ஆடைகளிலிருந்து கிடைத்த இரத்தத்தின் டி.என்.ஏ மரபணுத் தகவல்கள் ஹக்கமாதாவினது அல்லவென்று அவரது வழக்குரைஞர்கள் நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.
விசாரணையாளர்கள் சாட்சி ஆதாரங்களைப் போலியாக சோடித்திருக்கலாம் என்று நீதிபதி கூறுகிறார். (த)

## விமானத்தை தேடும் பணி மற்றுமொரு பகுதிக்கு மாற்றம்

கோலாலம்பூர்,மார்ச் 29
விபத்துக்குள்ளானதாகக் கூறப்படும் மலேசிய விமானத்தைத் தேடும் நடவடிக்கைகள் இந்து சமுத்திரத்தின் மற்றுமொறு பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இந்து சமுத்திரத்தின் தென் கிழக்குக் கடற்பிராந்தியத்திலிருந்து ஆயிரத்து 100 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
செய்மதிகளில் காண்பிக்கப்படும் நிழற்படங்கள் சுட்டிக் காட்டியவாறு எம். எச் 370 விமானம் வேகமாகச் சென்றதாகக் கூறப்படும் கடற்பகுதிகளிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
இதற்கு முன்னர் செய்மதிகளில் காண்பிக்கப்பட்டவாறு தென் பகுதியிலேயே தேடும் பணிகள் இடம்பெற்றன. எனினும் எவ்வித தடயங்களும் இல்லாத காரணத்தினால் தற்போது புதிய திசையில் விமானத்தைத் தேடும் பணிகள் இடம்பெறுவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த)

## கிம் ஜோங்கின் சிகையலங்காரத்தை பின்பற்ற மாணவர்களுக்கு உத்தரவு

பியோங்யாங்,மார்ச் 29
வடகொரிய ஜனாதிபதியின் விசித்தரமான சட்டம் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சிகையலங்காரத்தைப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் கட்டாயம் பின்பற்றவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
கடந்த வாரம் வடகொரியத் தலைநகரில் அறிமுகப்படுத்தப் பட்ட இந்தப் புதிய சிகையலங்காரச் சட்டம் தற்போது நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இந்த உத்தரவுக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன் ஜனாதிபதியின் சிகையலங்காரம் அனைவருக்கும் பொருந்தாது எனவும் தெரிவித்துள்ளனர்.
ஜனாதிபதியின் சிகையலங்காரம் கடத்தல் காரர்களின் சிகையலங்காரத்தைப் போன்று காணப்படுவதாகத் தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த)



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங்

## ஐந்தாம் வார வெற்றியாளர்கள் (23.03.2014)

# வாரம் 50 பரிசுகள்

உதயன் சூரியகாந்தி பரிசு மழையில் நனையுங்கள்

வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

### 7,500/= பெறுமதியான 1 பரிசு கூப்பன்

Green Grass யாழ்ப்பாணம்.

**01. ஜனனி லிங்கநாயகம்**
திருநாவற்குளம், வவுனியா

### 3,500/= பெறுமதியான 10 பரிசு கூப்பன்கள்

E.com computer training center
No.95 A, Temple Road, Jaffna.

**01. இரவிச்சந்திரன் பிருந்தா**
முருகன் கோயிலடி, ஏ 9 வீதி, புளியங்குளம்.

**02. அன்ரன் ஜெயராசா கர்லின்**
32, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.

**03. அன்னலிங்கம் விஜயகுமாரி**
63/22 சிவன் வீதி, பரவக் குளம், திருநெல்வேலி

**04. ஸ்ரீ பவனிகன்**
81, பத்திரகாளி கோயிலடி, வண்.மேற்கு யாழ்ப்பாணம்

**05. செல்லையா கருணாகரன்**
01 ஆம் வட்டாரம், வற்றாப்பளை வீதி, முள்ளியவளை.

**06. விநாயகமூர்த்தி நிரேசன்**
பன்னயம்பதி, புலோலி வடக்கு.

**07. திருப்பரங்கிரிநாதன் இரதி**
இமையாணன், உடுப்பிட்டி.

**08. திருச்செல்வம் புஸ்பராசா**
முள்ளானை, இளவாலை.

**09. திருச்சிற்றம்பலம் கிருஷாந்தினி**
இல 113/2, மல்லாவி.

**10. பரமலிங்கம் கதாகரன்**
28/4 கெலன்காமம் வீதி, சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

### 5,000/= பெறுமதியான 5 பரிசு கூப்பன்கள்

GERMAN INSTITUTE
Mrs.Kajanthini
No.10 Palaly Road
Jaffna.

**01. இராஜ்குமார் வியாகரன்**
71, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

**02. இராசேந்திரம் புவிராசன்**
கல்யாணி கடை, குமாரபுரம், முள்ளியவளை.

**03. சி.நிலச்சனா**
16/55 உப்புக்குளம், கஸ்மர் வீதி, மன்னார்.

**04. தவப்பிரியா திருஞானசம்பந்தன்**
சின்னாலடி, காரைநகர்.

**05. மரியதாஸ் டெனிஸ்ரா**
3 ஆவது மைல்கல், சிலாவத்தை, முல்லைத்தீவு.

### 200/= பெறுமதியான 19 பரிசு கூப்பன்கள்

தாயன்பு உடையார்கட்டு.
மோகன் ஸ்ரோர்ஸ் ஏ-9 வீதி, பளை
பொதிகை மல்ரி சென்ரர் புதுக்குடியிருப்பு.
அறிவொளி புத்தகசாலை முல்லைத்தீவு

**01. உதயகுமார் தனுஜா**
புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.

**02. சிவலிங்கம் ரதீஸ்குமார்**
நீர்வேலி வடக்கு.

**03. ரா.உஷாந்தினி**
'சாருஜா' சிவன் கோயில் வீதி, புத்தூர்.

**04. அருளானந்தம்**
இல 16, சென் மேரிஸ், 2 ஆம் லேன், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**05. சொரூபிகா ஸ்ரீஜீவா**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

**06. இராஜேந்திரா சிவப்பிரியா**
243 A,பலாலி வீதி, கந்தர் மடம்.

**07. க.சுதர்சனா**
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

**08. இ.உதயகரன்**
இல 4, பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கை.

**09. பாலச்சந்திரன் புஸ்பலீலா**
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

**10. பாலேந்திரன் சஜீத்**
சென் அன்ரனிஸ் வீதி, பண்டத்தரிப்பு.

**11. ந.அகிலதர்சினி**
சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.

**12. கிருஷ்ணசாமி இரவீந்திரன்**
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

**13. இ.ஜசிதா**
15/02 ராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு.

**14. இ.சுஜதாஜினி**
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

**15. செல்வரட்ணம் விசாகன்**
சாயிவாசா, அரசடி லேன், அத்தியடி, பருத்தித்துறை.

**16. அருளானந்தம் பத்மாசணதேவி**
உ.ப.தா.அருகாமை, வியாபாரி மூலை, பருத்தித்துறை.

**17. சிவசுப்பிரமணியம் சோதிமலர்**
மூத்தவிநாயகர் கோயிலடி, கரணவாய், கரவெட்டி.

**18. திருமதி சிவபாலேஸ்வரி பத்மயோகன்**
22/18 விதானை வீதி, சுண்டுக்குளி.

**19. வாகீசன் கோமளா**
முத்துமாரியம்மன் கோயிலடி, அல்வாய் வடக்கு.

வெற்றி நிச்சயம்

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

### 500/= பெறுமதியான 15 பரிசு கூப்பன்கள்

பெறுமதியான பரிசுக் கூப்பன்

St. ANTONY'S
187, K.K.S. Road
Jaffna Town.
0212224865, 0750698608

NALIN Information Technologies Pvt Ltd.
பரமேஸ்வராச் சந்தி யாழ்ப்பாணம்.

பொன்னம்பலம் ஸ்ரோர்ஸ்
ஏ-9 வீதி, கரடிப் போக்குச் சந்தி, கிளிநொச்சி.

யுனிலங்காஸ் பப்ளிகேஷன்
கொழும்பு.

அபி பேபி மாட்ஸ்
55, கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.

வணிகா சேர்ஜிகல்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**01. இரத்தினதேவி குலசிங்கம்**
3 ஆம் வட்டாரம், நயினாதீவு.

**02. அழகன் மோகனகுமாரி**
1 ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.

**03. இலட்சுமணன் சிவசிறிதரன்**
அராலி மத்தி, ஊரத்தி, வட்டுக்கோட்டை.

**04. தருமராசா மகேஸ்வரன்**
பிளாக் வீதி, சங்கானை.

**05. பாலசாமி ஈசன்**
45/2, சுதுமலை தெற்கு, சாவற்கட்டு, மானிப்பாய்.

**06. செல்வி சி.அசோக்கமாலா**
சந்தை வீதி, உடுப்பிட்டி.

**07. த.லக்ஷாயினி**
அச்சுவேலி தெற்கு, மடத்தடி.

**08. தவராஜா பிறேமா**
இலங்கை மின்சார சபை, D G M அலுவலகம் மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

**09. ரவீந்திரன் ரஞ்சிதமலர்**
இல– 42, வேதாரணியர்வளவு, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

**10. கைலாசநாதர் சுரேஸ்**
பூம்பதி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பு.

**11. நாகலிங்கம் முருகதாஸன்**
வட்டு கிழக்கு, சித்தங்கேணி.

**12. பரம்சோதி சுரோஜினி**
21/1 நந்தாவில் ஒழுங்கை, சம்பியன் வீதி கொக்குவில் கிழக்கு.

**13. சுவர்ணகுமார் துதீஸ்வரி**
மாவடிப்பிள்ளையார் கோயிலடி, மீசாலை கிழக்கு.

**14. து.தனேஸ்வரி**
அம்மன் பல்பொருள் வாணிபம், 1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**15. ஆர்.ரமில்டன்**
மண்குகை வீதி, ஊர்காவற்றுறை.

# இரணைமடுக் குளத்தின் கீழ் 800 ஏக்கரில் நெற்செய்கை

## 150 ஏக்கரில் உப உணவு

கிளிநொச்சி, மார்ச் 29

இரணைமடுக் குளத்தின் கீழ் இம்முறை 800 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையும் 150 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்வதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி அரச செயலகத்தில் அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் மேற்குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

800 ஏக்கர் நெற்செய்கையில் 750 ஏக்கர் விவசாயிகளுக்கும் 45 ஏக்கர் விதை உற்பத்தி நிலையத்துக்கும் 5 ஏக்கர் விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கும் என ஒதுக்கப்பட்டுள்ளது. இம்முறை சிறுபோக நெற்செய்கையில் பெறப்படும் நெல்லை அடுத்த காலபோகத்துக்கான விதை நெல்லாகப் பயன்படுத்துவது எனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

மழை வீழ்ச்சிக் குறைவு காரணமாக நீர்ப்பாசனக் குளங்களில் விநியோகத்துக்காக நீர்மட்டம் மிகக் குறைவாக உள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ் பிரதானமான நெற்செய்கை இடம்பெறுகிறது. எனவே அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் என்.சுதாகரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். தயாரூபன், கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சு.கேதீஸ்வரன் உட்பட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஐ-18)

# மதுபானசாலையை மூடுமாறு கோரிக்கை

மாங்குளம், மார்ச் 29

பாரதிநகர் கிராமத்திலுள்ள மதுபானசாலையை மூடிவிடுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பாரதிநகர் கிராம சேவகர் பகுதியில் மக்கள் குடியிருப்புகளுக்கு அருகில் குறித்த மதுபான சாலை இயங்கிவருகிறது. இதனால் அருகிலுள்ள கோயில்கள், பாடசாலைகள் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் செயற்பாடுகள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தே அதை மூடிவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர். இது தொடர்பில் அந்தப் பகுதிக்கான கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக 294 பேர் கையெழுத்திட்ட மனு ஒன்றை வடமாகாண முதலமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மக்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

220 குடும்பங்கள் வாழும் இப்பகுதியில் யோகபுரம் மகா வித்தியாலயம், பாரதிமுன்பள்ளி, இந்துக் கோயில்கள் போன்றவை அமைந்துள்ளன. அத்துடன் மக்கள் செறிந்து வாழும் இந்தப் பகுதியில் மதுபானசாலையும் இயங்கி வருகிறது. தினமும் இங்கு கூடும் குடிமக்களால் ஏனையோர் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. வீதி ஓரங்களில் கோஷ்டி மோதல்களும் வீடுகளில் குடும்பத் தகராறுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அத்துடன் பெண்கள், சிறுவர் மீதான துன்புறுத்தல்களும் அதிகரித்துள்ளன. எனவே சமூகத்தின் எதிர்கால நன்மை கருதிகுறித்தமதுபானசாலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-422)

## சிறந்த கால்நடை பண்ணையாளர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 29

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. துணுக்காய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில் சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களாக மல்லாவி வடக்கைச் சேர்ந்த க.பிறேமதேவன், மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் து.ஜேசுதானந்தம், தி.வசந்தகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் சிவநாதன் கிருயகலாவும் சிறப்பு விருந்தினராக கால்நடை வைத்திய அதிகாரி சி.தயாபரனும் கலந்துகொண்டனர். (ஐ-55)

# முன்பள்ளி மாணவர்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா, மார்ச் 29

வவுனியா பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளி மாணவர்களுக்கு அமரர் சிவனாண்டி சண்முகத்தின் நினைவுதினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் முன்னாள் வவுனியா நகரசபை உப தலைவரும், கோயில்குளம் இளைஞர் கழக ஸ்தாபகருமான க.சந்திரகுலசிங்கம் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கி வைத்தார்.



இந்த நிகழ்வில் கிராம சேவகர் விஜயரட்ணம், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. பகீர்தினி, கோயில்குளம் இளைஞர் கழக ஆலோசகர் கண்ணதாசன், பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளியின் ஆசிரியைகள், கோயில்குளம் இளைஞர் கழக தொழில்நுட்ப பிரிவின் சதீஸ், , கோவில்குளம் இளைஞர் கழகத்தின் கல்வி அபிவிருத்தி குழுவின் இயக்குநர் செல்வம், கோயில்குளம் இளைஞர் கழக உறுப்பினர் சுகந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ - 402)

# போலித் துப்பாக்கிகளுடன் ஐவர் வவுனியா பொலிஸாரால் கைது

## கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தபோது

வவுனியா , மார்ச் 29

போலித் துப்பாக்கிகளை வைத்திருந்தவர்கள் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கார் ஒன்றை வவுனியா ஈரப் பெரிய குளம் பகுதியில் உள்ள சந்தியில் வைத்து பொலிஸார் சோதனை செய்த போது அதில் இரண்டு (போலி) கைத்துப்பாக்கிகள், 10 கையுறைகள் மற்றும் போலி இலக்கத் தகடுகள் சிலவும் காணப்பட்டன. இதனையடுத்து அந்த வாகனத்தில் பயணித்த ஐந்து பேரையும் பொலிஸார் கைது செய்துள்ள னர்.

கைது செய்யப்பட்டவர்களில் நான்கு பேர் கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

# வீதியின் மோசமான நிலையால் போக்குவரத்து நிறுத்தம்

மாந்தை கிழக்கு, மார்ச் 29

மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேசங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களை இணைக்கும் மல்லாவி முதலாம் யுனிற் சந்தி தொடக்கம் மாந்தை கிழக்கு எல்லை வரையான மூன்று கிலோமீற்றர் வீதி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாததால் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இந்த நிலையில் குறித்த வீதியில் நடைபெற்றுவந்த போக்குவரத்துச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அப் பகுதி மக்கள் குறித்த விடயம் தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இதனையடுத்து அவர் குறித்த வீதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாகவும் அவர் அப் பகுதி மக்களுக்கு உறுதியளித்துள்ளார். (ஐ - 86)

# கடுகு, சீரகம், இஞ்சிப் பயிர்ச் செய்கை வவுனியாவில் பரீட்சார்த்த வெற்றி

வவுனியா, மார்ச் 29

வவுனியாவில் சீரகம், கடுகு, இஞ்சி போன்ற பயிர்ச்செய்கைகள் வெற்றியளித்துள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் பரவலாக சீரகம், கடுகு, இஞ்சி போன்ற பயிர்கள் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டன.

இவை நல்ல பலனை கொடுத்துள்ளன. கடும் வறட்சி, நெற்பயிர்ச் செய்கையால் ஏற்படும் நட்டம் என்பவற்றை கருத்திற்கொண்டு வவுனியா விவசாயத் திணைக்களம் மாற்றுப் பயிர்ச் செய்கையை அறிமுகம் செய்து வருகிறது. இதன்மூலம் முதலீட்டின் 16 மடங்கு இலாபம் ஈட்டக்கூடியதாக உள்ளது. இதைவிட றொம் ஈசி மாமரங்கள், றெட் லேடி பப்பாசி பயிர்கள், உருளைக்கிழங்கு, குரக்கன் போன்றனவும் பயிரிடப்பட்டு வருகின்றன. இவ்வாறான பயிர்ச் செய்கைகளின் மூலம் ஒரு ஏக்கர் நிலப்பகுதியில் இருந்து மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா வரையான வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (ஐ-402)

# காலாவதியான பொருள்கள்; 14 வர்த்தகர்களுக்கு தண்டம்

மன்னார் , மார்ச் 29

மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களில் நுகர்வோர் அதிகார சபையினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதில் காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் 14 வர்த்தகர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த கடைகளில் விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த பிஸ்கட், குழந்தைகளுக்கான உணவுப் பொருள்கள் என்பனவற்றின் விற்பனைத் திகதிகள் காலாவதியாகியிருந்தன என குற்றஞ்சாட்டி 14 வர்த்தகர்களுக்கும் எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போது குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன் காலாவதியான பொருள்களை அழிக்கவும் உத்தரவிடப்பட்டது. (ஐ-56)

# வவுனியா பொது மருத்துவமனைக்கு இருதய சிகிச்சை நிபுணர் நியமனம்

வவுனியா , மார்ச் 29

வவுனியா பொது மருத்துவமனைக்கு இருதய சிகிச்சை நிபுணரான மருத்துவர் சமிந்த குலரட்ண கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு இருதய சிகிச்சை நிபுணர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படாமையால் இருதய நோயாளர்கள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

இதனை நிவர்த்திக்கும் முகமாகவே இருதயசிகிச்சை நிபுணர் மருத்துவர் சமிந்த குலரட்ண நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் இங்கு இருதய சிகிச்சையை சீரான முறையில் வழங்க முடியும் எனவும், பரிசோதனைகள் செய்வதற்கென திகதிகள் வழங்கப்பட்ட நோயாளிகள் குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

# கோணாவில் மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி கோணாவில் பகுதி மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி லீட்ஸ் நிறுவனத்தில் நடைபெற்றது.

மாலை 4.00 மணியளவில் லீட்ஸ் நிறுவனத்தின் மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜனேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் லீட்ஸ் நிறுவனத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ஐ.டேவ் நவின்றா, கோணாவில் தமிழ்க் கலவன் பாடசாலை முதல்வர், கோணாவில் கிராம அலுவலர், கரைச்சி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



லீட்ஸ் நிறுவனத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ஐ.டேவ் நவின்றா மாணவி ஒருவருக்கு சைக்கிளை வழங்குகிறார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் நிலையறிந்து அமெரிக்காவின் 16 வயதுடைய மாணவியொருத்தர் வழங்கிய நிதியிலிருந்தே 40 மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 1,100 குடும்பங்களைக் கொண்ட பெரும்பாலும் வறுமையான குடும்பங்களைக் கொண்ட கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் 03 கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து பாடசாலைக்கு வருகைதரும் வறிய மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டே அவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஓ-18)

# தமிழரை ஏமாற்றி நடுக்கடலில் தள்ளி விட்டுள்ளது இந்தியா

## இறுதி வேளையில் கைவிட்டமை படுதுரோகம் என்கிறது கூட்டமைப்பு

எருவில்,மார்ச் 29

அமெரிக்காவால் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்காதமை, ஒட்டுமொத்தத் தமிழ் மக்கள் முகத்தில் கரி பூசியதற்கு ஒப்பானது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஜெனிவா தீர்மானத்துக்கான வாக்களிப்பில் இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்காதமை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா, இந்த முறையும் ஆதரவாக வாக்களிக்கும் என்ற நம்பிக்கையுடனே உலகத்தமிழர்கள் எதிர்பார்த்து இருந்தார்கள்.

அந்த எதிர்பார்ப்பையும் மீறி தமக்கு மாத்திரம் சாதகமான முடிவை எடுத்து ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் இந்தியா ஏமாற்றி நடுக்கடலிலே விட்டுச் சென்றிருக்கின்றது.

ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவாக பலநாடுகள் வாக்களித்திருந்தன. அத்தோடு சில நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. ஆனால் இரண்டும் கெட்டான் நிலையில் மீதமான நாடுகள் விலகி இருந்தன.

அதிலும் குறிப்பாக இந்தியாவும் விலகியிருந்தமை தமிழ் மக்கள் வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

இந்த வாக்கெடுப்பில் இந்தியா பிரேரணையை ஆதரித்து வாக்களித்திருக்குமானால் இன்னும் பல நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கும். இது அனைத்துத் தமிழர்களுக்கும் இந்தியா செய்த மிகப்பெரும் துரோகமாகவே பார்க்க வேண்டி இருக்கின்றது.

வடக்கு,கிழக்கு மக்கள் இராணுவமயமாக்கலாலும், மனித உரிமை மீறல்களாலும் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும் இருக்கின்றார்கள்.

அதனையெல்லாம் கருத்தில் கொள்ளாது இன்று ஒட்டுமொத்த தமிழர்களும், பல நாடுகளும் பலவழிகளிலும் முயற்சிகள் எடுத்தபோதும் தொடர்ந்தும் மௌனம் காத்து வந்த இந்தியா, இறுதி நேரத்தில் பிரேரணைக்கு ஆதரவளிக்காமல் விலகிக்கொண்டது.

அதனைப் பார்க்கும் போது எதிர்காலத்தில் வடக்கு,கிழக்கு மக்களுக்கான இறுதி அரசியல் தீர்வில் தொடர்ந்தும் இந்தியா பங்களிப்புச்செய்யுமா என்பது குறித்து எல்லோர் மனங்களிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது- என்றார். (ச-31)

# டெங்கு நோயால் 30 பேர் பாதிப்பு

கிண்ணியாவில் டெங்கு நோயாளர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 30 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

அண்மைக் காலமாக டெங்கு நுளம்புகளின் அதிகரிப்பும், மக்கள் மத்தியில் டெங்கு நோய் குறித்து சரியான விழிப்புணர்வு இல்லாமையுமே இதற்கான காரணங்களாகும் என்று அவர் கூறினார்.

சுகாதார வாரத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு ஒழிப்புநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ் வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற திட்டங்களுக்கு சில அதிகாரிகள் உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்குவதில்லை.

டெங்கு நுளம்பு பரவுவதற்கு காரணமானவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்ற அவர்கள் உதவுவதால் அவர்கள் உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளது.

இதற்குப் பின்னணியாக நிற்பவர்கள் எங்களது கடமைகளைச் செய்ய முடியாமல் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர்.

டெங்கு நுளம்பு பரவுகின்ற இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றுக்குப் பொறுப்பானவர்களுக்கு தண்டனை வழங்க முற்படுகின்ற போது அவற்றைத் தடுப்பதற்கு ஒரு சிலர் முற்படுவதனால் நுளம்பு பரவும் இடங்களைக் கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது- என்றார். (ச)

# நொத்தாரிஸ் சங்கக் கூட்டம்

அம்பாறை, மார்ச் 29

கிழக்கு மாகாண பிரசித்த நொத்தாரிஸ்மார் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் சங்கத் தலைவர் மு.மன்மதராஜா தலைமையில் கிரான்குளம் என்.ரி.பி. விருந்தினர் விடுதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சங்க உறுப்பினர்களான பிரசித்த நொத்தாரிஸ்மார் கலந்துகொள்ளவுள்ளனர் என்று சங்கச் செயலர் கே.எல். ஆதம் லெவ்வை தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரசித்த நொத்தாரிஸ்மார் தொடர்பான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்று சங்க ஊடகப் பேச்சாளரும், பொருளாளருமான சீ.வரோதயன் தெரிவித்தார். (ச-30)

# காத்தான்குடியில் மரக்காலை தீக்கிரை

மட்டக்களப்பு ,மார்ச் 29

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதான வீதியிலுள்ள மரக் காலை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தீக்கிரையாகியுள்ளது என்று மரக்காலையின் உரிமையாளர் தெரிவித்தார்.

அதனால், தமக்கு 50 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த மரக்காலை முற்றாகத் தீப்பற்றி எரிந்துள்ளதுடன், அங்கிருந்த சிறிய லொறியொன்றும் மரங்களும் தீக்கிரையாகியுள்ளன.

மரக்காலை தீப்பற்றி எரிவதைக் கண்ட பிரதேசவாசிகள், மரக்காலையின் உரிமையாளருக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

அதனையடுத்து மரக்காலையின் உரிமையாளருடன் இணைந்து பிரதேசவாசிகள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் தீ விபத்து தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



மட்டக்களப்பு, காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதான வீதியிலுள்ள மர ஆலை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தீக்கிரையாகியுள்ளது.

# இராணுவ படையில் இணையுமாறு தமிழர் பகுதிகளில் துண்டுப்பிரசுரம்

## திருமலை மக்களிடையே சந்தேகங்கள்

கிண்ணியா,மார்ச் 29

தமிழ் இளம் யுவதிகளை இராணுவப் படையில் இணைந்து கொள்ளுமாறு கோரி தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் ஒலி பெருக்கிகள் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

ஆலங்கேணி, ஈச்சந்தீவு, உப்பாறு, சின்னத்தோட்டம் முதலான பகுதிகளில் இவ்விதம் அறிவிக் கப்பட்டு வருவதுடன் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டும் வருகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

இளம்யுவதிகளே உங்களுக்கு விருப்பமான தொழில் என்று தலைப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில், இலங்கை இராணுவத்துக்கு தமிழ்ப்பயிலுநர்பெண் சிப்பாய்களை ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சை திருகோணமலை 22 ஆவது படைமுகாமில் நடைபெற்று வருகின்றன என்றுகூறப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை அடுத்து மக்கள் மத்தியில் சந்தேகம் ஒன்று எழுந்துள்ளது. ஏனைய பகுதிகளில் இல்லாமல் தமிழர்கள் மட்டும் வாழும் பகுதியில் ஏன் இவ்வித அறிவித்தல் விடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் சந்தேகம் கொள்கின்றனர். எனினும் இவ்விடயம் குறித்து ஆட்சேபிக்கவோ, உரிய தரப்புக்களிடம் முறையிடவோ திராணி அற்றவர்களாக தாம் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி
(பேபி ரீச்சர் - ஒய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை)

தோற்றம்
05.07.1934

மறைவு
27.02.2014

அன்பு அன்னையாய் நல்லாசிரியையாய்
கோயில் திருமுறை ஓதும் பக்தையாய்
எல்லோருடனும் பழகுவதில் இனியவராய் வாழ்ந்து
சிவராத்திரியன்று சிவபதமடைந்த அம்மாவே!
காலங்கள் எத்தனை போயிடினும்
கருத்தோடு எமை வளர்த்த நினைவுபோகுமோ-கண்ணின்
இமையாய்க் காத்த உங்களை
கண்ணீரோடு பணிகின்றோம் அம்மா - நாங்கள்!

கடந்த 27.02.2014 வியாழனன்று சிவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (29.03.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச்செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு. (46025)(45.3.6)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மறைந்தும் மறையாத
நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி
பிறேமலோஜினி
பிரபாகரன்

மலர்ந்த மலராக
30.08.1982

கருகிய பூவாக
13.04.2010

திதி : சதுர்த்தசி
29.03.2014

கடைக்குட்டியே, கண்மணியே பிறேமாவே கண்கலங்குதம்மா
தினம் உன்னை நினைத்து பிள்ளைக் கனியமுதே
பிறேமாக்குட்டியே பிரிந்து சென்ற மாயம் தான் என்னம்மா
நான்கு ஆண்டுகள் உனை இழந்து நாங்கள் ஆறவில்லை தினம் நினைத்து
உந்தன் ஆத்மாசாந்தி அடைந்திட அனுதினமும் வேண்டிடுவோமம்மா.

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 320 0627

உனை நினைத்து வாடும்,
குடும்பத்தினர்.

# இன்று தேர்தல் மேல், தென் மாகாணங்களில்

## பாதுகாப்புக் கடமையில் 26,000 பொலிஸார்; முதலாவது பெறுபேறு 10 மணிக்குள் வெளியாகும்

கொழும்பு, மார்ச் 29

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடை பெறவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த முறை தேர்தல் களத்தில் இரண்டு மாகாண சபைகளின் சார்பில் 155 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 23 அரசியல் கட்சிகள் மற்றும் 42 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 3,794 பேர் போட்டியிடுகின்றனர்.

மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இரண்டு மாகாணங் களையும் சேர்ந்த 58 லட்சத்து 98 ஆயிரத்து 427 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இரண்டு மாகாணங்களினதும் ஆறு மாவட்டங்களிலுள்ள 57 தேர்தல் தொகுதிகளில் 4,253 வாக்களிப்பு நிலையங்களில் இன்று வாக்கெடுப்பு நடத்தப்படும். தேர்தல் பெறுபேறுகளை கணக்கிடுவதற்காக 608 வாக்கு எண்ணும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

முறைகேடுகளற்ற விதத்தில் நீதியாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடத்துவதற்காக இரண்டு மாகாணங்களிலும் சுமார் 26,000 இற்கும் அதிகமான பொலிஸார் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்கள், வாக்கு எண்ணும் நிலையங்கள் மற்றும் ரோந்து நடவடிக்கைகளுக்கென விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கலகத் தடுப்பு பொலிஸார் தயார் நிலையில் உள்ளனர்.

**பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகள்**

தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் மாவட்டந் தோறும் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதான மத்திய நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த முறை மேல் மாகாணத்தில் 250 பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

தேர்தல் கடமைகளுக்கென சுமார் 70 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு கடமை நிமித்தம் சமுகமளித்துள்ளனர்.

வாக்களிக்க தகுதி பெற்ற அனைவரும் தேர்தல் தினத்தன்று நேர காலத்துடனேயே சென்று தமது வாக்குகளை வழங்க வேண்டும்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 102 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2 ஆயிரத்து 743 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களைத் தெரிவு செய்வதற்காக 3 மாவட்டங்களிலுமுள்ள 36 தேர்தல் தொகுதிகளிலுமிருந்து 40 லட்சத்து 24 ஆயிரத்து 623 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 40 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 18 அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த ஆகக் கூடிய வேட்பாளர்களாக 1,247 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்த மாவட்டத்தின் 15 தேர்தல் தொகுதிகளிலிருந்தும் பதினைந்து லட்சத்து 52 ஆயிரத்து 733 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

**கம்பஹா மாவட்டத்தில்**

கம்பஹா மாவட்டத்தில் 40 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 13 அரசியல் கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 946 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

கம்பஹாவில் 13 தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த 15 லட்சத்து 90 ஆயிரத்து 76 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் 22 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த மாவட்டத்தில் 13 கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 550 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

களுத்துறையிலுள்ள எட்டு தேர்தல் தொகுதிகளிலிருந்தும் 8 லட்சத்து 81 ஆயிரத்து 814 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

**தென் மாகாணத்தில்**

தென் மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலிருந்து 53 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1,057 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இந்த மாகாணத்தின் 21 தேர்தல் தொகுதிகளிலிருந்தும் 18 லட்சத்து 73 ஆயிரத்து 804 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

காலி மாவட்டத்திலிருந்து 22 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான 14 அரசியல் கட்சிகள் மற்றும் 4 சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் 450 வேட்பாளர்கள் இந்த முறை போட்டி யிடுகின்றனர்.

இந்த மாவட்டத்தில் 10 தேர்தல் தொகுதிகளிலுமிருந்தும் 8 லட்சத்து 9 ஆயிரத்து 882 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் 17 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 14 அரசியற் கட்சிகள் மற்றும் 5 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 380 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்த மாவட்டத்தின் 7 தேர்தல் தொகுதிகளிலுமிருந்து 6 லட்சத்து 08 ஆயிரத்தி 524 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 14 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 9 கட்சிகள் மற்றும் 04 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த மிகவும் குறைந்த வேட்பாளர்களான 221 பேர் போட்டியிடவுள்ளனர்.

இந்த மாவட்டத்தின் நான்கு தேர்தல் தொகுதிகளிலுமிருந்து 4 லட்சத்து 55 ஆயிரத்து 398 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

கொழும்பில் 175 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**கொழும்பில் வாக்கு எண்ணும் நிலையங்கள் 175**

கம்பஹா மாவட்டத்தில் 160 வாக்கு எண்ணும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் 85 வாக்கு எண்ணும் நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காலியில் 80 நிலையங்களில் வைத்து வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

மாத்தறையில் 62 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டையில் சுச்சி தேசிய பாடசாலையில் மாத்திரம் 46 நிலையங்கள் வாக்குகளை எண்ணுவதற்காக நிறுவப்பட்டுள்ளன.

தேர்தல் நடைபெறும் தினமான இன்று இரவு 8 மணிக்குள் முதலாவது பெறுபேறாக தபால் மூல வாக்களிப்பின் பெறுபேறுகள் அறிவிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இரவு 10 மணிக்குள்ளாக முதலாவது பிரதேச வாரியான பெறுபேற்றினை அறிவிக்க தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்-என்றார். (ச)




## மாகாணசபைத் தேர்தல்களில் 2,000 பேர் கண்காணிப்பில்

### ரோஹண ஹெட்டியாராச்சி தகவல்

கொழும்பு, மார்ச் 29

தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல் தினத்தன்று தமது அமைப்பின் சார்பில் 2000 கண்காணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.



ரோஹண ஹெட்டியாராச்சி

தேர்தல் தினத்தன்று தமது அமைப்பின் சார்பில் 1,600 கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபட இருப்பதுடன், 100 நடமாடும் கண்காணிப்பு வாகனங்களில் மேலும் 400 கண்காணிப்பாளர்கள் பணியாற்றவுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் நடைபெறும் அனைத்து மாவட்டங்களிலும் 80 நடமாடும் கண்காணிப்பு வாகனங்கள் சேவையில் ஈடுபடவுள்ளன. விழிப்புணர்வூட்டும் நடமாடும் சேவையில் 12 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நேர்மையான, சட்டத்தை மதிக்கும், வன்செயல்களில் ஈடுபடாத நபர்களை வாக்காளர்கள் தெரிவுசெய்ய வேண்டும் -என்றார். (ச)

## கொழும்பு மாவட்டத்தில் 2 அடி நீள வாக்குச் சீட்டு

கொழும்பு, மார்ச் 29

மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்துக்கான வாக்குச் சீட்டு சுமார் 2 அடி நீளமானது என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு மாகாண சபைகளிலும் அதி நீளமான வாக்குச் சீட்டு கொழும்பு மாவட்டத்திலேயே பயன்படுத்தப்படுகிறது.

தேர்தல் வரலாற்றில் கொழும்பு மாவட்டத்திலேயே கூடுதலான கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இதேபோன்று கொழும்பு மாவட்டத்திலேயே அதிகூடிய வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 18 அரசியல் கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

"வெறும் பாடசாலைக்கல்வியுடன் நல்ல வேலைவாய்ப்பை பெறமுடியாது." CBM

**KU's Certificate in Business Management**

Duration : 4-6 Months (12946)
Entry Requirements : Placement test Or A/L 2 passes
Commencing on : 05/04/2014

இன்று கொட்டிக்கிடக்கும் அலுவலக முகாமைத்துவம் சம்பந்தமான (Managers, Asst. Managers, Receptionists, Office Admin, Admin Assistants, Clerical Officers, Centre Managers etc) வேலைவாய்ப்புகளுக்கு உங்களைத் தகுதியாக்கும் அங்கிகரிக்கப்பட்ட கல்விநெறி. தொழில் அனுபவம வாய்ந்த பிரித்தானிய மற்றும் இலங்கை முதுமாணிப்பட்டதாரிகள் அடங்கிய கே.யு வின் விரிவுரையாளர் குழாத்திடம் செயன்முறை அறிவுடன் கற்றுத் தேரும் உன்னத வாய்ப்பு (வருடத்தில் இரு பிரிவுகள் மட்டுமே)

Knowledge Universe Sri Lanka
021-3208342/0777302882
626,1/1, K.K.S Rd, Jaffna
http://edu.kugroup.info
A part of SDP

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் காகிதத்தில் மட்டும் வேண்டாமே ஜெனிவாத் தீர்மானம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு எதிராக, அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம், நேற்று முன்தினம் (மார்ச் 27 ஆம் திகதி) இருபத்திமூன்று நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டுவிட்டது.

அந்தத் தீர்மானத்தை தோற்கடிக்கச் செய்வதற்கு, இலங்கை அரசு தன்னால் இயலக்கூடிய வகையில் பல வகை முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அது கைகூட வில்லை. தனது நிலைப்பாட்டுக்குச் சார்பாக சில நாடுகளை ஈர்த்துக் கொண்ட போதிலும் தீர்மானம், நிறைவேறுவதை இலங்கை அரசால் தடுக்க இயல வில்லை.

மொத்தத்தில், ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் கடினமானது. கடந்த வருடத்தில் அமெரிக்கா சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பொதிந்திருந்த பரிந்துரைகளில் பிரதானமானவற்றை யேனும் நிறைவேற்றுவதில் - செயலாக்குவதில். - இலங்கை அரசு அக்கறை காட்டி இருப்பின் தற்போது இந்த நிலைமை ஏற்பட்டிராது.

கடந்த வியாழன் அன்று (27.03.2014 இல்) மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மிகவும் இறுக்கம் மிக்கது. பன்னிரண்டு நாடுகள் தனக்குச் சார்பான நிலையையும் மற்றும் பன்னிரண்டு நாடுகள் நடுநிலையையும் கைக்கொண்டதால், நடைபெற உள்ள அனைத்துலக மட்ட விசாரணை கனதி குறைந்ததாக இருக்கும் என்று அரசு எதிர்பார்க்க இயலாது ; நினைத்தல் ஆகாது.

மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்து முந்திய தவறுகளை திருத்திக் கொள்வதற்கு, கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசுக்கு வழங்கிய காலத்தை - அவகாசத்தை - அது பொடுபோக்காகக் கருதிச் செயற்பட்டதன் விளைவு இப்போது பூதாகாரமாகி உள்ளது.

தான் மனதில் கொண்டுள்ள வகை சார்ந்த செயல் முறைகள் சிலவற்றை வெளிப்படுத்துவதோடு, காரியத்தை முடித்து விடலாம், அமுக்கி விடலாம் என்று அது கருதலா காது.

தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய, அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமைகளை வழங்காது , பெரும்பான்மை என்ற கோல் கொண்டு, அவர்களுக்குரிய அனைத்துலக மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட, ஜனநாயகப் பண்பின் இலக்கணமான உரி மைகளை வழங்குவதால் எதுவும் தேய்ந்துவிடாது என்பதனை, அரச கட்டிலில் உள்ளோரும் அவர்களினது எடுபிடிகளும் உய்த்துணர வேண்டிய வேளை வந்துவிட்டது.

இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த சகல இன, சகல மத மக்களும் தத்தமது தனித்துவமான உரிமைகளை அனுபவிக்க உரித் துடையவர்கள். அரசு அல்லது ஆட்சியாளர் என்ற தலைக்குஞ்சம் கட்டிவிட்டதால், தாம் நினைத்த ஒவ்வாத சித்தாந்தங்களை வெளிப்படுத்தி அவற்றை மற்றவர்கள் மீது திணிக்க முயல்வதற்கு, ஜனநாயகம் என்று வரைவிலக்கணம் வகுக்க முடியாதே...!

இவற்றுக்கு மத்தியில், இந்திய அரசு ஜெனிவாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல், பதுங்கிப் பதுங்கி, வாக்கெடுப்பில் பங்குபற்றாது நடுவு நிலைமை வகித்தது. இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட முந்தைய இரண்டு பிரேரணைகளுக்கு ஆதரவாக வாக்களித்த இந்திய அரசு, இம்முறை வாக்கெடுப்பில் பங்கு பற்றாது சாயத்தை மாற்றிக் கொண்டது; 'பல்டி' அடித்துள்ளது!

இலங்கையின் வடக்கு, கிழக்கில் போர் நடைபெற்ற காலத்தில், இந்நாட்டு அரசுகளுக்கு அளவற்ற உதவிகளை வழங்கி, தமிழ் மக்களின் நலன்களைப் புறந்தள்ளிச் செயற்பட்ட 'புத்தி'யை அது இன்னும் கைவிடவில்லை. தனது சொந்த நலன்களை முன்னிறுத்தி ஜெனிவாத் தீர்மான வாக்கெடுப்பின் போது குத்துக்கரணம் அடித்துவிட்டது.

வன்னிப் போரின் போது, இலங்கை அரசுக்கு கைகொடுத்து, பயங்கரமான, உயிர்க்கொல்லி ஆயுதங்களை வழங்கித் தமிழ் மக்களைக் கொன்றொழிக்க உதவிய கொடுமை நிறைந்த நிலைப்பாட்டை மறந்துவிடாமல், ஜெனிவா தீர்மானத்தின் போதும் தனது உண்மையான தோற்றத்தைக் காட்டி உள்ளது !

இலங்கைத் தமிழ் மக்கள் புதுடில்லியை நம்பி எந்த விவகாரத்திலும் காலை முன்வைக்கக் கூடாது என்று 'பாடம்' கற்பித்திருக்கிறது. இரத்த வகைகளில் உள்ள பிரதிபலிப்போ இது...?

# மலேசிய விமானம்

## காணாமற்போன சம்பவம்; கற்றுத் தரும் பாடங்கள் இரண்டு

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீஎஸ்ரீ

அண்மையில் மலேசிய விமானம் காணாமற்போன சம்பவத்திலிருந்து மஹிந்த அரசு இரண்டு அரசியல் பாடங்களைக் கற்றுக்கொள்ள இயலுமென பொதுமகனொருவர் தெரிவித்திருந்தார். அவரது அந்தக் கருத்தின் உட்கிடக்கை தெரியாத அவரது நண்பரொருவர் அவை என்னவென்பதைத் தெரிந்து கொள்ள விரும்பி அவரிடம் கேள்வி தொடுத்தார்.

பௌத்த தர்மத்தில் குறிப்பிடப்படும் மூன்று கர்ம வினைகளும் வாழ்க்கையில் தவறு செய்வோருக்கு என்றோ ஒரு நாள் பாதிப்பை ஏற்படுத்தியே தீரும் என்று பதிலளித்தார் முதலாமவர்.

அவற்றால் யாருக்குப் பாதிப்பு என்கிறீர்கள்? அந்த விமானத்தில் பயணித்த அத்தனை பயணிகளுக்குமா? என்று கேட்டார் மற்றையவர். இல்லையில்லை; மலேசிய அரசின் கர்ம வினைகளே அதற்கு இப்போது பாதிப்பை ஏற்படுத்தி விட்டுள்ளன என்று கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் அந்த முதலாவது மனிதர்.

மலேசிய அரசு அந்த நாட்டின் எதிர்க்கட்சியை ஒழித்துக் கட்ட நீதி நியாயமற்ற செயற்பாடுகளை மேற்கொண்டது. அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம், அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சித் தலைவராக ஆன நாள்முதல், மலேசிய அரசு அவரை ஓட ஓட விரட்டி, கடைசியில் நீதிமன்றத்தில் அவர்மீது பொருத்தமற்ற குற்றச்சாட்டொன்றை முன்வைத்து அவரைச் சிறைக்கும் அனுப்பியது. பின்னர் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அவர் விடுதலை செய்யப்பட்டார். இம்முறை அன்வர் இப்ராஹிம் தேர்தலில் போட்டியிடத் தயாரானதையடுத்து மீண்டும் அவர் மீது பாலியல் குற்றச்சாட்டொன்றைச் சுமத்தி, அவர் தேர்தலில் போட்டியிட இயலாதவாறு நீதிமன்றத் தீர்ப்பொன்றை வழங்குவித்தார் மலேசியப் பிரதமரான நஜீப் ரஸாக்.

அன்வர் இப்ராஹிம், அரசியலில் ஈடுபட இயலாதவாறு தேர்தலில் போட்டியிட இயலாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய தினத்தன்று தான், மலேசிய விமான சேவைக்குச் சொந்தமான எம்.எச்.370 என்ற இலக்கமுடைய பயணிகள் விமானம் 239 பயணிகளுடன் மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்திலிருந்து சீனத் தலைநகர் பீஜிங் நோக்கிப் புறப்பட்டுச் சென்றவேளை திடீரெனக் காணாமற் போய்விட்டது. அந்த விமானத்தின் தலைமை விமானி ஷா, அன்வர் இப்ராஹிமினுடைய கடும் ஆதரவாளர்; தூரத்து உறவினரும் கூட. அன்வர் இப்ராஹிமுக்கு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக் காரணமாக அந்த விமானத்தின் தலைமை விமானி ஷா, மலேசிய அரசு மீது கடும் வெறுப்புக் கொண்டிருந்தார் என அவரது நண்பரொருவர் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் அன்வருக்கான நீதிமன்றத் தீர்ப்பை என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நீதிமன்றத்துக்குச் சென்றிருந்த அவர் நீதிமன்றத் தீர்ப்பைக்கேட்டு, கடும் சீற்றத்துடனேயே விமான நிலையத்துக்குக் கடமைக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. அவர் அரசு மீது கொண்ட வைராக்கியம் காரணமாக தாம் செலுத்திய விமானத்தை விபத்துக்கு உள்ளாக்கி, தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்டு வைராக்கியத்தை தீர்த்துக்கொண்டதாகவும் கதையொன்று உலாவுகின்றது. ஆனால் அன்வரோ, மலேசிய அரசு, தனது இயலாமையை, பின்னடைவை மூடி மறைக்க இத்தகையதொரு கதையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்தக் கதை உண்மையோ, பொய்யோ, மலேசிய அரசு இந்தச் சம்பவத்தின் காரணமாக உலக அரங்கில் கேலிக்குரியதொன்றாக ஆகியுள்ளது. அதேசமயம் மலேசிய அரசு இந்த விடயத்தில் உண்மையை மறைத்து நாடகமாடுவதாக சீனா குற்றஞ்சாட்டி வருகிறது. மொத்தத்தில் மலேசிய அரசு இந்த விடயத்தில் தீர்வு காண இயலாத கையறு நிலையை அடைந்துள்ளதாக சர்வதேசமும் குற்றஞ்சாட்டும் நிலை ஏற்பட்டு விட்டது.


உலகளாவிய ரீதியில் முன்னணி விமான நிறுவனங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட மலேசிய விமான நிறுவனம், தற்போது தனது கீர்த்தியையும் மதிப்பையும் இழந்து போய்விட்டுள்ளது. எந்த வேளையும் பயணிகளால் நிறைந்திருந்த, பரபரப்பாக இயங்கி வந்த கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் தற்போது வெறிச்சோடிப் போயுள்ளது. விமான இருக்கைகள் பதிவில் கடும் நெருக்கடிகள் நிலவிய நிலை தற்போது முற்றுமுழுதாக மாற்றம் கண்டுள்ளது. மலேசியாவின் முக்கிய வருமான மார்க்கமாயிருந்த உல்லாசப் பயணத்துறை முற்றுமுழுதாக வீழ்ச்சி கண்டுள்ளது. முன்னொரு போதும் மலேசிய அரசு இத்தகையதொரு பிரச்சினையொன்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததில்லை. சர்வதேசத்தின் கண்டனங்கள் ஒருபுறமும், இந்தப் பிரச்சினையை எவ்வாறு சமாளிப்பது எனத் தெரியாத நிலையிலும் மலேசிய அரசு தடுமாறி வருவதாக ஊடகங்கள் விமர்சிக்கின்றன. அதேவேளை, அன்வர் தேர்தலில் போட்டியிட இயலாத விதத்தில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனத்துக்கான இடைத் தேர்தல் நெருங்கி வருகிறது. அரசு இந்த விமான விபத்துச் சம்பவம் காரணமாக பொது மக்களது ஆதரவை முற்று முழுதாக இழந்து வருகிறது. இதையே ஒரு நாட்டின் அரசு மேற்கொள்ளும் அரசியல் தவறுகளுக்கான விளைவை. பழியை குறிப்பிட்ட அந்த நாட்டின் அரசு மட்டுமன்றி, முழுநாடுமே அனுபவிக்க நேருமெனக் கூறுவார்கள். அன்வருக்கு எதிராக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பால் மகிழ்ச்சியைக் கொண்டாடவிருந்த மலேசியப் பிரதமர் நஜீப் ரஸாக், தற்போது விஷம் அருந்திய நிலையில் அவதிப்படுபவரின் நிலைக்கு ஆளாகியுள்ளார். இதுவே அந்த மனிதர் தனது மற்றைய நண்பருக்கு விவரித்த மலேசிய நிலைமை குறித்த யதார்த்த உண்மையாகும்.

அவரது நண்பரோ அத்துடன் தமது கேள்வியை நிறுத்திக் கொண்டாரில்லை. இலங்கை அரசு மலேசிய விமானம் காணாமற் போன சம்பவம் தொடர்பாகக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ள மற்றைய அரசியல் பாடம் என்னவென்று அடுத்த கேள்வியையும் கேட்டுவிட்டார்.

அந்த இரண்டாவது பாடம், எமது நாட்டின் தலைவர்கள் மட்டுல்லாது, உலக நாடுகளின் தலைவர்களும் கற்றுக் கொள்ள வேண்டியதொரு பாடமாகும். விமானப் பயணங்களை மேற்கொள்ளும் உலக நாடுகளின் தலைவர்களது பாதுகாப்பும் பெரும் பிரச்சினையானதொன்றாக ஆகியிருப்பது மலேசிய விமானம் காணாமற் போன சம்பவம் மூலமாகத் தெளிவாகிறது. குறிப்பிட்ட விமானம் காணாமற்போன சம்பவம் மூலம் உலக பயங்கரவாதிகள் பயனடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆசியப் பிராந்திய விமானப் போக்குவரத்து எந்த அளவுக்குப் பாதுகாப்பற்றது என்பது குறித்தும் அவர்கள் விமர்சிக்கின்றனர். அமெரிக்க விமான சேவை எந்த அளவுக்கு நவீன தொழில் நுட்ப வசதிகள் கொண்டிருந்த போதிலும், அமெரிக்க விமானிகள் எந்த அளவுக்குத் திறமை மிக்கவர்களாக இருந்த போதிலும், ஆசியப் பிராந்திய நாடொன்றின் விமானமொன்றைக் கடத்தி உலக பயங்கரவாதிகள் அமெரிக்காவுக்கே பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புண்டு என அவர்கள் சந்தேகிக்கின்றனர். 'ராடர்'களின் பதிவில் சிக்கிக் கொள்ளாது விமானமொன்றைத் தாம் விரும்பும் இடத்துக்கு ஓட்டிச் செல்லும் திறன் படைத்த விமானமோட்டிகளை விலைக்கு வாங்க இயலுமென்பது குறித்து பயங்கரவாதிகள் தற்போது சிந்திக்க ஆரம்பிக்கக் கூடுமென அவர்கள் அபாய அறிவிப்பு விடுக்கின்றனர். இத்தகைய தொரு சூழமைவில் ஆசியப் பிராந்திய நாடுகளின் விமானங்களில் அரசுகளின் தலைவர்கள் பயணங்களை மேற்கொள்வது எந்த அளவுக்கு ஆபத்தானது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதுவே அவர் தமது நண்பருக்குத் தெரிவித்த அவரது நண்பரது இரண்டாவது கேள்விக்கான பதில்.

உண்மையில் தென்னாசிய வட்டகை நாடுகளில் பரவியிருந்த பயங்கரவாத விமான விபத்துக்கள், தென்னாசிய வட்டகை நாடுகளின் அரசதலைவர்களின் உயிருக்குப் பாதிப்பு ஏற்படுத்திய சம்பவங்கள் வரிசையில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியா உல் ஹக்கின் படுகொலை முக்கியத்துவம் மிக்கதொன்றாகும். அவர் பயணித்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் ஆகாயத்தில் வெடித்துச் சிதறியமைக்கான காரணம் இன்று வரை மர்மம் மிக்கதொன்றே. அந்த விமான விபத்தின் பின்னணியில் அமெரிக்கா, இந்தியா மற்றும் ரஷ்ய நாடுகளும் சம்பந்தப்பட்டிருந்ததாக கதை பரவியிருந்த போதிலும், இன்றுவரை அதற்கான உண்மையான காரணம் கண்டு பிடிக்கப்பட்டதில்லை. நேரு குடும்பத்தின் வாரிசுகளின் ஒருவரான காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் இளைய மகனான சஞ்சய் காந்தியின் மரணத்துக்கு காரணம் இத்தகைய விமான விபத்தொன்றே. அந்த விமான விபத்துக்கான காரணம் இற்றை வரை கண்டறியப்பட்டதில்லை. இலங்கையின் ஜனாதிபதியாக ஆவதற்குக் கனவு கண்டு வந்த, ஜே.ஆரின் மருமகன் முறையான உபாலி விஜயவர்த்தனவைச் சுமந்து சென்ற ஜெட் விமானம், விபத்துக்கு உள்ளானமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட்டதில்லை. சிலர் இயந்திரக் கோளாறு என்கின்றனர். சிலர் குண்டு வெடிப்பில் விமானம் வெடித்துச் சிதறியதாகக் கூறுகின்றனர். ஆயினும் அந்த விபத்துக் குறித்த இரகசிய முடிச்சு இன்று வரை அவிழ்பட்டதில்லை. முஸ்லிம் காங்கிரஸ்கட்சியின் ஸ்தாபகர் அஷ்ரப் பயணித்த விமானம் கூட வெடித்துச் சிதறியதில் அவர் உயிரிழந்ததாகக் கூறப்பட்ட போதிலும், அந்த விபத்துக்கான மர்மமும் இதுவரை துலங்கியதில்லை.

மலேசிய விமானம் காணாமற்போன அண்மைய சம்பவமும் இவற்றுக்கெல்லாம் மாறுபட்டதொன்றல்ல. ஆசிய நாட்டுத் தலைவர்கள் தமது விமானப் பயணங்களை ஆரம்பிக்க முன்னர் ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திக்க வேண்டிய நிலைமையை அண்மைய மலேசிய விமானம் காணாமற்போன சம்பவம் ஏற்படுத்தி வைத்துள்ளது எனக் கூறுவதில் தவறேதும் கிடையாது.



# நல்ல சிந்தனைகள்

## நல்ல பிரசைகளை உருவாக்கும்

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

வாழ்க்கை வாழ்வதற்கே. நாம் சிறப்பாக, மகிழ்வாக, மற்றவர்களையும் மகிழ்வித்து வாழ எமக்கு எமது சிந்தனைகள் சிறந்ததாக அமைய வேண்டும். சிறந்த சிந்தனைகளைக் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும். சிந்தனை மூலம் வாழ்வின் சாதக, பாதகங்களை அறிந்து செயற்படுவது மனிதனின் பொறுப்பாகும். மனிதன் ஒப்பிட முடியாத சிந்திக்கும் ஆற்றல் கொண்டவனாக விளங்குகின்றான். சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டே நல்லவை, தீயவை நிகழ்கின்றன. எனவே நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம்.

சிந்தனையின் விளைவே சாதனை. நம்முடைய வாழ்க்கையில் நாம் நிகழ்த்த விரும்புகின்ற சாதனைகள் சிந்தனையின் துணையின்றி எவ்வாறு நிகழ முடியும்? மனிதன் சிந்தித்த போதெல்லாம் மாற்றங்கள் கூட நிகழ்ந்துள்ளன. ஏழ்மைக்கான காரணம் பற்றி கார்ல்மாக்ஸ் சிந்தித்தபோது கம்யூனிசம் என்ற ஒரு புதிய சித்தாந்தம் தோற்றம் பெற்றது. உலகம் முழுவதும் நடைபெற்ற நிகழ்வுகள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் யாவும் மனித சிந்தனை வயப்பட்டவையாகும்.

எமது மனதில் நல்ல சிந்தனைகளும் எழுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பொருத்தமற்ற, ஆரோக்கியமற்ற, வாழ்வுக்கு ஒவ்வாத, சமூகத்தால் ஏற்றுக் கொள்ள முடியாத சில சிந்தனைகளும் தோன்றலாம். இதன் வழி செல்வோமாயின், எமது வாழ்வில் நாம் பல பின்னடைவுகளையே சந்திக்க நேரிடும். எனவே நாம் நற்சிந்தனைகளையே வளர்த்துக் கொள்ள வேண்டும். விதை நன்றாக இருந்தால், விளையும் பொருளும் நன்றாக இருக்கும் என்பதற்கு ஏற்ப, நல்ல சிந்தனைகளை குழந்தைப் பராயத்திலிருந்தே தொடங்குவது நன்று.

எமது செயல்கள் நல்லவையாக அமைவது எமது மனத்தின் சிந்தனைகளாலேயாகும். சிந்தனைகளைப் பொறுத்து மனித குணவியல்புகள் அமைந்து விடுகின்றன. நல்ல சிந்தனைகளே சகல நன்மைகளுக்கும் அடிப்படையாகும். எனவே மனம் என்னும் வளமான நிலத்தில் நல்ல சிந்தனைகளை விதைப்போமானால், நல்ல செயல் என்ற கனிகளைப் பறித்துக் கொள்ளலாம். எனவே மனித வாழ்வுக்கு உறுதியான அடித்தளம் போன்றது சாதகமான சிந்தனைகளே ஆகும்.

உலகை அழித்ததும் மனித சிந்தனையே. அவைகளை மறுபடியும் உருவாக்கியதும் மனித சிந்தனையே. தனி மனித சிந்தனையே தனிமனித வளர்ச்சிக்குக் காரணம். மனித மனம் வெற்றிடமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நல்ல சிந்தனைகளால் அது நிரப்பப்பட வேண்டும். அவை தவறும் பட்சத்தில் அந்த இடத்தை தீய சிந்தனைகள் ஆக்கிரமித்துக் கொள்ளும். சிந்தனையில் பலமில்லாதபோது அது மூளையைக் குழப்பி, மனிதனையே குழப்பி விடும். எனவே நம்பிக்கையான சிந்தனைகள் மூலம் மனதை உறுதிப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

எப்போதும் நல்ல சிந்தனைகளையே சிந்தியுங்கள். நல்ல சிந்தனைகள் மிகவும் வலிமையானவை. அவை உங்களுக்கு நல்லவற்றையே கொண்டுவந்து சேர்க்கும். எப்போதும் எதிர்மறையான சிந்தனைகளைத் தவிர்த்து ஆரோக்கியமான சிந்தனைகளுக்கு மட்டும் மனதில் இடமளியுங்கள். உங்கள் சிந்தனை உயர்வானதாக இருக்கட்டும். சுயநலம் அற்றதாக அமையட்டும். மற்றவர்களுக்கு பயன்பெறும் வகையில் இருக்கட்டும். அவ்வாறாயின் அந்த எண்ணங்களால் நீங்களும் உயர்வடைவீர்கள் மற்றவர்களும் உயர்வடைவார்கள். சிறந்த பிரசைகள் சமூகத்தில் நடமாடுவார்கள்.

> “எமது வாழ்வில் நாம் பல பின்னடைவுகளையே சந்திக்க நேரிடும். எனவே நாம் நற்சிந்தனைகளையே வளர்த்துக் கொள்ள வேண்டும். விதை நன்றாக இருந்தால் விளையும் பொருளும் நன்றாக இருக்கும் என்பதற்கு ஏற்ப நல்ல சிந்தனைகள் குழந்தைகளிடமிருந்தே தொடங்குவது நன்று.

சிந்தனைகள் எல்லையில்லாதவை. சிந்தனைகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாறுபடக்கூடியவை. சிந்தனைகள் காலத்துக்குக் காலம் மாற்றமடையக்கூடியவை. தனிப்பட்டோரது சிந்தனைகளை அவர்களது பேச்சு, எழுத்து, செயற்பாடுகள் போன்றவை மூலமாக அறிந்து கொள்ள முடியும். இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சிறந்த நண்பர்களை இனங்கண்டுபழகிக் கொள்ளும் வாய்ப்பைக் கூட ஏற்படுத்திக் கொள்ள முடியும். நேர்மறையிலான சிந்தனைகளைக் கொண்ட நண்பர்களைத் தெரிவு செய்வது சிறந்ததாகும். எனவே சிறப்பாக சிந்திப்பதன் மூலமும் அந்தச் சிந்தனைகளைப் பின்பற்றுவதன் மூலமும் சிறந்த பெறுபேறுகளைப் பெறலாம்.

நல்ல சிந்தனையாளர்களால் உருவாக்கம் பெற்ற ஒன்று, பின்னர் மனிதர்களால் தீய நோக்கங்களுக்காகவும் உபயோகிக்கப்படுவதும் உண்டு. உதாரணமாக சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வெடி மருந்து சிலரால் அழிவு தரும் விடயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே நல்ல சிந்தனையின் விளைவு நல்ல பெறுபேற்றைக் கொண்டதாக அமைவதே சிறந்ததாகும்.

மனிதனது மனதில் தோன்றும் சகல சிந்தனைகளையும் செயற்படுத்துவது எளிதன்று. எமது மனதில் தோன்றும் சிந்தனைகளில் எவை வாழ்வுக்கு உகந்தவை. எவை வாழ்வுக்கு பொருத்தமற்றவை? என்பதை நன்கு சிந்தித்து விளங்கி வாழ்வுக்கு பொருத்தமான, சமூகத்தினால் ஏற்கக் கூடிய சிறந்த சிந்தனைகளை மட்டும் ஏற்று அதன் வழி வாழ்வோமாயின், எமது வாழ்வு மகிழ்வாகவும், ஆரோக்கியமானதாகவும், இலக்கை அடையக்கூடியதாகவும், முன்மாதிரியானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் பிறந்தோம் வாழ்ந்தோம் சாதித்தோம் என்று அமையும். எனவே நல்ல சிந்தனைகள் மூலம் வளமான வாழ்வை அமைக்க முடியும் என்பதை விளங்கிக் கொண்டு அதற்கமைய வாழ்வோமாக.

---

## தவக்காலச் சிந்தனை

### பணிக்கு மதிப்பளிப்போம்

ஒரு கிராமத்தில் பிரபலமான மருத்துவர் ஒருவர் இருந்தார். அயற் கிராமங்களில் இருந்து நிறைய நோயாளிகள் வந்து அவரிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்து செல்வர். ஆனால் அவ்வூர் மக்களோ அவரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஏளனம் கலந்த அவ நம்பிக்கையுடன் பார்த்தனர். மருத்துவரின் கிராமத் தலைவருக்கு கொடிய விஷ ஜந்து தீண்டிவிட்டது. அவரைத் தொலைவில் உள்ள ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர். அவர்களின் இடத்தை விசாரித்து விட்டு என்னை விடத் திறமை மிக்க வைத்தியர் உங்கள் ஊரிலேயே உள்ளார். அவர்தான் இந்த விஷத்தைப் போக்க வல்லவர் என திருப்பி அனுப்பிவிட்டார். அப்போதுதான் மடிக்குள் மருந்திருக்க மலையில் அலைவதாக அவர்கள் எண்ணினர்.

நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. (லூக் 4:24)

சேவைக்கு, சேவை புரிவோருக்கு கொடுக்க வேண்டிய மதிப்பும் கௌரவமும் இன்று குறைந்து செல்கிறது. எந்தப் பணியாக இருந்தாலும் அவை அனைத்தும் மக்களின் வாழ்வியலுக்கு தேவையானதாகும். தத்தமது பகுதிகளில் உள்ள வளங்களையும் சேவையாளர்களையும், புத்திஜீவிகளையும் அவர்களது அறிவுரைகளையும் மதிக்கப் பழகுவோம்.

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு ஆற்றல்களையும், வல்லமைகளையும், தனித்துவத்தையும் இறைவன் கொடையாக அருளுகிறார் என நம்பி புறக்கணிப்பை விடுத்து ஆதரவு கொடுத்து நன்மையடைவோம். அவரவர் நிலையிலேயே அனைவரையும் ஏற்றுக்கொள்வோம்.

***எஸ்.தாஸ், கொழும்புத்துறை***

---

## “கலைகளுக்கு வயது ஒரு தடையல்ல”

வாசகர் திருமுகம்

அரசியல், ஆன்மிகம், விஞ்ஞானம், வியாபாரம், பாரம்பரியம், பண்பாடு, விருதுகள் எல்லாவற்றுக்குமே வயது ஒரு கட்டுப்பாடாக இருப்பதாகத் தெரியவில்லை. அனுபவம் என்பது தங்கப் புதையல் போன்றது. அழிவில்லாதது. அறிவு பூர்வமானது. அவற்றை உதாசீனம் செய்வது ஆபத்தானது. கல்வியிலும் சரி, அது சார்ந்த கலைகளிலும் சரி அறுபது வயது கடந்த, அதாவது ஓய்வு பெற்றபின் கலைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை, அவை சார்ந்த பரீட்சைகளில் பரீட்சகர்களாக நியமிக்கமுடியாது என்பது, யாரோ வரைந்த யாப்பாக நடைமுறையிருக்குமானால் இலங்கையில் அறுபது வயதுக்கு மேல் யாருமே எந்தப் பதவியிலும் இருக்க முடியாதல்லவா? குறிப்பாக கலைகளை வளர்க்க முடியாதல்லவா! வட இலங்கை என்று பெறுமதியான பெயரைக் கொண்ட சங்கீதம், நடனம், நாடகம், பண், வாத்தியம் மற்றும் பல்துறைப் பணியாற்றும் இந்தச் சபைக்கு எல்லோரையும் உள்வாங்குவதே அழகானதாகும்.

***கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.



**இடபம்**: நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**மிதுனம்**: உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். திட்ட மிடாத செலவுகளை போராடிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும்.



**கடகம்**: புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிலும் முன்எச்சரிக்கையுடன் செயற்படப் பாருங் கள்.



**சிங்கம்**: பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்த வர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட் டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு.



**கன்னி**: பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சி னைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.



**துலாம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**விருச்சிகம்**:நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.



**தனுசு**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள்.



**மகரம்**: கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.



**கும்பம்**: யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளை கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்பாருங்கள். எதிலும் அவசரப்பட வேண்டாம்.



**மீனம்**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

## நாளை

**பங்குனி-16 ஞாயிற்றுக்கிழமை | 30.03.2014**

திதி: அமாவாசை பி.இ.01.11 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.02.19 வரை
சுபநேரம்: 09.13-10.43 வரை
இராகுகாலம்:.04.43-06.13 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## சித்துப் பிராணனைக் கட்டுப்படுத்துதல்

இப்பொழுது நாம் அறிய வேண்டியது பிராணாயாமப் பயிற்சி. முதலில் சுவாசப் பையின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதுதான் யோகியின் முறையில் முதல் படியாகும். உடலில் நிகழும் நுண்ணிய இயக்கங்களை உணர நாம் விரும்புகிறோம். நமது மனம் வெளி நோக்கிச் செல்கிறது. அது அகத்தில் நிகழும் நுண்ணிய இயக்கங்களை உணர்வதில்லை. இவற்றை உணர்ந்தால் , இவற்றை அடக்கி ஆளவும் முயலலாம். நரம்புகள் உடல் முழுவதும் சென்று தசைகளை இயக்குகின்றன. அவற்றுக்கு ஊக்கமும் சக்தியும் ஊட்டுகின்றன. ஆனால் அவற்றை நாம் உணரவில்லை. அவற்றை உணர நாம் பயிலலாம் என்று யோகி கூறுகிறான். இது எவ்வாறு இயலும்? சுவாசப் பைகளின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் சில மாதங்கள் நன்கு பயின்ற பிறகு உடலில் நுட்பமான இயக்கங்களை அடக்கி ஆளலாம்.

இனி, பிராணாயாமப் பயிற்சியைச் செய்வோம். முதலில் நேராக நிமிர்ந்து வசதியான ஆசனம் போட்டு உட்காருங்கள். முதுகுத்தண்டு முதுகெலும்புடன் சேர்ந்திராவிடினும் அதனுள் இருக்கிறது. வளைந்து அமர்ந்தால் முதுகுத் தண்டுக்கு இடைஞ்சல் உண்டாகும் . அது சரியாக வேலை செய்யாது. வளைந்து உட்கார்ந்து தியானம் செய்தால் தீங்கு உண்டாகும். மார்பு, கழுத்து, தலை இவை நேர்கோட்டில் இருக்க வேண்டும். சிறிது பழக்கத்துக்குப் பிறகு இது எளிதாக அமைவதைக் காணலாம்.

இரண்டாவதாக நரம்புகளை வசப்படுத்த வேண்டும். சுவாசப் பையை ஆளும் நரம்பு மையம் மற்ற நரம்புகளையும் அடக்கி ஆள்கிறது என்பதை முன்பே கண்டோம். ஆதலால் ஒழுங்கான வசப்பட்ட சுவாசம் அவசியமாகிறது. பொதுவாக நாம் விடும் மூச்சு ஒழுங்கற்றது. தவிர ஆண்களுக்கும் , பெண்களுக்கும் மூச்சு விடுவதில் சில வேறுபாடுகள் உள்ளன.

# பெண்ணின் உயிரைக் காப்பாற்றிய ஓவியம்



சுவரில் தொங்கவிட்டிருந்த ஓவியப்படம் தான் தன் உயிரை காப்பாற்றியதாக மீட்புக் குழுவினரிடம் குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நிலச்சரிவில் சிக்கிக் கொண்ட பெண்ணின் உயிரை ஓவியம் ஒன்று காப்பாற்றிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன் மாகாணத்திலுள்ள ஓசோ என்ற இடத்தில் கடும் மழை காரணமாக சில தினங்களுக்கு முன் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் சிக்கி சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், 90 பேரின் கதி என்ன ஆயிற்று என்றே தெரியாத நிலை இருந்து வருகிறது.

இந்த நிலையில் மீட்புப் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர், வீட்டின் இடிபாடுகளில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த ராபின் யங்பிளட் (வயது-63) என்ற பெண்ணை உயிருடன் மீட்டனர்.

சுவரில் தொங்கவிட்டிருந்த ஓவியப்படம்தான் தனது உயிரைக் காப்பாற்றியதாக மீட்புக் குழுவினரிடம் குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

மேலும் 4 தினங்களுக்குப்பின்னர் தனது குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து கொண்டார்.

இந்த நிலச் சரிவில் சிக்கியிருந்தவர்களை மீட்பதற்காக தெர்மல் இமேஜிங் எனப்படும் உடல் வெப்பத்தைக் கொண்டு மனிதர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 3 | | | | | 2 |
| | | | 7 | 9 | 6 | 3 | | 5 |
| | | 3 | 4 | | 1 | | | |
| 9 | 2 | 7 | | | 8 | | 5 | |
| | 4 | | | | | | 6 | |
| | 1 | | 2 | | | 4 | 9 | 7 |
| | | | 5 | | 7 | 9 | | |
| 7 | | 1 | 9 | 6 | 2 | | | |
| 6 | | | | | 4 | | 7 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 1 | 6 | 5 | 7 | 3 | 8 | 4 |
| 3 | 4 | 5 | 9 | 8 | 2 | 1 | 7 | 6 |
| 8 | 7 | 6 | 1 | 3 | 4 | 9 | 5 | 2 |
| 4 | 5 | 2 | 7 | 1 | 8 | 6 | 9 | 3 |
| 1 | 3 | 7 | 5 | 6 | 9 | 2 | 4 | 8 |
| 6 | 8 | 9 | 4 | 2 | 3 | 5 | 1 | 7 |
| 5 | 1 | 8 | 3 | 7 | 6 | 4 | 2 | 9 |
| 7 | 9 | 3 | 2 | 4 | 5 | 8 | 6 | 1 |
| 2 | 6 | 4 | 8 | 9 | 1 | 7 | 3 | 5 |

# யானைக் குட்டிகளை தத்தெடுத்து வளர்க்கும் பெண்





அநாதைகளாக கைவிடப்பட்டவர்களை மனிதநேயம் படைத்த பலர் உதவி செய்து மறுவாழ்வு கொடுக்கிறார்கள். அதுபோன்று பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த ரெய்சல் மூர்டான்(வயது-33) என்ற பெண் 6 யானைக்குட்டிகளை தத்து எடுத்து வளர்த்து வருகிறார். ஜாம்பியாவில் லுசாகா நகருக்கு அருகே அடர்ந்த காட்டில் சரணாலயமொன்றை ஏற்படுத்தி அவர் அங்கு அந்த யானைக் குட்டிகளுடனேயே வசித்து வருகிறார். அந்த யானைக்குட்டிகள் தங்களது துதிக்கையால் அடிக்கடி அவருடைய முகத்தை வருடி நன்றி தெரிவிக்கின்றன. ஆபிரிக்கக் காடுகளில் தந்த வேட்டையில் ஈடுபடுவோரால் யானைக் குட்டிகள் அநாதைகளாகின்றன. அவற்றைக் காப்பாற்றி வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறேன். எனது வாழ்நாள் முழுவதையும் இப்பணியில் செலவிட விரும்புகிறேன் என்று ரெய்சல் தெரிவித்தார்.




# நாணயத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கப்பல்

உக்ரைன் நாட்டு நபரொருவர் சுமார் 17,000 நாணயங் களைப் பயன்படுத்தி சிறிய கப்பல் ஒன்றை உருவாக் கியுள்ளார். மிகவும் தத்ரூபமாக உருவாக் கப்பட்டுள்ள இந்தக் கப்பல் தற்போது பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.





# 7 மணித்தியாலங்களுக்கு அதிகமாகத் தூங்கினால் பக்கவாத நோய் ஏற்படும்



ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அதிக நேரம் தூங்கினால், அவர்களுக்கு பக்கவாதம் போன்ற வலிப்பு நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று அண்மைய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. பெண்களின் தூக்கத்துக்கும், நோய்ப் பாதிப்புகளுக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து வடக்கு கரோலினா பொதுசுகாதார பல்கலைக்கழக மருத்துவர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அவர்களது ஆய்வில் 7 மணி நேரத்துக்கும் அதிகமாக உறங்குபவர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று தெரியவந்துள்ளது.

சராசரி 7 மணிநேர உறங்கும் 50 முதல் 79 வயது வரை உடைய 93,676 வயதான பெண்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது 1994 முதல் 2005 வரை நாடு முழுவதும் 40 மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நோயாளிகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டனர். அதில் 37.5 விகித பெண்கள் சராசரியாக 7 மணிநேரம் உறங்குவதாகத் தெரிவித்தனர். 26.9 விகித பெண்கள் 6 மணிநேரமும், 8.3 விகித பெண்கள் 5 மணிநேரத்துக்கும் குறைவாக உறங்குவதாகத் தெரிவித்தனர். 22.7 விகிதம் பேர் 8 மணிநேரம் உறங்குவதாகவும், 4.6 விகிதம் பேர் 9 மணி நேரத்துக்கும் அதிகமாக உறங்குவதாகவும் கூறியுள்ளனர். அவர்கள் உறங்கும் நேர அளவைப் பொறுத்து பக்கவாத நோய் பாதிப்பு கணக்கிடப்பட்டது. 7 மணிநேரம் உறங்குபவர்களுக்கு பக்கவாத நோய்ப் பாதிப்பு ஏற்படுவது குறைவாக இருந்தது. 6 மணி நேரத்துக்கும் குறைவாக உறங்குபவர்களுக்கு பக்கவாதப் பாதிப்பு ஏற்படுவது 14 சதவிகிதமாக இருந்தது. அதேசமயம் 9 மணி நேரம் உறங்குபவர்களுக்கு பக்கவாதநோய்ப் பாதிப்பு 70 சதவிகிதமாக இருந்தமை தெரியவந்தது. எனவே. குறைவாக உறங்குபவர்களை விட அதிக நேரம் உறங்குபவர்களுக்கு பக்கவாத நோய்ப் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உண்டு என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.


# நேர்முகத்தேர்வில் எவ்வாறு நடந்துகொள்வது?

இன்றைய காலகட்டத்தில் ஒருவருக்கு வேலை கிடைப்பது என்பது மிகவும் அரிதான ஒன்றாக மாறி வருகிறது. அதிலும் நேர்முகத் தேர்வுக்குச் சென்றால், சிலருக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்து விடும். நீங்கள் வேலைக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவர் என்று நேர்முகத் தேர்வு செய்பவர் தீர்மானிக்கும் விதத்தில் நீங்கள் உங்களை முதலில் தயார் செய்து கொள்ள வேண்டும். அந்த அலுவலகத்தைப் பற்றிய விவரங்கள், சேவைகள், தொழிலாளர்களின் திறமை, நிதி நிலைமை, உற்பத்திப் பொருள்கள், ஆண்டுவருமானம், இலாபம், நட்டங்கள், எதிர்கால விரிவுத் திட்டம், அவர்களுடைய போட்டியாளர்கள், அவர்களது செயன்முறைகள் போன்ற விடயங்களை பற்றி முடிந்த அளவு விவரங்களை முதலில் சேகரித்துக்கொள்ளவும். நேர்முகத் தேர்வு நடக்க உள்ள இடம், நேரம் பற்றி உறுதியாகத் தெரிந்து வைத்துக் கொள்வதுடன் எப்படி சரியான நேரத் துக்குள் அங்கு போய்ச் சேர வேண்டும் என்பதையும் முன்னதாகத் தீர்மானம்செய்து வைத்துக்கொள்ளவும். நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்களை முன்கூட்டியே தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும். தேர்வை நடத்துபவர்கள் கேட்கக்கூடுமென உங்களுக்குத் தோன்றும் கேள்விகளையும், நீங் கள் அவர்களைக் கேட்க நினைப்பவை பற்றியும் ஒரு குறிப்பை முன்னதா கவே தயாரித்து வைத்துக் கொள்ளவும். நீங்கள் தான் தகுதியானவர் என்று நினைக்கும் வகையில் பதில் அளிக்கவும். உங்கள் கௌரவமான உடை அமைப்பும், ஒழுங்கு முறையும் உங்களைப்பற்றி சாதகமான எண் ணமொன்றை அவர்கள் மனதில் உருவாக்கும். ஒரு தேர்ச்சி பெற்ற நேர்முகத் தேர்வாளர், உங்கள் ஆடை, முகபாவனைகள் இவற்றை வைத்தே உங்கள் மனதையும், உங்களையும் நன்கு எடை போட்டு விடுவார். அதனால், நன்றாகக் கட்டுப்படுத்தப்பட்ட உடலசைவு, முக பாவனைகள் மூலம் எளிதில் உங்களை அவர் விரும்பக்கூடும். நேர்மையாகவும், திறந்த மனதுடனும் இருங்கள். உள்ளே நுழையும் போதே சிநேக பாவத்துடனும் நம்பிக்கையுடனும் இருங்கள். கை குலுக்குவது, உங்களுடைய சிநேக பாவம், உற்சாகம், கவர்ச்சி போன்றவற்றைத் தெரிவிக்கும் என்பதை நினைவில் வையுங்கள். நேராக, உறுதியுடன், வலிமையாக கொடுக்கப்படும் கை குலுக்கல் உங்களைப் பற்றிய விவரங்களை அவர்களுக்குத் தெரிவிக்கும்.

நீங்கள் இருக்கையில் அமரும் விதத்திலிருந்து உங்களிடம் மறைந்து கிடக்கும் விவரங்களை அவர்கள் அறியக்கூடும். அதனால், உங்களுக்கு அளிக்கப்பட்ட இருக்கையில் நேராக நிமிர்ந்து அமரவும். உங்கள் கைகள் மடிமீது அல்லது இருக்கையின் கைகள் மீது இருக்கும் படி அமரவும். அமைதியாக, வசதியாக அமரவும். அதற்காக வீட்டில் சோபாவில் அமரு வது போல கால்களை நீட்டி அமர வேண்டாம்.

உங்கள் முழங்கால் நேர்முகத் தேர்வு செய்பவரை நோக்கி இருக்கட்டும். அது, நீங்கள் அவர்கள் மீது கவனமாக இருப்பதைக் காட்டும். அப்படி அமருவது கஷ்டமாக இருந்தால், உங்கள் கைகள் நீங்கள் சொல்வதைத் தொடர்வது போல இருக்கலாம். மூக்கைத் தொடுதல், கன்னத்தைத் தேய்த்தல், வேறு எங்கோ நோக்குதல் போன்றவை உங்களிடம் ஒருவித சந்தேகத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும். அவருடைய மேசையில் உங்கள் கைகள், காகிதம், பைல்கள் மூலம் அதிகப்படி இடம் எடுத்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

வார்த்தைகளைவிடக் கண்கள் அதிகம் பேசக் கூடியவை. தேர்வாளரை உங்கள் நிலையான, உண்மையான பார்வையால் சந்தியுங்கள். இடையே கண் இமைகளை மூட மறவாதீர்கள். அதற்காக, கண்களையே சிறிது நேரம் மூடுவது தவறு. வழக்கத் துக்கு அதிகமாகக் கண் சிமிட்டுத லும், அடிக்கடி இங் கும் அங் கும் நோக்குவதும், மிகக்குறைவாக அவருடைய கண்களை சந்திப்பதும் உங் களுடைய பலவீனம் மற்றும் குறைபாடுகளைக் குறிக்கும். நேர்முகத் தேர்வு முழுவதும் தைரியமாக இருங்கள். கேட்கப்படும் கேள்விகளுக்கு பொய் பேசாதீர்கள். குடும்ப விவரம் பற்றிச் சுருக்கமாகத் தெரிவியுங்கள். நீங்கள் தேர் வானாலும் ஆகாவிட்டாலும் இறுதியில் புறப்படும்போது அவரு டன் கைகுலுக்கிவிட்டு வாருங்கள்.



## வெளியீட்டு விழா

நல்லூரான் கலைத்தாய் மன்றத்தின் ஏற்பாட்டில் விமல்ரா ஜின் பூம்புகார், குருதிப்பூக்கள், அம்மாப் பாடல் ஆகிய மூன்று குறுந் திரைப்படங்கள் மற்றும் பாடல் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு பிற் பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் வீதியாகி அறக்கொடை நிதிய (ரிசிரி) மண்டபத்தில் நடைபெறும். (ஒ)

### சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம்



கிளிநொச்சி பிர மந்தனாறைச் சேர்ந்த யோகராசா உதயணன் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.
இவர் கிளிநொச்சி மாவட்டச் செய லக சமுர்த்தி முகாமையாளராகப் பணியாற்றுகிறார். (ஒ-9)

◆◆◆



கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் கிளிநொச்சி பிரமந்தனாறைச் சேர்ந்த திருமதி உதயணன் ராதிகா தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ஒ-9)

## நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### *மாநகர சபை முதல்வர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம்.மார்ச் 29
பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி வடமாகாண சபையின் சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளது தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.
யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது வீதிகளைப் புனரமைக்கக் கோரி வடமாகாண முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைத்து இதுவரை அதற்கான பதில் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்துக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடமாகாண சபைத்தேர்தலில் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு தம்மால் மேற்கொள்ள இயலாதவைகளைத் தாம் நிறைவேற்றித் தருவதாக மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி இருக்கின்றனர். யாழ். மாநகர சபையில் நிதி போதாமையால் எதிரணி உறுப்பினர் சு.சோதிலிங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் வீதிப் புனரமைப்பு கோரிக்கை குறித்த மாநகரசபை முதல்வர் என்ற ரீதியில் என்னால் வடக்கு மாகாணசபைக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அதற்கு இதுவரை எந்தவித பதிலும் வழங்கவில்லை. அத்தகைய நிலையில் அவர்கள் ஏன் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கினார்கள் என்று கேள்வி எழுப்பினார். (வ-14)

## யாத்திரிகர் விடுதி திறந்து வைப்பு

கீரிமலை, கேணி வீதியில் அமைக்கப்பட்டுள்ள யாத்திரிகர் விடுதியின் புதிய மாடிக் கட்டடம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. சிவபூமி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனின் பெரு முயற்சியால் இந்த யாத்திரிகர் விடுதி அமைக்கப்பட்டுள்ளது.
தளமண்டபம் நலன் விரும்பிகள் மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிதி உதவியாலும், மேல் மாடி முழுவதும் வி.கயிலாசபிள்ளை குடும்பத்தினரின் நிதி உதவியுடனும் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன. (க-7)

## இயல் விழா

வவுனியா தமிழ் மாமன்றம் நடத்தும் இயல்விழா நாளை ஞாயிறு தமிழ் மாமன்றத் தலைவர் இரா. இராஜேஸ்வரன் தலைமையில் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. காலை 8.45 மணியளவில் வவுனியா பொதுநூலகத்திலுள்ள சரஸ்வதி சிலைக்கு அருகிலிருந்து ஊர்வலம் இடம்பெறும். தொடக்கவுரையை வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா வழங்குவார். (க-402)

## நூல் வெளியீடு

கந்தையா ஸ்ரீ கந்தவேள் எழுதிய "குட்டி முயலும் வேட்டை நாயும்" என்ற சிறுவர் நாடக எழுத்துருக்கள் நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். நூலின் வெளியீட்டு உரையை கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் வழங்குவார். (க-402)

## மணவாளக் கோல அபிஷேகம்

கைதடி கண்டி வீதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மணவாளக் கோல அபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 7மணிதொடக்கம்இடம்பெறும். மணவாளக் கோலக் கிரிகைகள் 31 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். மறுநாள் 108 பால்குட பவனி இடம்பெற்று அபிஷேகம் நடைபெறும். (க-9)

## வருடாந்த அலங்கார உற்சவம்


வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 05 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், மறுநாள் தேர் உற்சவமும் இடம்பெற்று 07 ஆம் திகதி ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க)

## சமகால இலக்கிய கருத்தாடல்

இணுவிலில் சமகால இலக்கியக் கருத்தாடலின் இரண்டாவது பகுதி நாளை ஞாயிற்றுக்கிழமை இணுவில் மேற்கிலுள்ள வட்டுவினி அம்மன் வீதியில் பிற் பகல் 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக் கழகத்தின் பிரதம நூலகர் சிறீகாந்தலட்சுமி தலைமையில் இடம்பெறவுள்ளது. இங்கு கிரிஷாந்த், பிரியாந்தி, ஆதிபார்த்தீபன், ஜெ.வினோத் ஆகியோர் தமது வாசிப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். (க-10)

---

**11ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **சோமசுந்தரம் குலேந்திரன்**
திதி: சதுர்த்தசி
தோற்றம் 30.03.1935
மறைவு 31.03.2003

அன்புள்ள அப்பாவே!
காலமெல்லாம் காத்திருந்து
காத்திருந்த வாழ்வுதனில்
ஆசை தீரும் வேளையிலே
அரன் கழலைச் சேர்ந்ததேனோ!

இணுவில் தெற்கு,
இணுவில்.

என்றும் நீங்கா நினைவுடன்
மனைவி, மகள், மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(30390)(12.3.6)

---

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**



திருமதி **பிலோமினா (ராணி) யோனாஸ்**
தோற்றம் 22.09.1938
மறைவு 29.03.2013

நான் நல்லதொரு
போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை
முடித்துக் கொண்டேன்.
விசுவாசத்தைக்
காத்துக் கொண்டேன்
(2 தீமோ 4:7)

உமது திட்டத்தின் படி இவ்வுலகிலிருந்து உமது பாதத்தண்டை நீர் அழைத்துக் கொண்ட உமது அடியாள் யோனாஸ் பிலோமினா (ராணி) அறிந்தும் அறியாமலும் செய்து கொண்ட பாவங்களை மன்னித்து உமது மகிமையின் நிழலில் என்றும் வாழ அருள்வேண்டி இறைஞ்சுகின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (29.03.2014) சனிக்கிழமை காலை 06.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்து கொண்டு இவருக்காக ஜெபிக்கும் படி தங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இரங்கல் திருப்பலியின் பின் அன்னாரின் வீட்டிற்கு வருகை தரவும்.

58, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(48185) (12.6)

---

**ஓராண்டு நினைவு அஞ்சலி**



தோற்றம் 20 ★ 11 ★ 1939
மறைவு 08 ★ 04 ★ 2013

திருமதி
**தனேஸ்வரி சபாரத்தினம்**

அம்மா நீங்கள் மறைந்தாலும்
எங்களுடன் நிலையாக இன்றும் நின்று வாழ்கின்றீர்கள்
உங்களின் அன்பு வார்த்தைகளாலும் ஆலோசனைகளாலும்
எம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கின்றீர்கள்
அதன்படியே இறுதிவரை வாழ்வோம் அம்மா!

நீ.மு.குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
த.மு. வங்கியடி, இணுவில் கிழக்கு.
குடும்பத்தினர்.

---

**ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்**



திருமதி **இராசமணி கனகசபை**
(இளைப்பாறிய பணியாளர்
யாழ். அரசினர் வைத்தியசாலை)
திதி: சதுர்த்தசி (29.03.2014)
தோற்றம் 15.07.1927
மறைவு 09.04.2013

அன்பின் உருவாய் எங்கள் குடும்பவிளக்காய்
திகழ்ந்து பார்போற்ற வாழவைத்த அம்மாவே!
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை - உங்கள்
பிரிவுத்துயர் நீங்கள் ஊட்டிய பாசமான
நினைவுகளால் நிலைகுலைந்து நிற்கின்றோம்
பாரில் நாம் வாழும்வரை உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொய்யாத்தோட்டம் வீதி,
இருபாலை,
கோப்பாய் தெற்கு.

உங்கள் நினைவில்
- குடும்பத்தினர்.

(46048)(45.6.3)

---

**5ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர் **வல்லிபுரம் சுவாமிநாதன்**
(ஓய்வுபெற்ற
உப - தபால் அதிபர்)
மலர்வு 25.01.1933
உதிர்வு 29.03.2009

எங்கள் அன்பு ஐயாவே!
உங்கள் இழப்பால் எங்கள் நெஞ்சில்
அலை மோதுகின்ற நினைவலைகள் என்றும்
நிலைத்திருக்கும் கல்வியே கரைகாணாச்
செல்வம் என்று ஊட்டி வளர்த்த ஐயாவே!
உங்கள் ஆசியுடன் என்றும்
உயர்வோம் நாங்கள் உங்கள் நினைவுகள் என்றும்
வந்து போகிறது ஐயாவே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கொக்குளாய்,
முல்லைத்தீவு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(46138) (12.3.6)

---

**நீங்கா நினைவலைகளுடன்**

முதலாம் ஆண்டு



**வேலுப்பிள்ளை கிருஸ்ணன்**
தோற்றம் : 16.06.1928
மறைவு : 09.04.2013
திதி : சதுர்த்தசி

நான்காம் ஆண்டு



திருமதி **சரஸ்வதி கிருஸ்ணன்**
தோற்றம் : 08.06.1932 மறைவு : 06.04.2010

இரண்டாம் ஆண்டு



**சின்னத்துரை விபுலானந்த அடிகள்**
தோற்றம் : 02.06.1958
மறைவு : 20.03.2012

அன்போடு அரவணைத்து ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழவைத்த தெய்வங்களே
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள் எம்மைவிட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் இதயத்தில் என்றும் வாழ்வீர்கள்.

தெருமூடி மடத்தடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.


என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(46183) (7.6.3)

**யா/வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

பொதுக்கூட்ட அறிவித்தல்
வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின்
வருடாந்தப் பொதுக்கூட்டம்-2014

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 2014.04.20 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு கல்லூரியின் சேர் வைத்தி லிங்கம் துரைசுவாமி ஞாபகார்த்த பிரதான மண்ட பத்தில் நடைபெறும். அனைத்து பொதுச்சபை அங்கத்தவர்களையும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். பொதுக் கூட்டத்தில் தாங்கள் சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணை முன் நகலை 2014.04.10 (வியாழன்) ஆம் திகதிக்கு முன்பு "செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா/ வேலணை மத்திய கல்லூரி, வேலணை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (46193)(3.6.4)




**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**

**முரண்பாடுகளினால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்**
**வீதி அபிவிருத்தித் திணைக்களம், வட. மாகாணம், யாழ்ப்பாணம்**

முரண்பாடுகளினால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டப் பாவனைக்கு வாடகை அடிப் படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல. 61/6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வை யிட்டு கேள்விப்பத்திரங்களைப் பெற்று 2014.04.02 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

T.சிவராஜலிங்கம், தலைவர்,
பெறுகைக் குழு,
முரண்பாடுகளினால் பாதிப்புற்ற
பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல. 61/6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இலக்கம்: 021 320 2534**
(சி12977)(12.3.6)

**கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் மாபெரும் நேர்முகத் தேர்வு.
காலம்: 30.03.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை 08.00 - 12.00 மணி வரை
இடம் : TILKO HOTEL (ரில்கோ விடுதி),
இல. 70/6, கே.கே.எஸ்.வீதி ,யாழ்ப்பாணம்.

| POSITION | QTY | SALARY |
|---|---|---|
| SECURITY GUARD | 150 | QR 1200+200 |
| STOCKER - SUPERMARKET | 75 | QR 1000+OT |
| TROLLY BOYS SUPERMARKET | 30 | QR 1000+OT |
| ROOM BOYS | 25 | QR 1000+OT |
| TEA BOYS | 23 | QR 1000+OT |
| CLEANERS | 35 | QR 1000+OT |
| CIVIL FORMAN | 10 | QR 3000+OT |
| LAND SURVEYOR | 15 | QR 3500+OT |
| L/V DRIVER WITH GCC | 10 | QR 1500+OT |
| H/V DRIVER WITH GCC | 12 | QR 1800+OT |

நிபந்தனைகள்:

- Orignal Passport, c.v உடன் வரவும்
- தங்குமிடம், மருத்துவம் இலவசம்
- திரும்பிவர விமானச் சீட்டு இலவசம்
- இரண்டு வருட ஒப்பந்தம்
- வாரத்தில் 6 நாள்கள் 8 மணித்தியால வேலை. (46192)(12.6)

**தொடர்பு: PEOPLE CONNECT: 077 395 7291**

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்துவது தனி ஈழம் உருவாக்கும் நோக்கிலேயே

## விமல் வீரவன்ச கூறுகிறார்

"இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீண்டநாள் ஆசையான தனி ஈழத்தை உருவாக்குவதற்கே ஐ.நா. தற்போது முயற்சித்து வருகிறது."

இவ்வாறு நிர்மாண, பொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்தோடு, ஐ.நாவின் இந்தத் தனி ஈழக் கனவு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை என்றும் இந்தச் சவாலில் இருந்து விடுபட வேண்டுமெனில் அரசைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக சர்வதேசம் பிரேரணையை முன்வைத்துள்ளது. இலங்கையில் போர்க் குற்றங்கள் நிகழ்ந்ததாகவும், இராணுவத்தினரை விசாரணைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கூறி அங்கு இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதுபோன்ற அழுத்தங்களுக்கு எதிர்க்கட்சிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. போன்றனவே முழுப்பொறுப்பாகும். அரசின் மீது அவர்களுக்குள்ளவெறுப்பினால் புலம் பெயர்ந்தவர்களிடம் சலுகைகளைப் பெற்று விட்டு நாட்டை பழிவாங்குகின்றனர்.

எமக்கெதிராக தற்போது ஐ.நாவில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்துமே பொய்யானவையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசைக்கமைய எப்படியாவது வடக்கையும், கிழக்கையும் நாட்டிலிருந்து பிரித்து தனி ஈழம் ஒன்றை அமைக்கவே ஜெனிவா முயற்சித்து வருகிறது.

தற்போது இந்தப் பிரேரணை குறித்து நாட்டின் எதிர்க்கட்சிகளே சிந்திக்க வேண்டும். நாட்டை இப்படியே விட்டுவிட்டால் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆனால், அரசு என்ற ரீதியில் ஐ.நாவின் தனிஈழக் கனவை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. ஆகவே, இதுபோன்ற அழுத்தங்களிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவேண்டுமெனில் அரசை பலப்படுத்த வேண்டும்" என தெரிவித்தார்.

அத்துடன் இந்திய மத்திய அரசான காங்கிரஸ் கட்சி தற்போது வெளியிட்டுள்ள அதனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், "இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் இறுதிப்போரின் போது இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட அத்து மீறல்கள் குறித்து இலங்கை அரசு விசாரணையை மேற்கொள்ள வேண்டும்" என வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாகாண சபைகளுக்கு குறிப்பாக தமிழர் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை அல்லது சுயாட்சி அதிகாரங்களை வழங்க வலியுறுத்துவோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காங்கிரஸின் இவ்வறிக்கைக்கு நேற்று முன்தினம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த விமல் வீரவன்ஸ, இலங்கை விடயத்தில் இந்தியா மூக்கை நுழைப்பதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார்.

மாநில ஆட்சி நிலவும் இந்தியாவில் உள்ள அரசுக்கு இலங்கையிலுள்ள மாகாண ஆட்சி குறித்து விமர்சனம் செய்ய எந்த அதிகாரமும் கிடையாது. காங்கிரஸ் தொடர்பில் தமிழகத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. முதலில் அதை காங்கிரஸ் சரிசெய்யட்டும். எமது மக்களுக்கு என்ன தேவை என்று எமக்குத் தெரியும். அதை இந்தியா வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இந்தியா எமது நாட்டு விடயத்தில் மூக்கை நுழைக் காது இருப்பதே சிறந்தது" என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (வ)




**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222
(சி/12214)(3.6.4)

**வைத்தியம்**

நோ, வலி, குத்து, வாதம், Asthma, குழந்தை பாக்கியம் இன்மை, அனைத்து நாள்பட்ட நோய்களுக்கும் சித்த வைத்தியர்
**Dr.R.Sivagurunathan**
சந்திப்பு இலவசம், நல்லூரில் 077 730 1669
ஞாயிறு 30/3, திங்கள் 31/3 ஆகிய தினங்களில் மட்டுமே.
(சி/13047) (3.6.4)

**காணி விற்பனைக்கு**

அம்பனை, கொல்லங்கலட்டி வீதியில் வீதி ஓரமாக கிணற்றுடன் எட்டுப் பரப்புக் காணியும், சுன்னாகம் கந்தரோடை வீதியில் ஐநூறு மீற்றர் தூரத்தில் வீதி ஓரமாக கிணற்றுடன் ஐந்து பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

(46181)(12.3.6) **தொடர்பு: 077 717 3210**

**வீடு வாடகைக்குண்டு**

சிற்றம்பலம் வளவு, செல்லத்துரை ஒழுங்கை, மல்லாகம் எனும் இடத்தில் சகல நவீன வசதிகளுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்ட வீடு வாடகைக்குண்டு.

(46179)(12.3.6) **தொடர்பு: 077 076 3351**

**நன்றி கூறுகின்றேன்**

நீசப்பாவிகள் மேல் அளவில்லாத அன்பு காட்டும் யேசுவே! முடியாத காரியங்களை நிறைவேற்றியவரே! யான் கேட்ட மன்றாட்டை இரங்கி அருளியவரே! எனது அன்பையும், நன்றியையும் உமக்குத் தெரிவிக்கின்றேன்.
நன்றி
சகல தாய்மாருக்கும் எனது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.
(46180)(12.3.6) அடியாள்.

**மணமகள் தேவை**

- 78 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20 பாவமுடையBSc பொறியியலாளர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவ முடைய BSc பொறியியலாளர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த 9 இல் சூரியனும் செவ்வாயும் 11 பாவ முடைய BA மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணிபுரிகின்றார். பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 4 பாவ முடைய பட்டதாரி மணமகன் அரச நிறவனத்தில் பணிபுரிகின்றவர். பட்டதாரி மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவ முடைய டாக்டர் மணமகனுக்கு சைவ போசன முள்ள மணமகள் தேவை.
- 73 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 22½ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற விவாகரத்துப் பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.)

தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை (46186)(4.6.3)
இல.435/3, கோயில் வீதி, நல்லூர். 077 607 0862

**IMMEDIAT VACANCY**

"COMPUTER OPERATOR"
Experience must:
*Software Packages Operation
*Accounts Knowledge & Web Operation
Apply: *AMT Transport Service
28, New Sivan Road,
Thirunelvely, Jaffna.
Contact: 077 410 7533 (46189)(3.6.4)



# இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேறியமை கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் திருப்தி

## தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் சபை யின் 25 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதையிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரும் தமிழ் மக்களும் திருப் தியடைகின்றனர் என்று கூட் டமைப்பின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தப் பிரே ரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடு நிலை வகித்தமை அந்த நாட்டை நம்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருக்கும், தமிழ் மக்களுக் கும் ஏமாற்றத்தைத் தந்துள் ளது என்றும் அவர் குறிப் பிட்டார்.

இது தொடர்பில் நேற்றுமுன் தினம்மாலை அவர் 'உதயனு'க் குக் கருத்துத் தெரிவிக்கையில்;

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட பிரே ரணை நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் 11 மேலதிக வாக்குகளால் நிறை வேற்றப்பட்டுள்ளது என்று ஜெனிவாவில் இருந்து சற்று முன்னர் எனக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பிரேரணைக்கு 23 நாடுகள் ஆதரவாகவும், 12 நாடுகள் எதிராகவும் வாக்க ளித்த நிலையில் அது வெற் றிகரமாக நிறைவேற்றப்பட்டு இலங்கைக்கு எதிரான தீர்மான மாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

12 நாடுகள் இந்தப் பிரே ரணை மீதான வாக்கெடுப்பில் பங்கு பற்றாமல் நடுநிலை வகித் துள்ளன.



இலங்கைக்கு எதிரான பிரேர ணையை ஜெனிவாவில் சமர்ப் பித்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுக்கும், இதனை ஆதரித்த நாடுகளுக் கும் நாம் மனமார்ந்த நன் றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு இங்கு நடைமுறைப் படுத்தினால் தமிழருக்கு தீர்வு மட்டுமல்ல, நாட்டில் நிரந்தர சமாதானமும் நல்லிணக்க மும் ஏற்படும் என்று நாம் நம்புகின்றோம். இந்த நிலை மைகள் இலங்கையில் ஏற்பட வேண்டும். இதற்கு ஒத்து ழைப்பு வழங்க நாம் தயாரா கவே இருக்கின்றோம். எனவே, இலங்கை அரசு இனிமேலா வது பொறுப்பாகச் செயற்பட வேண்டும்.

**இந்தியாவின் முடிவு: தமிழர்கள் ஏமாற்றம்**

இதேவேளை, ஜெனிவாப் பிரேரணை மீதான வாக் கெடுப்பில் இந்தியா ஆதரவாக வாக்களிக்கும் என்று நாம் நம்பியிருந்தோம். ஆனால், இறுதியில் இந்தியா வாக்களிப் பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்துவிட்டது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ் மக்களுக்கும் ஏமாற் றத்தைத் தந்துள்ளது.

ஜெனிவாவில் கடந்த இரண்டு தடவைகள் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்தது. ஆனால், இம்முறை கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இந் தியா ஆதரவாக வாக்களிக்கா மல் விட்டமைக்கு காரணங்கள் இருக்கும். அதனை நாம் இந் தியாவிடம் கேட்டறிவோம் - என்றார். (வ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன் றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 29

தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு அல் லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன் ரீன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராஜா, வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.எம்.ராஜா ரணசிங்க, ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரி டபிள்யூ. எம்.பி.ஐ.வீரசிங்க, யாழ்ப்பாணம் மாவட்ட விளையாட்டு அலுவலர் எம்.ஆர்.மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இடைவேளை நிகழ்வுகளில் பிரதேச செயலக உத்தி யோகத்தர்களுக்கிடையிலான போட்டியும் இடம்பெறும். (வ-7)

## ஆண்டு விழாவை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வட்டுக்கோட்டை அராலி மத்தி ஸ்ரீ முரு கன் சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப் படும் விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் ச.மோகனதாசன்தலை மையில் இடம்பெற வுள்ளன.

அன்றையதினம்காலை 6 மணியளவில் சைக் கிள் ஓட்டப்போட்டி, மர தன் ஓட்டப்போட்டி, நிலையச் சிறார்களுக் கான ஓட்டப்போட்டி கள் என்பன இடம் பெறும். பிற்பகல் 2 மணியள வில் மாணவர்களுக் கான திருக்குறள் மன னப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இறுதிநாள் கலை நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வருடப் பிறப் பன்றுநடைபெறுமென வும் நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (க)

## ஆரோக்கியமான உணவு விற்பனை நிலையம் திறப்பு

இரசாயனக் கலவை கள் அற்ற முறையில் போஷாக்கான உணவை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க விவசாய அமைச்சின் தேசிய உணவு மேம்பாட்டுச் சபைநடவடிக்கை எடுத் துள்ளது. அதற்காக ஆரோக்கியமான உணவு விற்பனை நிலையம் ஒன்று நார ஹேன்பிட்டியில்நாளை மறுதினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட வுள்ளது. இந்த நிகழ் வில் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜ பக்ஷ கலந்துகொண்டு நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார். (ச)

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 ★ 09 ★ 1903

மறைவு 29 ★ 03 ★ 1995

அமரர் கந்தையா குமரேசு



தோற்றம் 06 ★ 06 ★ 1908

மறைவு 05 ★ 04 ★ 1995

அமரர் தங்கம்மா குமரேசு

திதி:29.03.2014

பத்தொன்பது ஆண்டுகள் கடந்தும்
ஆறவில்லை எம் துயரம்

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(33425)(3.6.4)

## முதலாம் ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை

மண் மகிழ 05 06 1955



கண் நெகிழ 09 04 2013

திதி : 29.03.2014

## Lion மார்கண்டு கிரிதரன்

அகில இலங்கை சமாதான நீதிவான்
விமாகி - உரிமையாளர்

அன்பு முகம் கண்டு ஆண்டொன்று ஆனதுவே
அழியா நினைவலைகள் எம்நெஞ்சை அனலாய் சுடுகிறதே
எம் நெஞ்சம் நெகிழும் வேதனையும் வெறுமையும்
எத்தனை நாள்களப்பா ஏன் இந்த கொடுமையப்பா
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்தமுகம் தோன்ற
கண்கள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
இந்த வேதனை ஒன்றே போதும் இனியும் வேண்டாமப்பா
இதுவே போதுமப்பா
இனிய நினைவுகளும் இழந்தவலியும் இதயம் துடிக்கும் வரை
இறுதி முச்சு வரை என்னுள் சுமப்பேனையா
உயிருக்குள் உயிராய் உறைந்து எம் உயிருடன் கலந்திருக்கும்
உயிரோட்டமான உங்கள் இனிய நீங்கா நினைவலைகளுடன் வாழும்

6/1 B, லெயாட்ஸ் றோட்
பம்பலபிட்டி.

அன்பு மனைவி றோகினி - கிரிதரன்
ஆசை மகள் அம்ரிஷா - கிரிதரன்



## Deepest Condolence & Funeral Announcement

The members of the Old Boys' Association of St.Patrick's College, Jaffna, deeply mourn the demise of the *Vice President*, **Mr.M.A.N.Antony.**

The funeral will be at 3.00 pm at the College Chapel On Saturday 29.03.2014. The O.B.A. members are requested to attend the funeral.

**General Secretary, Old Boys' Association,**
ST.PATRICK'S COLLEGE JAFFNA. (46191) (7.6.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் தம்பையா
ஆனந்த வடிவேல் அவர்களின் அன்புத் தாயார்

**தம்பையா சின்னப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

(29798) (7.6.3)

**பாடசாலைச் சமூகம்**

யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், வரணி.

## ஓராண்டு நினைவலைகள்

அமரர்
வேலுப்பிள்ளை
சின்னத்துரை

தோற்றம் 12.10.1924

மறைவு 09.04.2013



ஆண்டு ஒன்று
சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்

நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

**செல்வி சகானா ஜெயரூபன்**



தோற்றம்: 14.07.2009
மறைவு: 27.02.2014

மல்லிகைப் பூ மலர்ந்தது போல்
மலர்ந்த வடிவழகே
எங்களது ஆசிரியர் ஜெயரூபனின்
எழில் மகளே!
ஐந்து வருட அழகு நிலாவே
மெல்ல மறைந்து போனதேன்
மிக வருந்தி விம்முகிறோம்
விழி துடைத்து ஆறுதலும் தருகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்.**
**கிளி/கனகாம்பிகைக் குளம், அ.த.க.பாடசாலை.**

(46193)(10.6)

---

நடைபெறவுள்ள இலங்கை கணக்காளர் சேவை மற்றும்
இலங்கை கணக்காய்வு பரீட்சகர் சேவை போட்டிப் பரீட்சைகளுக்கான

## வழிகாட்டல் வகுப்புக்கள் - 2014

### கணக்கீட்டு கற்கைகள் குழாம்

(மீண்டும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக்கு அருகில்)

வளவாளர்கள் :

| | |
|---|---|
| கணக்காய்வு மற்றும் விசாரணை அரச நிதி முகாமைத்துவம் | இலங்கை கணக்காய்வு சேவையின் சிரேஷ்ட அலுவலர் |
| நிதிக் கணக்கியல் - I நிதிக் கணக்கியல் - II | **க.பிரதீபன்** (முன்னைநாள் விரிவுரையாளரும், அரச கணக்காளரும், கணக்காய்வு சேவை அலுவலரும்) |
| பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | பிரபல ஆசிரியர்கள் |
| வணிகக் கணிதமும், புள்ளி விவரவியலும் | பிரபல விரிவுரையாளர் |

மற்றும்
HNDA, HNDM, AAT, Chartered, B.com(Ex), A/L
வணிகப்பிரிவு விரிவுரைகளும்,

சனி, ஞாயிறு, போயா தினங்கள்
மற்றும் மாலைநேர வகுப்புக்கள்.

**ஆரம்பம் : 05.04.2014 சனிக்கிழமை**
**9.00a.m**

- நிர்வாக இயக்குநர்
077 078 2522

(46196)(7.6.3)

---

# ஆங்கில இலக்கிய தேசிய மட்ட பரிசு

சங்கானை, மார்ச் 29

நாடளாவிய ரீதியில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் சமூகத்தினரிடையே நடத்தப்பட்ட அரச ஆங்கில இலக்கிய திறந்த போட்டியில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த எழுத் தாளர் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் ஆங்கில நாட்டார் வழக்கியலில் தேசிய மட்டத்தில் மூன்றாம் பரிசைப் பெற்றுள்ளார்.

இதேவேளை ஆங்கில இலக்கியத் திறனாய்வு, ஆங்கில நாட்டார் வழக்கியல் ஆகியவற்றில் மாவட்ட மட்டத்தில் முதலாம் பரிசையும், ஆங்கிலக் கவிதை, ஆங்கிலத் திறனாய்வு, ஆங்கில நாட்டார் வழக்கியலில் பிரதேச மட்டத்தில் முதலாம் பரிசையும் வென்றுள்ளார்.

குருநாகல் மாவட்டம் குளியாப் பிட்டியில் அண்மையில் நடைபெற்ற தேசிய அரச இலக்கிய விழாவில் வைத்து பரிசில் வென்றோருக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

கடந்த வருடமும் இவர் ஆங்கில இலக்கியத் திறனாய்வில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

---

## கோழிக்குஞ்சு விற்பனை

தென்பகுதி அரச திட்ட விநியோகஸ்தரான Lanka Farm இன் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள். ஊர்க்கோழிக்குஞ்சு - 75/= (கினிராஜ்,கழுத்துவெட்டி). வாத்து - 150 /=.

தொடர்பு:
0777 531 344 / 0774 669 669

(46199)(3.9.6)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 ஆம் ஆண்டு உத்தராடம் 1 ஆம் பாதம் கிரக பாவம் 18½ கொண்ட B.A பெண்ணுக்கு மணமகன் தேவை. அரச உத்தியோகம் விரும்பத் தக்கது.

தொடர்பு : 076 6501804

## வாடகைக்கு

6/1 பேக்கரி லேன், ஆஸ்பத்திரி வீதியில் 3 அறைகள் கொண்ட சகலவசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.
(வாகன தரிப்பிடம் இல்லை) பார்வையிடும் நேரம் : காலை 9.00 - பி.ப. 2.00 மணி வரை

தொடர்பு : 072 4170679

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை வீதியில் 2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
077 838 4044, 077 508 0544

(43424)(7.6.3)

---

## வருடாந்தப் பொதுக் கூட்டமும்புதிய நிர்வாகத் தெரிவும்

இடம் : நல்லூர் பிரதேச செயலக பொது மண்டபம்
காலம் : 03.04.2014 வியாழக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி
குறிப்பு : அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர், நல்லூர் ஆயுர்வேத பாதுகாப்பு சபை.

(46201) (7.6.3)

---

## கொழும்பு பல்கலைக்கழகம் வெளிவாரிப்பட்டப்படிப்பு

புதிய கல்வியாண்டிறக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும். ஏனையோர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அடிப்படைக்கணினிப்பரீட்சையொன்றில் சித்தியடைவதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கவிருப்பவோர் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள **MCS** நிறுவனத்திற்கு நேரில் வருகை தரவும்.

**Semester2,4,6** விரிவுரைகள் 29 முதல் ஆரம்பமாகின்றன. புலமைப்பரிசிலிற்கும் மேலதிகவிபரங்களிற்கும்

Type BIT<Name> & send to 772 395 895

---

## வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம்

இலவச தொழிற் திறன் பயிற்சி வகுப்புக்கள் - 5ஆவது அணி
பாடசாலையை விட்டு நீங்கியோருக்கான

01) தையல் பயிற்சி

02) மனைப் பொருளியலும், மனை அலங்காரமும் ஆகிய பயிற்சிநெறிகள்

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம்,
இல.26, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
**(யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)**
**இலவசமாக நடைபெறவுள்ளன.**

ஏற்கனவே தமது பெயர்களைப் பதிவுசெய்து கொண்டவர்கள் 2014.03.31 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு சமுகமளிக்கவும்.

அணி 1, 2, 3, 4இல் பயிற்சி பெற்றவர்களுக்கான ஆடையமைத்தல் உயர்தர பயிற்சியும் தொடங்கப்பட உள்ளது. அதில் பங்குகொள்ள விரும்புபவர்களும் தமது பெயர்களை 2014.03.31 திங்கட்கிழமை அன்று பதிவு செய்துகொள்ளலாம்.

நிர்வாகம்

(ஓ12980)(12.3.6)

---

# Full 3 Year Degrees

*You can study completely in Sri Lanka or May transfer to UK for the Final Year***

LONDON metropolitan university

BEST INVESTMENT

B.Sc. (Hons) in Computing

B.Eng. (Hons) in Software Engineering

B.A. (Hons) in Business Administration




First 2 Years Now in JAFFNA
Delivered by PhD Qualified Academic Staff

To Apply Visit www.esoft.lk/ukdegrees

UGC Approved

ESOFT - LMU Collaboration Now offers Full 3 Years Degree

Duration : 3 Years
Commencement : 05th April 2014 @ 9.00 am

**If you transfer to the UK, the applicable International Fees will have to be paid

ESOFT METRO CAMPUS - JAFFNA
No 137, K K S Road, Jaffna | Tel. 021 222 4142
HOTLINE : 077 309 9 308

www.esoft.lk
The Largest IT , Business & English Education Network

---

OLI ARAZI
ஒளி அரசி
வழங்கும்





## சமூக சேவை அரசி விருது - 2014

நாடு முழுவதிலுமுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்களில் சமூக சேவையில் முன்னின்று செயற்படுபவர்களை கௌரவிக்கும் "ஒளி அரசி"

இந்த விருதுக்கு தகுதியானவர்கள் தங்களது சுயவிபரம் மற்றும் கடந்த கால சமூக சேவைகள் தொடர்பான குறிப்புகளை இத்துடன் காணப்படும் விண்ணப்பப் படிவத்தில் பூர்த்திசெய்து, கிராம சேவையாளர் மற்றும் சமாதானநீதவானின் சிபாரிசுடன் (தனித்தனி கடிதங்களை பயன்படுத்தவும்) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சமூக சேவை அரசி -2014" என குறிப்பிட்டு பதிவு தபால் மூலம் 20 ஏப்ரல் 2014க்கு முன்பதாக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பிப்பவர்கள் ஒளிஅரசியின் நடுவர் குழுவினால் தொடர்பு கொள்ளப்பட்டு நேர்முகப் பரீட்சையின் மூலம் 25 பேர் தெரிவு செய்யப்படுவர். இவர்களில் 10 பேர் பொதுமக்கள் மத்தியில் நடத்தப்படும் வாக்களிப்பு மூலம் சிறந்த சமூக சேவகிகளாக தெரிவு செய்யப்படுவர். இவர்கள் இவ்வருட இறுதியில் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் இவர்களில் அதிகூடிய வாக்குகளைப் பெறும் 3 சமூக சேவகிகள் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

சமூக சேவை அரசி விருது - 2014

**விண்ணப்ப படிவம்**

ஏப்ரல் மாத ஒளிஅரசியில் விண்ணப்பப் படிவமும் மேலதிக விபரங்களும் வெளிவரும்

**அனுசரணையாளர்கள்**

இவ்விருதுடன் இணைய விரும்பும் சமூக சேவையில் அக்கறையுடைய நிறுவனங்கள் அனுசரணையாளர்களாக வரவேற்கப்படுகின்றன.

**தொடர்புகளுக்கு**

ஒளிஅரசி
89, ஜயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு - 14.
Mobile: 071 - 8628376, Tel: 011 - 5737895
E-mail: oliarazi33@gmail.com

# நவிபிள்ளையின் விசாரணையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 29
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு விசாரணையையும் அரசு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.


சுசில் பிரேமஜயந்த

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று அவர் கூறினார்.

நவநீதம்பிள்ளையால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை அரசு ஏற்றுக்கொள்ளாது என்று அவர் கூறினார்.

நாட்டில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதுடன் இன நல்லிணக்கத்துக்கும் கேடு ஏற்படலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு வழங்கியுள்ளது. உள்ளக ரீதியாக விசாரணைகளை நடத்தக் கூடிய தகுதியானவர்கள் இலங்கையில் இருக்கின்றார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு,மார்ச் 29
வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றுடன் காலி, கராப்பிட்டிய பிரதேசத்தில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி பெல்ஜியம் நாட்டில் தயாரிக்கப்பட்டதெனவும் அதற்கு பயன்படுத்தப்படும் ரவைகளையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (ச)

# 17 லட்சம் பெறுமதியான பொருள்கள் கடந்த வாரத்தில் மட்டும் அபகரிப்பு

## பொலிஸ் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் நகைகள் உட்பட 17 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
உரும்பிராய் தெற்கில் கடந்த சனிக்கிழமை சி.ஐ.டி. யினர் என்றுகூறித் துப்பாக்கியைக் காட்டி சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். யாழ். நகரில் கடை உடைத்து 78 ஆயிரத்து 700 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. யாழ். மார்னிப்பாய் வீதியில் இரவு நேரம் கடை உடைத்து ஒரு லட்சத்து 10 ஆயிரத்து400 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சரசாலையில் வீடு புகுந்து ஒரு லட்சத்து 58 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மீசாலை மேற்கில் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் தொட்டிலடியில் வீடு உடைத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணினி திருடப்பட்டுள்ளது.

சுன்னாகம் கிழக்கில் பட்டப்பகலில் வீடு புகுந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவிலில் வீடு உடைத்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் வீடு புகுந்து ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் புங்குடு தீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு களவுபோயுள்ளது. சந்தேகத்தில் 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொன்னாலையில் உள்ள கோயில் ஒன்று உடைத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அச்சுவேலியில் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் குரும்பசிட்டியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அச்சுவேலி மேற்கில் வீடு உடைத்து லட்சக்கணக்கான ரூபா பெறுமதியுடைய பொருள்கள் திருடப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறையில் கடை உடைத்து 51 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (வ-4)

# அமைச்சரா? முதலமைச்சரா? களைகட்டியது மாநகரசபை

## ஆளும்கட்சி, எதிரணி உறுப்பினர்கள் காரசாரமான விவாதம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முதலமைச்சரா, அமைச்சரா? என்ற விவாதம் ஆளும் கட்சி மற்றும் எதிரணி கட்சி உறுப்பினர்களிடையே காரசாரமாக இடம்பெற்றது.


மாநகர சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின்போது, மாநகர சபையின் வேலைத் திட்டங்களில் உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதில்லை என்ற விடயம் தொடர்பாக விவாதம் இடம்பெற்றது. அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஆதர வாகவும், எதிரணியின் உறுப்பினர்கள் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகவும் பெரும் விவாதப் போர் புரிந்தனர்.

அமைச்சருக்கு ஆதரவாகக் கருத்துகள் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தாங்கள் அமைச்சரிடம் முன் வைக்கும் கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்படுகின்றன என்றும், வடமாகாண முதலமைச்சர் அதில் பின் நிற்கின்றார் என்றும் குற்றஞ்சாட்டினர்.

எதிரணியின் உறுப்பினர்களோ, சபையில் கட்சி பேதம் காண்பிக்கப்படுகின்றது. தமது கோரிக்கைகளை மாநகர சபை உதாசீனப்படுத்துகின்றது. சபை உறுப்பினர்கள் என்ற வகையில் தமது கோரிக்கைகளுக்கு கட்சி பேதம் இன்றி மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டனர். அத்துடன் முதலமைச்சரா, அமைச்சரா என்ற விவாதம் இங்கு தேவையில்லை. மாநகர சபைக்கு முதல்வர் தான் பொறுப்புக்குரியவர். அவர் தான் இதற்கு பதிலளிக்க வேண்டும் என்றும் எதிரணி உறுப்பினர்கள் அங்கு வலியுறுத்தினர். (ற-14)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவராஜா



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராஜா நேற்று (28.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-.இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சயந்தினி, சிவச்செல்வன், சிவசங்கர், சிவகனேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(46207)(10)
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செலீனம்மா அந்தோனிப் பர்ணாந்து



மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 226, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செலீனம்மா அந்தோனிப் பர்ணாந்து நேற்று (28.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து-றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மடுத்தீன்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மடுத்தீன் அந்தோனி பர்ணாந்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை, செபமாலை,வரோணிக்கா, தாவீதுராசா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அழகக்கோன் (கணக்காளர், லண்டன்), யசிந்தா, மேரி மாகிறேற் (கனடா), பிரான்சிஸ் சேவியர், மேரிறோஸ், அருட்பணி, அன்ரனிப்பிள்ளை (பங்குத்தந்தை-முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தா (லண்டன்), பாலசிங்கம், சூசைதாஸ், லில்லி மக்கிரட், யுவக்கின்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியும், Dr. ஷிரான் (லண்டன்), Dr. பிரெண்டா (லண்டன்), சறோஜினி (ஜேர்மன்), அருட்சகோதரி றஞ்சினி (தி.கு.ச), சாமினி (பிரான்ஸ்), றூபினி (லண்டன்), உஷாந்தினி (ஜேர்மனி), சுரேன் (வலம்புரி), சுதாசன், சுகந்தன், சுலக்சனா (கனடா), அருட் சகோதரன் சுலக்சன் (புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி), மிக்சன் (லண்டன்), அருட்சகோதரி கிருபதர்சினி (தி.கு.ச), அனோஜினி (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்,
அருட்பணி அ.ப.அன்ரனிப்பிள்ளை
(பங்குத் தந்தை, முல்லைதீவு).
(46206)(10)


# சர்வதேச அழுத்தங்களின் ஊடாக ஆட்சி மாற்றம் ஏற்படுத்த முயற்சி

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 29
உள்நாட்டுத் தேர்தல்கள் மூலம் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாத நாடுகள், சர்வதேச அழுத்தங்களின் ஊடாக அதனைச் சாதித்துக்கொள்ள முற்படுகின்றன என்று இலங்கை அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்காவின் பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்து இந்தக் கருத்தை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே சில நாடுகள் செயற்படுகின்றன. அதற்காகவே அமெரிக்கா தனது பிரேரணையை முன் வைத்திருந்தது என்று அவர் கூறினார். இந்தப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமெரிக்கா சில நாடுகளை மிரட்டி இருக்கிறது என்று அவர் தெரிவித்தார். (ச)


## ஜோதிடர் யாழ் வருகை

திருநெல்வேலி சந்தி கொமர்ஷல்வங்கி அருகில்
இந்தியாவின் பிரபல ஜோதிடர் C.M சாமி
(B.B.A, B.A) ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்திரீக முறைப்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காண.
தொடர்பு : 077 7684406

## கண்ணீர் அஞ்சலி



புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும் எமது ஆருயிர் நண்பன்
அ. ராஜேந்திரகுமாரின் பாசமிகு தந்தையுமாகிய

### அமரர் M.A.N. அன்ரனி

அவர்களின் திடீர் மறைவினால் துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்,
19 ஆம் அணி விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா (அருள்மணி) யோசப்



கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி மரியம்மா யோசப் நேற்று (28.03.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப்-மேரி அன்னா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சாமிநாதர்-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சாமிநாதர் அந்தோனிப்பிள்ளையின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான அல்பிரட் (செல்வரட்ணம்), அல்பேட் (குணம்) அலோசியஸ் (தங்கராசா) மற்றும் பிலோமினா (நேசமணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், எமில் ஆத்மசோதி, அன்ரன் நேரு, லோறன்ஸ் (றாயன்), யூட் ஜோண்சன் (செல்வா), காலஞ்சென்றவர்களான றெக்ஸ் வசந்தகுமார், ஹில்லறி ஜெயக்குமார், டயஸ் றெஜினோல்ட் (டீன்) ஆகியோரின் அன்புத் தாயும், சோபனா, யூடித் பபித்தா ஆகியோரின் மாமியும், சின்டி, ஜோசி, யோசப் றெக்ஸ், யோஸ்வாறீஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.03.2014 திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/14, புதுவீதி, முதல் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(46209)(10)
தகவல்:
அன்ரன்நேரு (மகன்)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அமெரிக்க

இந்தியா தமிழ் மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றியுள்ளது என்றார்.

சுந்தரம் மகேந்திரன் (காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர்): இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தபோவதில்லை என்று அரசு தெளிவாகச் சொல்லிவிட்டது. அவர்கள் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் அடிபணியப் போவதில்லை. காரணம் சிங்கள பௌத்த பேரினவாதம் அவர்களுடனேயே உள்ளது.

மற்றையது, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த முக்கிய மேற்குலக நாடுகள், இலங்கையில் முதலீடுகளைச் செய்து வருகின்றன. அவர்கள் இலங்கையில் தமது முதலீடுகள் எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்றே எண்ணுவார்கள். மனித உரிமை விடயங்கள் எல்லாம் வெறும் பூச்சாண்டிக்காகவே அவர்கள் கையில் எடுக்கின்றனர். இலங்கை இதனை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று பிடிவாதமாக இருக்க மேற்குலகும் காரணம். அவர்கள் தமது வர்த்தக நலனுக்காக இலங்கையை உலுப்பப் போவதில்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் மக்கள் புரட்சி ஏற்பட்டபோது, சர்வதேச சமூகம் எவ்வாறு அங்கு திரும்பிப் பார்த்ததோ அதே போன்று, இங்கும் மக்கள் எழுச்சியினூடாகவே மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் - என்றார்.

திருமதி சரோஜா சிவச்சந்திரன் (மகளிர் அமைப்பு): இலங்கை அரசுக்கு இந்தத் தீர்மானம் அழுத்தத்தை கொடுக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு, இந்த விசாரணைகளினூடாக தீர்வு கிட்டும் என்ற மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மனித உரிமைகள் சபை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தே இது அமையும் என்று குறிப்பிட்டார்.

அ.குணபாலசிங்கம் (வலி. வடக்கு மீள்குடியேற்றத் தலைவர்): இந்தத் தீர்மானங்களினூடாக உடனடியாக எங்களது மீள்குடியமர்வு நடைபெற்று விடாது. அதற்கு காலம் எடுக்கும். ஆனால் இலங்கை அரசுக்கு அழுத்தத்தை கொடுத்துள்ளது. நாங்கள் எங்கள் குடியேற்றத்தை நடைமுறைப்படுத்த வேறு வழியையே கையாள வேண்டும்.

இந்தியா தமிழ் மக்களின் கைகளைச் சுட்டுவிட்டது. வயிற்றுக் குத்துக்கும் வடக்கத்தையானை நம்பக் கூடாதென்பார்கள். அதை இந்தியா நிரூபித்து விட்டது. இந்தியா செய்ததை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

க.சுகாஸ் (சட்டத்தரணி): கடந்த இரண்டு தீர்மானங்களைவிட இந்தத் தீர்மானம் கனதியானது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தற்போதைய நிலையில் வேறு வழியில்லை. இருக்கின்ற வழியைப் பிடித்துத்தான் எங்களுக்கான ஆதரவுத் தளத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை. இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டதை விட அதிகமாகவே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இருப்பினும் இப்போதைய சூழ்நிலையில் இந்தத் தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம். தீர்மானம் நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தே அதன் வெற்றி தோல்வி தங்கியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களிலும் உப்புச்சப்பற்ற தீர்மானத்துக்கு ஆதரித்த இந்தியா, பொறுத்த தருணத்தில் கைவிட்டு விட்டது. இந்தியாவின் கபட நாடகம் ஜெனிவா தீர்மானத்தின் ஊடாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்தியா பொறுத்த நேரத்தில் கைவிடும் என்பதற்கு இதை விட வேறு உதாரணம் தேவையில்லை.

அருட்தந்தை செபமாலை (மன்னார் பிரஜைகள்குழு): இந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றி. தமிழ் மக்கள் சார்பில் நீதி நியாயம் இருக்கின்றது என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. உள்நாட்டிலே தீர்வு சாத்தியம் இல்லை. எமக்கு சர்வதேசம் ஊடாகவே தீர்வு கிடைக்கலாம் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கின்றது. இலங்கை அரசு இனியும் சாக்குப் போக்குச் சொல்லி தப்பிக்க முடியாது.

அரச உயர் அதிகாரி ஒருவர் (பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை): இந்தத் தீர்மானத்தால் எங்களுக்கு எந்த நன்மையும் இல்லை. தமிழ் மக்களுக்கான குரலாக சர்வதேசம் இல்லை.

இந்தியா இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். அவர்களும் குற்றவாளிகளே. குற்றவாளிகள் எப்படியாவது மற்றைய குற்றவாளியைக் காப்பாற்ற நினைப்பார்களே தவிர, காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்று அவர் தெரிவித்தார். (உ-5)

### சிறந்த

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"கடந்தகால நிலைமைகளால் ஏற்பட்ட காயங்களை ஆற்றிக் கொள்வதற்கு சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்கு கிடைத்துள்ளது. இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை தனது சொந்த - சுதந்திரமான விசாரணையை நடத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பத்தகுந்த - சுதந்திரமான - விசாரணைகள் நடத்தப்படும் என்று இலங்கை அரசு வழங்கிய உறுதி மொழியின் தோல்வியின் வெளிப்பாடே இந்தத் தீர்மானம். இலங்கை எதிர்காலத்தில் சிறப்பான நிலையை அடைவதற்கு இந்தத் தீர்மானமே சிறந்த வழியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.-" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குறித்த தீர்மானம் தொடர்பில் கனடாவும் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் தீபக் ஒபுராய், இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்படுவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் உதவும். அந்தத் தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம் - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### நிறைவேற்றப்பட்ட

யில், அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையின் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தும் தீர்மானம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த நாட்டில் தலைமுறை தலைமுறையாக வன்முறைகள் நடந்தேறின. இலங்கை மக்கள் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டும். இதுதான் எமது கடைசிப் பிரேரணையின் நோக்கமும், அமெரிக்காவின் இலக்கும். இலங்கைக்கும், இலங்கை அரசுக்கும் இத்தகைய விடயங்களில் உதவத் தயாராக இருப்பதாக நாங்கள் பலமுறை குறிப்பிட்டுள்ளோம்.

இலங்கையில் தொடரும் மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல் தொடர்பில் எமது ஆழமான கவனத்தைச் செலுத்தியுள்ளோம். வன்முறை வார்த்தை ஜாலங்கள், வன்முறை நடவடிக்கைக்கான ஊக்குவிப்புக்கள் நல்லிணக்க நடவடிக்கைகளைப் பாதிக்கவே செய்யும். பொலிஸார் அத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க வேண்டும். வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதல் அல்லது சிறுபான்மையினரது வர்த்தக நடவடிக்கைகளை அச்சுறுத்தும் நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும்.

முன்னாள் போர்ப் பாதிப்பு பிரதேசங்களில் பெண்கள் மீதான வன்முறை அதிகரிப்புத் தொடர்பாக, மனித உரிமைகள் ஆணையாளரின் கவலைகளும் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் ஆட்சி வலுவாக்கப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்படாமை முடிவுக்கு கொண்டு வரவேண்டும், சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு அமெரிக்காவின் வலுவான ஆதரவு எப்போதும் உண்டு. போரின் போதான இருதரப்பு குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் தொடர்பில் எமது கவலைகளைத் தெரிவிக்கின்றோம்" - என்று அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற-5)

### வட்டுவில்

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடத்த வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இந்ததத் தகவலை வெளியிட்டார் அவர்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குறித்த இளைஞனைக் கைது செய்தபோது பலர் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு குறித்த நபர் அப்பாவி நல்லவர் எந்தவொரு தவறான செயலுக்கும் செல்ல மாட்டார் எனத் தெரிவித்து அவரை விடுவிக்குமாறு கோரினர்.

ஆனால் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதே அவரிடமிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன என்றும், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் தேடப்பட்டுவரும் கோபி பற்றிய ஆவணங்கள் மீட்கப்பட்டன. தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு சம்பவமாக இருப்பினும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பர்" - என்று தெரிவித்துள்ளார். (ற-4-86)

### போலியான

வீடு ஒன்றினுள் புகுந்து சுமார் 20 பவுண் நிறையுடைய நகைகளைக் கொள்ளையடித் திருந்தனர். இந்தநிலையிலே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

குறித்த கார் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கும் போது ஏதேச்சையாக பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. அதன்போதே குறித்த பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா ஈரப்பெரியகுளத்தை அண்மித்துள்ள கல்குனாமடு பகுதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸார் டபிள்யு.பி.கே.கே 6415 எனும் இலக்கமுடைய குறித்த சொகுசுக் காரை மறித்துச் சோதனையிட்டபோதே அதனுள் போலித்துப்பாக்கிகள், போலியான வாகன இலக்கத் தகடுகள் மற்றும் கையுறைகள் போன்ற பொருள்கள் காணப்பட்டன.

அவர்களிடம் இருந்து அசல் துப்பாக்கி போன்ற வடிவில் 2 போலியான துப்பாக்கிகளும், டபிள்யு.பி.கே.கே 5336 எனும் இலக்கமுடைய போலியான இரண்டு வாகன இலக்கத்தகடுகளும், 10 சோடி கையுறைகள் என்பவற்றை பொலிஸார் மீட்டனர்.

கொட்டாஞ்சேனையில் மெடிக்கல் சென்ரர் ஒன்றை இயக்கி வருபவரான பாலசிங்கம், அதே இடத்தைச் சேர்ந்தவர்களான இராஜேந்திரன் தம்பிராசா, ஆனந்தராசா, விஸ்வநாதன், யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த அன்னலிங்கம் அகிலன் ஆகிய 5 பேருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்தவாரம் உரும்பிராயில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துக்கும் இவர்களுக்கும் தொடர்பிருக்கிறதா என்ற கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

### பொலிஸாரின்

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"இங்கு நீதிபதிகள், அமைச்சர்கள் வருகை மற்றும் பல தேவைகள் காரணமாக பொலிஸாரைச் சகல இடங்களுக்கும் அனுப்ப வேண்டியுள்ளது. அதனாலும் பொலிஸாரின் எண்ணிக்கை இங்கு போதாமலுள்ளது. அதனாலேயே இங்கு இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுகிறோம்" என்று தெரிவித்தார்.

இங்குள்ள விசேட அதிரடிப் படையினரை ஏன் இணைத்துச் செயற்பட முடியாது என்று அவரிடம் கேட்கப்பட்டபோதே "அவர்களின் எண்ணிக்கை கூட பற்றாக்குறையாகவுள்ளது" - என்று பதிலளித்தார். (ற-4)

### ஜனாதிபதியின்

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன் பிடித்தமைக்காக கடற்படையினரால் கைதுசெய் யப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில் சென்ற முறை இலங்கைக்கு எதிராக வாக்களித்திருந்த இந்தியா இந்த முறை வாக்கெடுப்பில் கலந்து கொள் ளாமல் விலகியிருந்தது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்த ார் என்று பி.பி.சி செய்திச் சேவை தெரி வித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து 53 தமிழக மீனவர்களும் 13 படகுகளும் இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இதே தினத்தில் தலை மன்னாரில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 21 மீனவர்களும் அவர்களது 5 படகுகளும் கடற்படையினரால் பிடிக்கப்பட்டிருந்தன. அவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நெடுந்தீவு கடற்பிர தேசத்தில் படகு பழுதடைந்து கரையொதுங்கிய 5 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டிருந்தனர். அதே போன்று மன்னார் கடற் பிரதேசத்தில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் 4 படகுகளுடன் 19 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கை - இந்திய மீனவரிடையே கடந்த 25 ஆம் திகதி இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறவிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவித்தாலே பேச்சில் தமது தரப்பு கலந்துகொள்ளும் என்று தமிழக அரசு தெரிவித்திருந்தது. எனினும் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவே முடியாது என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புரையை அடுத்து, யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 58 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 13 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ள போதும், அதில் இரு படகுகளில் கடற்படையினர் திருத்த வேலைகளை மேற்கொண்டுள்ளனர். அதற்குரிய பணம் செலுத்தப்பட்டவுடன் குறித்த இரு படகுகளும் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மன்னாரில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு, நேற்றுக்காலை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட 19 மீனவர்களுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் விளக்கமறியல் விதித்து காலையில் நீதிவான் உத்தரவிட்டிருந்த நிலையில், நேற்று மாலையே அவர்களும், அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி மன்னாரில் கைது செய்யப்பட்ட 21 மீனவர்களும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால், அவர்களை நீதிமன்றில் நேற்றுமாலை முற்படுத்த முடியவில்லை என்றும் அவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை விடுவிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.நாவில் அமெரிக்கா கொண்டு வந்திருந்த தீர்மானம் தொடர்பில் இந்தியா வாக்களிக்காமல் விட்டமைக்கு நன்றிக் கடன் செலுத்துமுகமாகவா, இலங்கை தமிழக மீனவர்களை விடுவித்துள்ளது என்று இந்திய ஊடகமான தினமணி கேள்வியெழுப்பியுள்ளது. (ற-5-4)

### அமைச்சர்

அங்கிருந்த பொலிஸார் அதனைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்தனர் என்று சபையின் பிரதித் தலைவர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

வலி. கிழக்குப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தொடர்ச்சியாகத் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அதன் தலைவர் பதவியை இழந்தார். தான் பதவியிழந்ததை ஏற்கமுடியாது எனத் தெரிவித்து முன்னாள் தலைவர் அ.உதயகுமார் மாகாண உள்ளூராட்சி அமைச்சருமான முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார். இந்த நிலையில் சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெறும் என்று சபையின் பிரதித் தலைவரால் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கூட்டத்தை நடத்த அனுமதிக்க வேண்டாம் என்று சபையின் செயலாளருக்கு முதலமைச்சரின் அலுவலகத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதை அடுத்தே மாநாட்டு மண்டபத்தின் கதவுத் திறப்பைச் சபையின் செயலாளர் நேற்றையதினம் மறுத்திருந்தார். அப் போது அங்கு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் குண்டர்கள் போன்று செயற்பட்டு கதவுப் பூட்டை உடைத்து உள்ளே சென்று கூட்டம் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஐம்பதிற்கும் குறைவான மக்கள் பிரதேச சபையின் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச சபையின் செயற்பாடுகளை இயல்புநிலைமைக்குத் திருப்புமாறு கோரி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு வந்து சேர்ந்தார்.

அதன் பின்னர், சபையின் மாதாந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு, சபையின் செயலாளரிடம் மாநாட்டு மண்டப திறப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரினார் எனவும், அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தார் எனவும், குறிப்பிட்ட பிரதித் தவிசாளர் அதன் பின்னர், அங்கு 15 இற்கு மேற்பட்ட அச்சுவேலிப் பொலிஸார் நிற்கத்தக்கதாக, மாநாட்டு மண்டப கதவை உடைக்குமாறு அமைச் சர் உத்தரவிட்டார் என்றும் தெரிவித்தார்.

இதற்கமைய சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் ஐங்கரன் தலைமையிலான சிலரே சபையின் மாநாட்டு மண்டப கதவை உடைத்தனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பத்து பிரதேச சபை உறுப்பினர்கள் மாநாட்டு மண்டபத்தினுள் சென்று கூட்டத்தை நடத்தியுள்ளனர். சிறிது நேரமே இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரினால் வழங்கப்பட்ட உத்தரவையும் மீறி இடம்பெற்ற, சட்டத்துக்கு முரணான இந்த கதவு உடைப்பு நடவடிக்கை தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்வதற்கு சபையின் செயலாளர் இரு தடவைகள் நேற்றுச் சென்ற போதும் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை. முறைப்பாடு ஏற்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டார் என்று தெரிகிறது. இறுதியாக நேற்று இரவே அவரது முறைப்பாடு ஏற்கப்பட்டது. எனினும் பதியப்பட்டுள்ள முறைப்பாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியின் கருத்தை அறியும் பொருட்டு அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரின் கைத் தொலைபேசிக்கு தொடர்பு கொண்ட போதும் அவர் பதிலளிக்கவில்லை. (உ-5-11)

# எதிரணியின் தடைகளைத் தகர்த்து கோல் போட்ட கோல் காப்பாளர்





யாழ்ப்பாணம், மார்ச் 29

தன்னந்தனியே எதிரணியினரைச் சமாளித்து எதிரணியின் கோல் பரப்புக்குள் புகுந்து கோல் அடித்து அசத்தினார் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக கோல் காப்பாளர்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் பருத்தித்துறை திக்க முனை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

அதில் நேற்று இடம்பெற்ற உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக 'பி' அணிக்கு எதிரான ஆட்டத்திலேயே உடுத்துறைப் பாரதி விளையாட்டுக்கழக கோல் காப்பாளர் லக்சுதன் தனது கோல் பரப்புக்குள் கிடைத்த பந்தை தன்னந் தனியாக எதிரணி வீரர்களை இலகுவாக வெட்டிச் சென்று கோல்காப்பாளருக்கு அண்மையில் பந்தைக் கொண்டு சென்று நேர்த்தியான கோல் ஒன்றை அடித்து பார்வையா ளர்களை பரவசத்தில் ஆழ்த்தி னார்.

இப்போட்டி ஆரம்பமாகி இறுதி வரை பாரதி அணியினரின் பக்கமே பந்து முழுக்கட்டுப் பாட்டில் இருந்தது. இடை வேளைக்கு முன்பு 2:0 என்ற நிலையில் பாரதி முன்னிலையில் இருந்தது. இதில் ஜெயமோகன், சுபேஸ் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றனர்.

இடைவேளையின் பின்னர் பாரதி விளையாட்டுக்கழக வீரர்களான ஜெயமோகன் 2 கோல்களையும், லக்சுதன், விஜேந்திரன் ஆகியோர் தலா ஒரு கோலை அடிக்க 6:0 என்ற கோல் கணக்கில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் கற்கோவளம் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆரம்பமானதில் இருந்து முடியும் வரை மிகவும் பரபரப் பாக இடம்பெற்ற இந்த ஆட்டத் தில் இரு அணி வீரர்களும் கோலினைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடினர்.

இச் சூழ்நிலையில் ஆட்டம் ஆரம்பமாகி 14 ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணியின் விஜிந்தன் தனக்குக் கிடைத்த பந்து ஒன்றை சரியான முறையில் பயன்படுத்தி தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். இதனைத் தொடர்ந்து சென்.தோமஸ் அணியினர் தமது ஆட்ட வியூகங்களில் மாற்றத்தை ஏற் படுத்தி போட்டியிட்டனர். ஆனால் அவர்களுடைய அந்த வியூகங்களை முறியடித்து கோல் அடிப்பதில் சிவானந்தா அணியினர் முனைப்புக் காட்டினர். ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில்தக்க பலன் கிடைத்தது. கபில் தனக்குக் கிடைத்த பந்தை சரியாகப் பயன்படுத்த, 2:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடை வேளைக்காக இடை நிறுத்தப்பட்டது. இடை வேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் சிவானந்தா விளையாட்டுக் கழக அணியினர் தடுத்தாடுவதில் மிகவும் கவனம் செலுத்தினர். ஆனால் சென்.தோமஸ் அணியினர் கோல் பெறுவதில் குறியாக இருந்தனர். எனினும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் எதிரணி அணி பின்கள வீரர்களால் முறி யடிக்கப்பட்டன . இதனால் இரு அணியினராலும் கோல் எவையும் போடப் படாத நிலையில் 2:0 என்ற அடிப்படையில் சிவானந்தா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-400)

## பெண்கள் உதைபந்தாட்டத்தில் நாவாந்துறை றோ.க.சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகள் பங்கேற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் முதலிடம் பெற்றது.

இரண்டாம் இடத்தை சென். சாள்ஸ் மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

இந்தச் சுற்றுப்போட்டி கடந்த 14 ஆம் திகதி நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த வருட வெற்றியுடன் யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலயம் மூன்றாவது வருடமாக தொடர்ந்து முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த)

## கரப்பந்தாட்டம் அடுத்த மாதம்

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்கள் பிரிவில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு ஆகியவற்றுக்கும், பெண் களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர் வரும் ஏப்ரல் மாதம் நடுப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

எனவே மேற்படி போட்டியில் பங்குகொள்ளவுள்ள விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் வி.க. வடமாகாண ரீதியாக நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரிமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பிற்ப கல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி.க. அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி வி.க. அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரி கையும் பருத்தித்துறை ஐக் கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்க முனை வி.க. மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் வி.க. அணியை எதிர்த்து கலைமதி வி.க 'பி' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம் பன்ஸ் வி.க 'பி' அணியை எதிர்த்து சிவானந்தா வி.க. 'ஏ' அணி அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை வி.க. நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு கலைவாணி வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் வி.க. அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் வி.க. அணிமோதவுள்ளது. மாலை4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் வி.க. 'ஏ' அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் வி.க. அணிமோதவுள்ளது.

★ ★ ★

தொண்டமானாறு ஒற்றுமை விளை யாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு விநாயகர் சனசமூக நிலைய முன்றிலில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட் டத்தில் வரணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க. அணியை எதிர்த்து கெரு டாவில் விவேகா னந்தா வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

கரைச்சி பிரதேச இளைஞர் கழகங்களுக்கான பிரதேச இளைஞர் விளை யாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான எல்லே போட்டி இன்று சனிக்கிழமை உருத்திரபுரம் வி.க. மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

★ ★ ★

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடை யில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் அல்கிஜ்ரா வி. க. அணியை எதிர்த்து யங்ஸ்ரார் வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக விளை யாட்டு அவையும், யாழ்.பல்கலைக் கழக துடுப்பாட்ட அணியும் இணைந்து அழைக்கப்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங் கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனி யன்ஸ் வி.க. அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. அணி மோத வுள்ளது. (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலாவது ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## தேசிய மட்ட ஹொக்கிப் போட்டி இம்முறையும் யாழ்ப்பாணத்தில்

வலி வடக்கு மார் 29

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே வருடாந்தம் நடத்தப்படும் 19 வய துப் பிரிவு ஆண்கள், பெண்க ளுக்கான தேசிய மட்ட ஹொக் கிப் போட்டி இம்முறையும் யாழ்ப் பாணத்தில் நடத்தப்படவுள்ள தாக இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை யாழ் மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் இணைப்பாளரான வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி உப அதிபர் பிரான்சிஸ் சந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2ஆம், 3ஆம், 4ஆம்,5ஆம் திகதிகளில் இப் போட்டிகள் வட்டுக்கோட்டை



யாழ்ப்பாணக் கல்லூரி ஹொக்கி மைதானத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டும் இலங்கை தேசிய மட்டத்திலான ஹொக்கிப் போட்டிகள் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற வேளையில் 30 அணிகள் கலந்துகொண்டதாகவும் இம்முறை அதனை விட அதிக எண்ணிக்கை யான அணிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (த-86)

## டோனிக்கு ஒளிரும் 'ஸ்டம்ப்ஸ்' பரிசு



- டோனி

20/20 உலகக் கிண்ணத்தை வென்றால் இந்திய அணியின் அணித் தலைவர் டோனிக்கு ஒளிரும் ஸ்டம்ப்ஸ் பரிசாக வழங்கப்படவுள்ளது.

பங்களாதேஷில் நடைபெற்றுக் கொண்டிருக்கும், ஐந்தாவது 20/20 உலகக் கிண்ணத் தொடரில் ஒளிரும் 'ஸ்டம்ப்ஸ்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

இதன்படி இலக்கு மீது பந்து பட்டதும், பற்றரியில் இயங்கும் எல்.ஈ.டி விளக்குகள் கொண்ட 'பெய்ல்ஸ்' ஒளிரும். இதில் இருந்து அனுப்பப்படும் ரேடியோ சிக்னல் வாயிலாக ஒட்டுமொத்த 'ஸ்டம்ப்ஸ்' சிவப்பு நிறத்தில் ஜொலிக்கும்.

இதைக் கண்டுபிடித்த ஆஸ்திரேலியாவின் எக்கெர்மான் கூறுகையில், எல்.ஈ.டி., 'ஸ்டம்ப்ஸ்' தொட்டவுடன் ஒளிரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது இலக்குக் காப்பாளரின் கையுறை லேசாக பட்டால் போதும், சிவப்பு நிறத்தில் மின்னும். நடுவர்கள் முடிவு எடுக்க வும் பெரும் உதவியாக உள்ளது. இதை அமைக்கச் செலவு அதிகம். ஒரு போட்டிக்கு ரூபா 24 லட்சம் வரை தேவைப்படும். எனவே போட்டி முடிந்ததும் வீரர்கள் ஸ்டம்ப்சை எடுத்து கொண்டாட்டத்தில் ஈடுபட இம்முறை அனுமதி இல்லை.


இந்திய அணியின் அணித் தலைவர் டோனியைப் பொறுத்தவரையில், வெற்றி பெற்றவுடன் ஸ்டம்ப்சை எடுத்து வைத்துக் கொள்வதில் ஆர்வம் உள்ளவர். எனவே இந்தத் தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றால் டோனிக்காகச் சில விசேட ஏற்பாடுகளைச் செய்து ஸ்டம்ப்சைப் பரிசாகக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன் -என்றார்(த)

## ஐ.பி.எல். போட்டிகளை இவ் வருடம் நடத்தக்கூடாது

பி.எல். போட்டித் தொடரில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் நிறைவடையும் வரையில், இந்த வருடத்துக்கான போட்டிகளை நடத்தக் கூடாது என்று, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் சஷாங் மனோஹர் தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டித் தொடரின் அனைத்துப் போட்டிகளையும் பூரணமாக விசாரணை செய்யவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். போட்டிகளின் முதற்பகுதியை ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்றியமை தொடர்பிலும் அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார். இது இந்தப் போட்டி தொடர்பிலும் மேலும் பிழையான எண்ணத்தை உருவாக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

## காலிறுதியில் செரீனா, ஷரபோவா




மியாமியில் நடைபெறும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் செரீனா, ஷரபோவா காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் மியாமி நகரில் சோனி ஓபன் சர்வதேச ரென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில், பெண்கள் பிரிவில் நடந்த 4ஆவது சுற்றில் 6 முறை சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 63, 61 என்ற நேர் செற்றில் சக நாட்டவரான கோகோ வான்டேவெஜியைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார்.

இதன் மற்றொரு ஆட்டத்தில் விளையாடிய ரஷ்யாவைச் சேர்ந்த மரிய ஷரபோவா 36, 64, 61 என்ற செற் கணக்கில் பெல்ஜியத்தின் கிர்ஸ்டின் பெலிப்கென்சை முறியடித்துக் காலிறுதி வாய்ப்பை எட்டினார்.

இதனால் கடந்தாண்டில் இறுதி ஆட்டத்தில் மோதிய செரீனாவும், ஷரபோவாவும் இந்த முறை அரையிறுதியில் மோதுவதற்கு வாய்ப்புள்ளது.

இவர்களுடன் பெட்ரா கிவிடோவா (செக்குடியரசு), அக்னீஸ்கா ராட்வன்ஸ்கா (போலந்து), கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்), ஏஞ்சலிக் கெர்பர் (ஜெர்மனி) ஆகியோரும் காலிறுதிக்குத் தகுதி பெற்றனர்.

செரீனாவின் சகோதரியும், முன்னாள் சம்பியனுமான வீனஸ் வில்லியம்ஸ், சுலோவக்கியாவின் டொமினிகா சிபுல்கோவாவை எதிர் கொண்டார். 2 மணி 19 நிமிடங்கள் நீடித்த இந்த மோதலில் சிபுல்கோவா 61, 57, 63 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வீனசை வெளியேற்றினார்.

**ஆண்கள் ஒற்றையர் பிரிவு**

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீரர் ஸ்பெயினின் ரபேல் நடால் 3ஆவது சுற்றில் 61, 60 என்ற நேர் செற்றில் உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்தோமினை வீழ்த்தினார்.

கனடாவின் மிலோஸ் ராவ்னிக், அமெரிக்காவின் ஜான் இஸ்னர், இத்தாலியின் பாபியோ போக்னினி ஆகியோரும் 3ஆவது சுற்றில் வெற்றி கண்டனர்.

மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரேலிய ஓபன் சம்பியனான சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா 75, 64 என்ற நேர் செற்றில் பிரான்சின் ரோஜர் வாசெலினை வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (த)

## ஷூமாக்கரின் சோகச் செய்தி

### சந்திக்கத் தயாராக இருங்கள்

பிரபல போர்முலா கார் பந்தய வீரரான மைக்கல் ஷூமாக்கரின் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லாததால் அவர் குறித்த சோகச் செய்தியை எதிர்கொள்ள அவருடைய ரசிகர்கள் தயாராக இருக்கவேண்டும் என மருத்துவர் கேரி ஹார்ட்ஸ்டெயின் தெரிவித்துள்ளார்.

போர்முலா 1 கார்ப் பந்தயத்தில் 7 முறை சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனி வீரரான மைக்கல் ஷூமாக்கர், கடந்த டிசெம்பரில் பிரான்ஸின் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது விபத்துக்குள்ளானார். தலையில் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் தொடர்ந்து கோமாவில் இருந்து வருகிறார். அவரைக் கோமாவில் இருந்து எழுப்புவதற்காக மருத்துவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். எனினும் இதுவரையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இந்த நிலையில் போர்முலா 1 கார்ப் பந்தயத்தில் ஷூமாக்கர் பங்கேற்றிருந்த சமயத்தில் தலைமை மருத்துவராகப் பணிபுரிந்த மருத்துவர் கேரி ஹார்ட்ஸ்டெயின், தனது வலைப்பின்னலில் மைக்கல் ஷூமாக்கரை கோமாவில் இருந்து எழுப்புவதற்கான வாய்ப்பு மிக மிக குறைந்து கொண்டே வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தீர்மானம்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"இலங்கையில் மனித உரிமை ஊக்குவிப்புக்கு ஆஸ்திரேலியா இணைந்து செயற்பட்டு வருகின்றது. இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் மாத்திரமே உண்மையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இலங்கை அரசின் ஒத்துழைப்பு இல்லாமல், சர்வதேசத்தின் தலைமையிலான விசாரணை இந்த நேரத்தில், முன்னோக்கிச் செல்வதற்கான சிறந்த வழி என்று நாங்கள் நம்பவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உட்கட்டமைப்பு, முதலீடு, போதுமான பொருளாதார வளர்ச்சிக்கு இலங்கை அரசு முன்னெடுத்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இந்தத் தீர்மானம் அங்கீகரித்ததாக நாங்கள் நினைக்கவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ந-5)

### ஐ.நா.

விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க முயல வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் பிரதிப் பணிப்பாளர் டேவிட் கிறிவிஸ்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது:-

"இலங்கையில், இடம்பெற்ற மிக மோசமான போரின் போது இடம்பெற்ற மீறல்கள் குறித்து சுயாதீன, பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு ஐ.நா. ஏற்கனவே இரண்டு தடவைகள் விடுத்த கோரிக்கைகளை இலங்கை அரசு உதாசீனம் செய்தது. இப்போது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதன் மூலம் சர்வதேச நம்பகத்தன்மையை மீளப் பெறுவதற்கு இலங்கைக்குப் புதிய வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

குற்றவாளிகள் தண்டிக்கப்படாமைக்கு கலாசாரம் சரியாகக் கையாளப்பட்டு, உண்மைகள் நிரூபிக்கப்படும் விதத்தில் உயர்ந்த தரத்திலும் சிறப்பாகவும் புலனாய்வு மற்றும் விசாரணைகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்னெடுக்கக் கூடியதாக அவருக்கு வளமும், அரசியல் ஆதரவும் வழங்கப்படுவது முக்கியம்.

பழிவாங்கல்

இலங்கை அதிகார வர்க்கத்தினர், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் மட்டும் தவறிவிடவில்லை. நீதி கோருபவர்களை இலக்கு வைப்பதிலும் அவர்கள் தீவிரமாக இருக்கின்றனர்.

இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களுக்கு முடிவு கட்டும் விதத்தில் உண்மைகளைக் கண்டறிவதற்காகத் தங்களின் உயிரையும் சுதந்திரத்தையும் பணயம் வைத்து செயற்பட்ட - மனித உரிமைகளைப் பேணுவதற்காகப் போராடி வருபவர்களுக்கும் - இந்தத் தீர்மானம் மிக முக்கியமானதாகும்.

அது போன்றே நீதிக்காக காத்திருந்தவர்களான பாதிப்புற்றோருக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் இந்தத் தீர்மானம் அதேயளவு முக்கியமானது"- என்று தெரிவித்தார். (ந-5)

### தமிழக

அவர்களிடம் நேற்று இந்தியத் துணைத் தூதுவர் முன்னிலையில் இலங்கைக் கடற்படையினரால் படகுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு ஊர்காவற்றுறை, காரைநகர், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 24 படகுகளே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காரைநகர் கடற்பரப்பில் 19 படகுகளும் காங்கேசன்துறை கடற்பரப்பில் 5 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றை மீட்டுச்செல்வதற்காக இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 29 மீனவர்கள் ஐந்து படகுகளிலும், ஜெகதாப்பட்டிணம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 43 மீனவர்கள் 9 படகுகளிலும் வந்திருந்தனர்.

அதேவேளை இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளிலிருந்து 21 மீனவர்களைக் கொண்ட மற்றொரு அணி இன்று 4 படகுகளில் மன்னார் கடற்பகுதிக்கு வருகை தரவுள்ளனர். மன்னாரில் நங்கூரமிடப்பட்டுள்ள ஐந்து படகுகளையும், தலை மன்னாரில் நங்கூரமிடப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு படகுகளையும் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று கூறப்படுகின்றது. (ந-4)

### 44

கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, முல்லைத்தீவு உடையார்கட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட, தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி ஒருவரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பயங்கரவாத பொலிஸாரால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவரும். கொழும்புக் 4 ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த மாதம் 7 ஆம் திகதி முதல் வடக்கில் தொடர்ச்சியாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரின் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழீழத்தின் காவலர்கள் என்ற துண்டுபிரசுரம் வைத்திருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படும் இரு இளைஞர்களின் கைதைத் தொடர்ந்து, இந்தத் தொடர் கைது வேட்டையை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் தம்மால் தேடப்படுபவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டு 3 பேரினது ஒளிப்படங்களுடனான விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்டு தொழில் நிமித்தம் கொழும்பில் தங்கியிருந்த 12 பேர் உள்ளிட்ட 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 4 பேர் பெண்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)



# ஆஸி.க்கு அதிரடி கொடுத்தார் சமி

## 6 இலக்குகளால் அமோக வெற்றி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 20/20 உலகக் கிண்ணத் தொடரின் நேற்றைய லீக் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

ஐந்தாவது 20/20 உலகக் கிண்ணத் தொடர் பங்களாதேஷில் இடம்பெற்று வருகிறது. இதன் 'பிரிவு-2' லீக் போட்டியில், ஆஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் பெய்லி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

ஆஸ்திரேலிய அணிக்கு பின்ச் (16), வோர்னர் (20) நிலைக்கவில்லை. வொட்சன் (2) ஏமாற்றினார்.

மக்ஸ்வெல் (45) அதிரடி காட்டினார். ஹொட்ஜ் 35 ஓட்டங்களை எடுத்தார். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற, ஆஸ்திரேலிய அணி 20 பந்துப்பரிமாற்றங்களில், 8 இலக்குக்கு 178 ஓட்டங்கள் எடுத்தது. ஹெடின் (15), முரிஹெத் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மேற்கிந்திய தீவுகளுக்கு டுவைன் ஸ்மித் (17) ஏமாற்றினார். அரைச் சதம் கடந்த கெய்ல் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிம்மன்ஸ் (22) ஓரளவு கைகொடுத்தார். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இதில் அணித் தலைவர் சமி இரண்டு சிக்சர் விளாச, மேற்கிந்தியத் தீவுகள் அணி 19.4 பந்துப்பரிமாற்றங்களில், 4 இலக்குக்கு 179 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. பிராவோ (27), சமி (34) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். (த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

புதிய உயர் கல்லூரியில்
SLA/CS வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் 30.03.2014
ஞாயிற்றுக்கிழமை 9 மணி

இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு III இற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 28.03.2014 வர்த்தமானி அறிவித்தலில் கோரப்பட்டுள்ளது.
இப் போட்டிப் பரீட்சையில் திறந்த போட்டிப் பரீட்சையில் 62 வெற்றிடங்களும் மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 43 வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.
இப்பரீட்சை June மாதம் நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் துறைசார் விரிவுரையாளர்களினால் வார இறுதி நாள்களில் ( சனி, ஞாயிறு) நடத்தப் படவுள்ளது.
அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில் தொடர் விரிவுரைகளாக நடைபெறும்.

பாடங்கள்
01 - நிதிக்கணக்கீடு - I
02 - நிதிக்கணக்கீடு - II
03 - கிரய முகாமைக் கணக்கீடு
04 - பொது நிதி முகாமைத்துவம்
05 - கணக்காய்வும் புலனாய்வும்
06 - பொது உளச்சார்பும், நுண்ணறிவும்

ஆரியகுளம், யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம் - 021 2228148

# அரையிறுதிக்குள் இந்தியா

பங்களாதேஷ் அணியை 8 இலக்குகளால் வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது இந்தியா.

சர்வதேச 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் இடம்பெற்றுவருகிறது.

இதில் நேற்று இடம்பெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்தது. இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. ஒரு கட்டத்தில் 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறிய பங்களாதேஷ் அணிக்கு அனமுல்ஹக், முஸ்பிகுர் ரஹிம் மற்றும் முமதுல்லா ஆகியோர் கைகொடுத்து அணியை கெளரவ நிலைக்கு இட்டுச் சென்றனர்.

அவ்வணி சார்பாக அன்முல் ஹக் 44 ஓட்டங்களையும், முஸ்பிகுர் ரஹிம் 24 ஓட்டங்களையும், முகமதுல்லா ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியாவின் பந்துவீச்சு சார்பாக அமிற் மிஷ்ரா 3 இலக்குகளையும், ரவிச்சந்திரன், அஸ்வின் 2 இலக்குகளையும், புவனேஸ்வரகுமார், முகமட் சமி ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.

அடுத்து 139 என்ற இலகுவான வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி றோகித் சர்மா, விராட் ஹோக்லி ஆகியோரின் அதிரடி அரைச்சதங்களின் உதவியுடன் 18.3 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அவ்வணி சார்பாக ரோகித் சர்மா 56 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததோடு விராட், ஹோக்லி 57 ஓட்டங்களுடனும் மகேந்திரசிங் டோனி 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பங்களாதேஷின் பந்து வீச்சில் மோட்ரஷா அல் அமின் ஹோசைன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.

இந்த போட்டியின் ஆட்டநாயகனாக ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவு செய்யப் பட்டார். இவ் வெற்றியின் மூலம் அரையிறுதியில் விளையாடுவதற்கான வாய்ப்பை உறுதிசெய்தது இந்திய அணி.

(த-400)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Batch1: 29.03.2014
Batch2: 31.03.2014
Batch3: 05.04.2014
Batch4: 07.04.2014

Vacancy for Accountant
Qualifications, skills and Experience :
* Part Qualification in HNDA/CIMA/ACCA.
* Previous Experience of minimum 3 years experience in similar capacity will be a advantage.
* between 25 - 40 Years.
* Required to be IT / Computer Literacy.
* Experience in handling taxation and knowledge of Accounting software is an added advantage.
Interview on Monday - 31.03.2014
ANDRA Digital Image
379/167, Kasthuriyar Road, Jaffna.
0777481696 / 0776622981 / 0217200000





அருட்பணி போல் றொபின்சன் அடிகளாரால் நடத்தப்படும்
தவக்கால தியானங்களும், குணமாக்கல் வழிபாடுகளும்
ஏப்ரல் 03 வியாழன் : 5மணி முதல் 8 மணிவரை
புனித செபமாலை அன்னை ஆலயம், கொழும்புத்துறை.

ஏப்ரல் 04, வெள்ளி
காலை 6.30 மணிமுதல் 9.30 மணிவரை
புனித பேதுருவானவர் ஆலயம், நவாலி
முற்பகல் 10.00 மணி முதல் 12.30 மணி வரை
யாழ். இறை தியான இல்லம் மாலை 5 மணி முதல் 8 மணிவரை புனித அந்தோனியார் ஆலயம், பாஷையூர்

ஏப்ரல் 05, சனி
காலை 6.30 முதல் 9.30 மணி வரை
புனித யாகப்பர் ஆலயம், இளவாலை
மாலை 5 மணி முதல் 8 மணி வரை
புனித சவேரியார் ஆலயம், புங்குடுதீவு

ஏப்ரல் 06, ஞாயிறு
காலை 6.30 மணி முதல் 8 மணிவரை
திருப்பலி : புனித செபமாலை அன்னை ஆலயம், கொழும்புத்துறை
காலை 9 மணி முதல் 12 மணிவரை இளைஞர் யுவதிகட்கு
புனித அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம்.

வழிபாடுகள் அனைத்தும் திருப்பலியோடு நிறைவு பெறும்.
தவக்காலத்தில் மனமாற்றம் காணவும் உடல், உள, ஆன்மிக ஆரோக்கியம் பெறவும் தேவையான இறை அருளைப்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்தியா சாளக்குடி டிவைன் தியான இல்லத்திலிருந்து வருகை தருகின்ற குழுவினருடைய தவக்காலத்தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதிவரை யாழ். இறைதியான இல்லத்திலும் ஏனைய இடங்களிலும் நடைபெறவுள்ளன. இவ்வழிபாடுகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இறை தியானக் குழுவினர், ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகிறோம் CONGRATULATIONS
யாழ் வரலாற்றில் முதல்முறையாக திருமணமாகி U.K செல்வோருக்கான A1 பரீட்சைக்கு எமது நிறுவனத்தின் இரு கிளைகளிலிருந்தும் முதல் தடைவையாக தயார் செய்யப்பட்டு தோற்றிய
அனைத்து மாணவர்களும் 100% சித்தியுடன்
FIRST CLASS PASS இனை
பெற்றுக்கொண்டதையிட்டு பெருமையுடன் பாராட்டுகின்றோம்.
FOR FIRST CLASS ENGLISH BCLL
A1, SPOKEN ENGLISH, IELTS புதிய பிரிவுகள் 30.03.2014 ஆரம்பமாகின்றன.
தரமான கல்வியை திறமையாக வழங்கும் ஒரே நிறுவனம்
BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING
23, பலாலி வீதி, யாழ்.
181, பிரதான வீதி, நெல்லியடி
(C/12974) (10.6)
021 373 4121
0771 327 818

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.